ஜெய்ப்பூர் கால் திட்டம்
யாழ்ப்பாணம்.

# இரண்டாவது ஆண்டு நிறைவு மலர்

FRIEND IN NEED SOCIETY
JAFFNA BRANCH

ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலை
JAIPUR FOOT WORK SHOP

இவர்கள் வாழ்வும் இனிதே அமைக

இல. 5, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

01-07-1989

## ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலையின்
# நிர்வாகசபை உறுப்பினர்கள்

| | |
|---|---|
| திட்ட தலைவர்: | திருமதி தேம்பா குணநாயகம் |
| உப தலைவர்: | திருமதி E. R. மேதர் |
| திட்ட செயலாளர்: | டாக்டர் திருமதி ஜெயா கணேஷமூர்த்தி |
| உப செயலாளர்: | திருமதி சோதிராஜா |
| பொருளாளர்: | டாக்டர் திருமதி ஷெங்கி தெய்வேந்திரன் |

★

அன்னையர் முன்னணியை நிர்வகிக்கும் அங்கத்தவர்கள்

திருமதி லங்கா சிவராமலிங்கம்

திருமதி ஆனி ஞானப்பிரகாசம்

★

ஆலோசனை வழங்குவோர்

தலைவர்: திரு. S. சோதிராஜா

(உதவி திட்ட இணைப்பதிகாரி, றெட்பானு)

★

டாக்டர் S. பொன்னம்பலம்

(சத்திர சிகிச்சை நிபுணர், போதனு வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.)

டாக்டர் R. தெய்வேந்திரன்

தலைவர், யாழ் செஞ்சிலுவைச் சங்கம்

திருமதி S. கைலாசபதி

பிள்ளை பாதுகாப்பு நிதி உதவித்திட்ட இணைப்பதிகாரி

திரு. S. உருத்திரலிங்கம்

அதிபர், சமூக சேவை, ரோட்டரிக் கழகம்

திரு. K. C. சிவமகராஜா

தலைவர், ப. நோ. கூ. ச. தெல்லிப்பளை

திரு. M. ஜெபராஜா

அதிபர், தொழில் நுட்பக் கல்லூரி, வட்டுக்கோட்டை

திரு. Q. A. D. மேதர்

டாக்டர் R. கணேஷமூர்த்தி

★

தொழிற்சாலைக்கு தரிசனம் செய்யும் வைத்திய கலாநிதிகள்

பேராசிரியர் V. கருணாநாதன்

டாக்டர் V. கிறிஷ்ணராஜா


டாக்டர் ஜெயமனோகரன்

டாக்டர் S. செல்வகுமாரன்


டாக்டர் S. சண்முகலிங்கம்



திருமதி. சுவர்ணு பேர்டினன்ட் அவர்கள் தொழிலகத்தை வைபவரீதியாக திறந்து வைக்கும் பொழுது உரையாற்றுவதையும்; இடமிருந்து வலமாக ரீ. யோகநாதன் திருமதி E. R. மேதர் தொழிலகத்தலைவி, திருமதி தே. குணநாயகம் அவர்களும் அமர்ந்திருக்கின்ருர்கள்.



ஜெய்ப்பூர் பாதத்தை நிர்ணயித்த பிதா எனக்கருதும் டாக்டர் P. K. சேத்தி அவர்கள் எமது 1 வது ஆண்டு நிறைவு மலரை ஜெய்ப்பூர் நகரில் அவரது இல்லத்தில் பார்வையிடுகின்ருர்.



மேன்மை தங்கிய பிரித்தானி அதிகாரியும் அவர் குழுவினரும் எமது தொழிலகத்திற்கு விஜயம் செய்த பொழுது.

இடமிருந்து வலம்: டாக்டர் திருமதி கணேஷமூர்த்தி, திருமதி மேதர், திரு. கிளாஸ்டன் அவர்கள், திருமதி குணநாயகம், டாக்டர் திருமதி தெய்வேந்திரன்



பிள்ளைப் பாதுகாப்பு நிதி உதவித்திட்ட இணைப்பதிகாரியும் (U.K) சுகாதாரத்திட்ட இணைப்பதிகாரியும், எம் நாட்டு றெட்பாணா பிரதிநிதியும், யாழ் பிரதிநிதிகளுடன் எம் தொழிற்சாலைக்கு விஜயம் செய்த பொழுது

# எமது நன்றிகள்

எமக்கு உறுதுணையாக இருந்து ஊக்குவித்து எம் திட்டத்திற்கு உதவிகள் அளித்த நிறுவனங்கள் தூதரகங்கள், அன்பர்கள் யாவருக்கும் எமது உளங் கனிந்த நன்றிகளைத் தெரிவித்து, ஒரு சிலரைக் கீழே குறிப்பிட்டுள்ளோம்.

1. கொழும்பு நட்புறவுச் சங்க செயலாளர் திருமதி. சுவர்ண பேர்டினன்ட் அவர்களும், அவரது சக உத்தியோகஸ்தர்களும்.

2. சிறுவர் பாதுகாப்பு நிதியம் (U.K), மந்திகை வைத்தியசாலையின் சேவையிலீடுபட்டிருக்கும் பிரான்சு தேசத்து M.S.F. வைத்தியர்குழு, சுவீடன் நாட்டைச் சேர்ந்த டையக்கோனியா, அவுஸ்திரேலியா தூதரலாயம்

3. வைத்திய கலாநிதிகளான டாக்டர் S. பொன்னம்பலம், டாக்டர் R. கணேஷமூர்த்தி, டாக்டர் R. தெய்வேந்திரன்.

4. யாழ் செஞ்சிலுவைச் சங்கம், இந்திய செஞ்சிலுவைச் சங்கம்

5. ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் (தெல்லிப்பளை, நல்லூர்)

6. தொழிற்சாலைக் கூரையைப் புனரமைக்க உதவிய சிறீலங்கா அஸ்பெஸ்ரஸ் தொழிலகம்.

7. கொழும்பிலிருந்து இலவசமாகப் பொதிகளை எடுத்துவரும் S.P.S ராண்ஸ்போட்டர்ஸ்

8. பரியோவான் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் வியோகழகம், சமூகசேவைக் கழகம்

9. எமது முகாமையாளரின் மூன்று வார கால ஜெய்ப்பூர்ப் பயிற்சிக்கு வேண்டிய செலவை அளித்த யாழ் றோட்டறிக் கழகம்,

10. உள்ளூர்ப் பத்திரிகைகள் (உதயன், முரசொலி) எமது கணக்காளராகிய போட் றேட்ஸ் அன்ட தொண்டன் இலவச சேவையை எமக்கு அளித்தமைக்காக அவர்களுக்கும்

11. அட்டைப்படம் தயாரித்த திரு. A. சந்திரலிங்கம் அவர்களும் எமக்கு விளம்பரங்கள் கொடுத்த அன்பர்களுக்கும் 1ம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகளுக்கு பரிசில்கள் வழங்கிய அன்பர்கள் ஈற்றில் குறுகிய காலத்தில் திறம்பட மலரை உருவாக்கித் தந்த ஸ்ரீ லக்ஷ்மி அச்சகம்.

நன்றி.

ஜெய்ப்பூர் செயற்கைக்கால்
தொழிற்சாலை நிர்வாகக் குழு

# யாழ். அன்னையர் முன்னணித் தலைவியாரினதும் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் திட்டத்தின் நிர்வாகக்குழுத் தலைவியாரினதும் செய்தி



யாழ்ப்பாணத்திலுள்ள ஜெய்ப்பூர் பாதத்தொழிற் சாலையின் இரண்டாவது ஆண்டைப் பூர்த்திசெய்துள்ளோம். இதற்கு ஒரு வருடத்திற்கு முன் எம்மிற் சிலரின் கடின உழைப்பினால் எமது ஸ்தாபனத்தை நிறுவக் கூடியதாக இருந்தது. கொழும்பிலுள்ள "சமூக நலன்களின் நண்பன். என்னும் நிறுவனத்தின் செயலதிபரான திருமதி சுவர்ணு பேடினன்ட் அவர்கள் வடக்கில் உள்ள எமக்கு விசுவாசமான அன்பும் விருப்பும் மீதூர நோருட், ஹட்சிசன் அவர்களுடன் எங்களை அறிமுகப் படுத்தியதற்கு நாங்கள் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். வடக்கிலே இத்தொழிற்சாலையை நிறுவுவதற்கு அவர் எங்களுக்கு அளித்த மகத்துவமான ஆதரவிற்கு நாம் அவருக்கு எமது நன்றியையும் அன்பையும் செலுத்தக் கடப்பாடுடையவர்களாக இருக்கின்றோம். எமக்கு ஆதரவு நல்கிய DIAKONIA (டையக்கோனியா), SWEDEN (சுவீடன்), ஐக்கிய இராச்சியத்திலுள்ள சிறுவர் பாதுகாப்பு நிதி நிலையம், பருத்தித்துறையிலுள்ள பிரான்சு வைத்தியக்குழுவினர் ஆகியோருக்கும் குழுவினர் ஆகியோருக்கும் நன்றி உடையவர்களாக இருக்கின்றோம். எமது ஆரம்ப செயற்றிட்டத்திற்கு நன்கொடை வழங்கும் உள்நாட்டு, வெளிநாட்டு நண்பர்களுக்கும் பிள்ளைகளுக்கும் மதிப்பளிப்பதோடு நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். இவ்வாறான உதவிகள் காரணமாக வேறு பொருட்களின் விலைவாசிகள் அதிகரித்துள்ள போதிலும் ஒரு ஜெய்ப்பூர் பாதணியை ரூபா ஆயிரத்திற்கு கொடுக்கக் கூடியதாக இருக்கின்றது.

எங்களுடைய இத்திட்டம் பலவெளிநாட்டுத் தூதராலயங்களாலும் தனித்துவமான மதிப்பும் பாராட்டுதலும் பெற்றிருக்கின்றது. எமது அடுத்த நடவடிக்கை யாதெனில் எமது தொழிற்சாலையை நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் விஸ்தரித்துச் சிறுபிள்ளைவாத நோயாளிகளுக்கும் நரம்பு சம்பந்தமான வேறு நோய்களால் பாதிக்கப்பட்டோருக்கும் பொருத்தக்கூடிய ஒரு நிறுவனத்தை அமைப்பதாகும். இவ்வருடம் 8 கை அவயவங்களைப் பொருத்தியுள்ளோம். மேலும் மேலும் எங்களிடம் பதிவு செய்த அனைவருக்கும் இவற்றைப் பொருத்த எண்ணியுள்ளோம். இவ்வாறு பொருத்தும் அவயவங்களை இந்தியாவில் இருந்து பெறவேண்டியுள்ளது. இதற்கு இலங்கை பணம் ரூபா 5000 செலுத்த வேண்டியுள்ளது. இது ஓர் அலங்காரப் பொருளின் விலை போன்று அதிகம் பயனற்றதாக உள்ளது. இங்கு வரும் அங்கவீனச் சிறுவர்க்கு இதனைப் பொருத்துவதோடு எம் தொழிலகம் அங்கங்களை மட்டுமன்றி அவர்களுக்கு அகமகிழ்வையும் ஏற்படுத்துகின்றது.

எதிர்வரும் ஆடி முதலாந் திகதி எமது இரண்டாண்டு நிறைவு விழா நடைபெறவுள்ளது. இதுவரை எம் நிறுவனம் 237 ஜெய்ப்பூர் அங்கங்களைப் பொருத்தியுள்ளது. வெளியாரின் ஆர்வத்தாலும் இயற்கை அங்கம் போன்று வசதியாகக் குறைந்த செலவில் உற்பத்தி அங்கங்களைப் பொருத்தும் இத்திட்டத்தைத் தொடரலாம் என நாங்கள் நம்புகின்றோம். பணவசதியற்ற சகோதர சகோதரிகளுக்கு வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் உள்ள ஜீவகாருண்ணியம் படைத்தோர் நிதி உதவ முன்வந்துள்ளனர். குறைந்த உற்பத்திச் செலவினால் பலர் பயனடையக் கூடியதாகவுள்ளது.

டாக்டர் பி.கே. சேதியும் அவரது குழுவினரான பேராசிரியர் காசில்வால், ராம் சந்திரவர்மா முதலியோரும் ஜெய்ப்பூர் தொழிற்சாலைக்கு வேண்டிய தொழில்நுட்ப உதவி யனைத்தையும் வழங்கினர். அவர்களது உதவி மனித இனத்திற்கு வழங்கிய முன்னேற்ற நன்மைகளில் ஒன்றாகும். கொழும்பில் 6 மாதப் பயிற்சி பெற்ய இரண்டு வலது குறைந்த இளைஞர்களுடனும் தொழில்நுட்பப்பயிற்சியைக் கொழும்பில் பெற்ற ஒரு முகாமையாளருடனும் எமது முயற்சியை ஆரம்பித்தோம். யாழ்நகரில் சுண்டிக்குளியில் ஒரு வீட்டை வாடகைக்குப் பெற்றோம். சிறுதிருத்தங்களும் மாற்றங்களும் செய்து ஐந்து படுக்கைவசதிகள் கொண்ட ஒருவிடுதியை அமைத்தோம். அங்கவீனர்களுக்குச் செயற்கைக்கால் பொருந்தும் பணி நடைபெற்றது. இக்காலத்து முகாமையாளராகப் பணிபுரிந்த பிரான்சிஸ் அவர்கள் ஜெய்ப்பூர் சென்று மூன்று வாரத்தில் துரித பயிற்சியைப் பெற்று மீண்டும் வந்து இங்கு புதிய நோக்குடன் பணிபுரிகின்றார் என்பதை மகிழ்வுடனும் பெருமிதத்துடனும் நேயர்களுக்கு அறிவிக்கின்றோம்.

தேசியமட்டத்தில் இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற அரும்பணிபுரிந்து சகல துறைகளிலும் ஒத்துழைப்பு நல்கிய நிர்வாகக்குழுவினர்க்கும், ஸ்தாபன ஊழியர்களுக்கும் சுண்டிக்குழி வியோகழக பிள்ளைகளுக்கும் எமது விசுவாசத்தையும் இதயம் கலந்த நன்றியையும் தெரிவிக்கின்றோம்.

நிறுவனம் இயங்க ஆரம்பித்த காலத்தில் பல அங்கவீனர்கள் இருந்தமையால் மனம் தளர்ந்து செயலிழந்த குடும்பத் தலைவர்களுக்கும் மாணவர்களுழகும் பாதணிகள் பொருத்துவதில் முன்னுரிமை வழங்கினோம் அவர்கள் ஜெய்ப்பூர்கால் பொருத்தப்பட்டு வீடு திரும்பும்போது புன்சிரிப்புடன் ஒளிமயமான எதிர்காலத்தை காணும் அவாவுடன் எவர் உதவியுமின்றி நடந்து செல்வதைக் காணும் நாம் அனைவரும் புளகாங்கிதம் அடைகின்றோம்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் திங்கட்கிழமைகளில் வருமாறு பணிக்கப்படுகின்றனர்; அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு படுக்கையும் சிறுஅலுமாரியும் வழங்கப்படுகின்றன. உணவும், தங்குமிட வசதிக்குமாக குறைந்த கட்டணமே அறவிடப்படுகின்றது. அத்தோடு அங்கவீனர்களின் தேவைகளைக் கவனிக்க ஒரு தாதியும், நீரிழிவு நோயாளருக்கு ஊசிபோட ஒரு தாதியையும் அமர்த்தியுள்ளோம். இங்கு சாதி மத இனபேதமின்றி எல்லோரையும் சமமாக மதித்து சம பங்களிப்புச் செய்யப்படுகின்றது. அங்கவீனர்களின் எதிர்காலத்தையும் அவர்களின் புனருத்தாரணத்தையும் கருத்திற்கொண்டு ஜெய்ப்பூர் செயற்கை அவயவ பாவனையாளர் சங்கம் ஒன்றையும் ஆரம்பித்துள்ளோம். அங்கவீனர்களெல்லோரும் வாழ்க்கை நீரோட்டத்தில் பங்குபற்றக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தைப் பெறவேண்டுமென்பதே எங்கள் பெரு விருப்பாகும்.

வணக்கம்

# யாழ். அன்னையர் முன்னணியின் புனர்வாழ்வு முயற்சிகள்

தற்போதுள்ள சூழ்நிலையில் புனர்வாழ்வையே முக்கிய அம்சமாகக் கொண்டுள்ளோம். எமது தாயகத்தில் அனேகமானோர் விதவைகளாகவும், அனாதைகளாகவும், அங்கவீனர்களாகவும் ஆக்கப்பட்டுள்ளனர்.

அன்னையர் முன்னணியினால் ஆரம்பிக்கப்பட்ட ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலை ஈராண்டு பூர்த்தியை நெருங்கும் இவ்வேளையில் 237 கீழ் அங்கங்களை இழந்த அங்கவீனர்களுக்கு செயற்கைக் கால்களையும், மேல் அங்கங்களை இழந்த 8 நபர்களுக்கு 8 செயற்கை கைகளையும் பொருத்தியதோடு, கால்கள் செயல் இழந்த ஐந்து நபர்களுக்குக் கலிப்பர்களையும் தயாரித்து இவர்களைச் சமூகத்தில் சாதாரண மக்களைப்போன்று ஆக்கியுள்ளது. இச்சாதனை எமது அன்னையரின் மாபெரும் வெற்றியாகும்.

இப்படிப் புனரமைக்கப்பட்ட ஒருசில நபர்களுக்கு மனிதாபிமான முறையில் அவர்களின் குடும்ப வாழ்க்கையைக் கொண்டு நடாத்தக் கோழிப் பண்ணைகளை ஆரம்பிப்பதற்கு வேண்டிய முற்பணமும், மரக்கறி, தேங்காய் வியாபாரங்கள் செய்வதற்கு வேண்டிய பணமும், மேலும் தையல் மெஷின் போன்றனவும் கொடுத்துதவியுள்ளோம்.

சென்ற முதலாம் வருட நிறைவு விழா அன்று செயற்கை அங்கங்கள் பொருத்தப்பட்டோரின் சங்கம், திரு. S. P. பாலசிங்கம் அவர்களைத் தலைவராகவும், திருமதி சிவசிதம்பரம் அவர்களைக் காரியதரிசியாகவும் கொண்டு செயற்கை அங்கம் பொருத்தியவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது, தற்சமயம் இவர்களது நற்பணிக்கு உலகதரிசனம் பணஉதவி செய்யவந்த வேளையில் துரதிஷ்டவசமாகத் தலைவர் பாலசிங்கம் அவர்கள் விபத்துக்குள்ளாகி திரும்பவும் இன்னும் சில மாதங்களுக்கு ஓய்வுபெற வைத்துவிட்டது. உலகதரிசன உதவியின் பிரகாரம் சிறுகைத்தொழிலை ஆரம்பிக்க முடியுமானோர் விண்ணப்பித்தால் முதல் 20 நபர்களுக்கு ரூபா 5,000 தொட்டு 2,000 குறையாமல் கொடுத்து உதவ உத்தேசித்துள்ளது. 6 மாத காலத்தின் பின் எதுவித வட்டியுமின்றி தொகைக்கு ஏற்றவாறு திருப்பிக் கொடுக்கவேண்டும். இதன் பிரகாரம் மற்றையோரும் பயன்பெற இடம் உண்டு. புனர்வாழ்வு விடயமாக வெளிநாடு சென்றிருந்த எமது முன்னாள் நிர்வாகக் காரியதரிசி அருட் சகோதரி லூட்ஸ் யோசவ் தாயகம் திரும்பியுள்ளதாகவும் அறிந்துள்ளோம். இவர் இப்பொறுப்பினை ஏற்று கூடியவிரைவில் நிறைவேற்றுவார் என்பதே எம் முழு நம்பிக்கை. இந்த ஒருநிறுவனத்தை மட்டும் 'நம்பியிராமல் எமது தொழிலகங்கள், வியாபார நிறுவனங்கள் ஏனையோர் எம்மால் புதுவாழ்வு கொடுக்கப்பட்டோருக்கு அவர்களது தகமைகளுக்கேற்ப வெற்றிடங்களில் வேலைகள் கொடுக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம். அரசாங்கத்தின் வேண்டுகோளின்படி மேலிடத்திலுள்ளோர் 3% வெற்றிடங்களை அங்கவீனருக்காக ஒதுக்கப்படல் வேண்டும். சமுதாயத்தில் இவர்களைத் தள்ளி வைக்காமல் எம்மோடு சமனாகக் கருதி இவர்களுக்கு வாழ்வளிக்கவும் வேண்டும். சென்ற ஆண்டு பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளும் பிரதான வீதியில் நடைபெற்ற சைக்கிள் ஓட்டப் போட்டிகளும் இவர்களின் வீரத்தையும் திறமையையும் எடுத்துக்காட்டின.

மேலும் அசம்பாவிதங்களினால் விதவைகளாக்கப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்து அவர்களைப் புனரமைக்க ''கைக்குத்து அரிசிமா'' தொழிற்சாலையை உருவாக்கி உற்பத்தியைக் கொழும்பு பனம்பொருள் அபிவிருத்தி சபை வியாபார நிலையமான ''கற்பகத்தில்'' அறிமுகப்படுத்தி விற்பனைக்கு விட்டு பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்துள்ளோம். இப்படிப்பட்ட சாலைகள் யாழ்ப்பாணத்தில் பல மாவட்டங்களிலும் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அத்தோடு வெளிநாட்டிலுள்ளோரிடம் எமது அனாதைக் குடும்பங்களை அறிமுகப்படுத்தி அவர்களுக்கு உதவி சம்பந்தமாக நேர்முகமாய்த் தொடர்பு கொள்ளச் செய்துள்ளோம். இத் திட்டங்களெல்லாம் ஒளிபோல் பிரகாசித்து வளம்பெற பொதுமக்களின் ஒத்துழைப்பும் உதவியும் இன்றியமையாதன.

**திருமதி E. R. மேதர்**
உப தலைவி
ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

சிறு சிறு தொந்தரவுகள் ஏற்படினும்
சிலர் அமைதி குலைந்து ஆத்திரப்படுகிறார், ஆனால்
மனம் பரிசுத்தமடைந்து கட்டுப்படுத்தப்படின்
எந்த நிலைமையையும் எதிர்நின்று, அமைதியாக இருக்கலாம்.

— சுவாமி இராமதாஸ்

# யாழ் வாசிகளுக்கு எனது அன்பு வாழ்த்துக்கள்

ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலை யாழ்கிளையின் ஈராண்டுப் பூர்த்திக்கான வாழ்த்துச் செய்தியையிட்டு நான் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

யாழ்நகரில் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலை ஒன்றை உருவாக்கிய அன்னையர் முன்னணியினர் நொருட் ஸ்தாபனத்திடம் கோரியிருந்தனர். இவ்விண்ணப்பத்தை திரு H. D. ஹட்சிசன் அவர்கள் கொழும்பு நட்புறவுச் சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில் சமர்ப்பித்தபொழுது ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பவம் என்மனதுக்கு வருகிறது. 1986 ம் ஆண்டு மார்கழி மாதம் நொருட் ஸ்தாபனத்திற்காகச் செயற்கைக்கால் தொழிற்சாலை ஒன்றை இங்கு அமைப்பதற்கு வேண்டிய தகுதிகளை கண்ணுற வந்த எனது யாழ். விஜயத்தை நினைவு கூருகிறேன். மார்கழி மாதம் 6ம் திகதி யாழ். Y. M. C. A. மண்டபத்தில் நடந்த பொதுக் கூட்டத்தைத் தொடர்ந்து இக் கிளை சற்றும் பின்வாங்கவில்லை. எனது விஜயத்தின் அறிக்கையும், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அறிக்கையையும் H. D. ஹட்சிசன் அவர்களுக்கு சமர்ப்பித்தபொழுது உடனடியாக தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்தார்.

இத்திட்டத்திற்கு முதுகெலும்பாயிருந்த அருட் சகோதரி ஜோட்ஸ் யோசவ் அவர்களை குறிப்பிட விரும்புகிறேன் இந்த சிறிய அழகிய முகத்தைக் கொண்ட உருவத்தில் மறைத்திருந்த வீரத்தையும், திறமையையும் அவரின் செயற்பாட்டின் பின்னரே அறிய வந்தேன். யுத்த சூழ்நிலையில் எண்ணற்ற மூறைகளில் யாழ் — கொழும்பு பயணத்தை, ஷெல் தாக்குதல், நிலக்கண்ணிவெடிகள் மத்தியில் தனது உயிரைப் பல தடவைகளில் மயிரிழையில் தப்பி இங்குவந்து தூதரகங்கள், அலுவலகங்களிலுள்ள உத்தியோகஸ்தர்களைச் சந்தித்து, சம்பாஷித்து, இறுதியில் யாழ் கிளைக்கு வேண்டிய பொருட்களை லொறிகளில் ஏற்றி அதன் பாதுகாப்பிற்காக அதிலேயே பிரயாணம் செய்யவும் துணிந்தமை வீரச் செயலாகும். நொருட் ஸ்தாபனத்தின் முழுநம்பிக்கை இவரின் செயற்பாட்டிலேயே தங்கியிருந்ததென்பதை உறுதியாகக் கூறவிரும்புகிறேன்.

நொருட் ஸ்தாபனத்தின் 250,000/- ஒதுக்கீடு இந்த தொழிற்சாலையின் 5 வருடகுத்தகை வாடகை, கட்டிடப் புனரமைப்புக்கள், உதிரிப்பாகங்கள், மூலப்பொருட்கள், இயந்திரங்கள், தொழில்நுட்பவியலாளரின் ஆறுமாத கால கொழும்புப் பயிற்சிச் செலவுகள் முகாமையாளரின் பயிற்சிச் செலவுகள் யாவும் மேற்கொண்டு எம்மிடம் 100,000/- ஒருவருடகால நடாத்துச் செலவுக்கென ஒதுக்கப்பட்டிருந்தது.

இக்கிளைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் யுத்தசூழ்நிலையில் தங்கள் உயிர்களையும் பேணுமல் யுத்தத்திஞல் அதிகரித்து வந்து கொண்டிருந்த தங்கள் உடன்பிறப்பின் நலன் கருதி மேற்கொண்ட தியாகங்களை கஷ்டங்களை நாம் கண்ணுற்ருேம். மாபெரும் இக்கட்டில் துளிர்த்து வளர்ந்த இக்கிளை உறுப்பினர்களின் சேவை மனப்பான்மையும், பணியும் கொழும்பில் எம்மவர்க்கு எடுத்துக்காட்டாக இருந்தது.

யுத்தத்தை கண்ணீரால் மேற்கொண்ட அன்னையர் முன்னணியின் சக்தி வாய்ந்த தலைவியுமான திருமதி தேம்பா குணநாயகம் அவர்கள் இத்திட்டத்திற்குத் தலைமைதாங்கி அளவுகோலை நேரேபிடித்து சாதி, மத, மொழி பேதமின்றி எம் குறிக்கோள்களுக்கேற்ப இத்திட்டத்தை நடாத்திச் செல்கின்ருர், உபதலைவி திருமதி E. R. மேதர் அவர்கள்

உகந்தவர். சகலவிதத்திலும் அவருக்கேற்றவராவர். செயலாளர் திருமதி ரீனி யோக நாதன் வீரமும் சுறுசுறுப்புமுடையவர். அணுவின் சக்தியைப் போன்றவர். இத் திட்டத்தின் செயற்பாட்டை தகுந்த முறையில் எடுத்துக் காட்டியவர். இவரின் செயல்பாடு யாழ் மக்களைக் கவர வைத்தது. ஆனல், குறுகிய சேவையின்பின் வெளிநாடு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கும், இலங்கையருக்கும் ஒரு துர்ப்பாக்கியம் எனலாம்.

தனுதிகாரிகளாகிய டாக்டர் (திருமதி செங்கி தெய்வேந்திரனும், உதவியாள ராக டாக்டர் (திருமதி) ஜெயா கணேஷமூர்த்தி இருவரும் வேறுபாடான தொழில்களை செய்கிருர்கள். தனுதிகாரிகளாக நன்கு பணிபுரிந்து அதேசமயம் வருவாயையும் தேடிக் கொடுத்துள்ளார்கள். கால்பொருத்த வரும் அங்கவீனர்களுக்கு மருத்துவ கருமங்களையும் பூர்த்தி செய்கிருர்கள். மருத்துவமும் கணிதமும் வேறுபாட்டாலும் இவ்விரு அழகிய டாக்டர்கள் இருவரும் கருமங்களைத் திறம்பட நடாத்தி வருகின்ருர்கள். அவர்களது முன் மாதிரி எம்மைக் கவரவைத்தது.

அதே வேளையில் யாழ். வாசிகளையும், தொழிற் துறைகளையும், வியாபார நிலையங்கள், வர்த்தக நிலையங்கள், போக்குவரத்து ஏஜண்டுகள், மத சங்கங்கள், தனியார், வெளிநாட்டில் வேலை விடயமாகத் தங்கியிருப்போர் பல கஷ்டங்களின் மத்தியில் உதவி அளித்தமை பாராட்டுக்குரியது. யாழ். பத்திரிகைகள் இத் திட்டத்தை கருவில் இருந்து இன்று வரை பொதுமக்களுக்கு எடுத்துக் காட்டியதன் பயனக பொது மக்களின் உதவி கிடைக்கப்பெற்றது. இவ்வேளையில் இத் தொழிற்சாலையின் முதலாவது ஆண்டு உத்தியோக பூர்வத் திறப்பு விழாவைப் படம்பிடிக்க வந்த ரூபவாஹினி குழுவின் பின்னைய மறைவும் நினைவுறச் செய்கிறது.

இக்கிளையில் வேலை செய்யும் உன்னத ஊழியர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளேன். திறமைவாய்ந்த முகாமையாளரான திரு. X. S. Y. பிரான்சிஸ் அவர்கள் ஷெல் தாக்குதலிஞல் காயமுற்றும் தொழிற்சாலைப் பொறுப்பைக் கைவிடவில்லை. அங்க வீனத் தொழில் நுட்பவியலாளர்களான திரு. L. ஜோண்ஷன், திரு. ப. பரமகுமார் கொழும்புத் தொழிற்சாலையில் பயிற்சி பெற்றவர்கள். தட்டச்சாளரும், இலிகிதருமான செல்வி ராதிகா சோமசுந்தரம் அவர்கள் கொழும்பில் கீழ் அங்கம் பொருத்தப்பட்டவர். மேற்றன் உதவியாளர் இவர்கள் எல்லோரும் ஒரே குடும்பத்தைப் போன்றவர்கள், தொழிற் சாலையின் திறமை இவர்களின் செயற்பாட்டில் தங்கியுள்ளது.

இறுதியில் கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் சார்பிலும், நிர்வாகக் குழு சார்பிலும், தொழிலக உத்தியோகத்தர்கள் சார்பிலும், ஜெய்ப்பூர் கால் திட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் சார்பிலும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். கூடிய விரைவில் சமாதானம் உருவாகி, யாழ். கிளை சாதாரண சந்தர்ப்பங்களிஞல் மாத்திரம் அங்கங்களை இழக்க நேரிடும் நபர்களுக்குக் கால் பொருத்தவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுமென நான் எதிர்பார்க்கிறேன்.

திருமதி சுவர்ண பேர்டினன்ட்
செயலாளர்
கொழும்பு நட்புறவுச் சங்கம்,
கொழும்பு,

# ★ நற்றவம் ★

வன்செயலாய் திரிழிவால் காலிழந்து
முடமாகி வருந்தி வாழ்வே
துன்பமிகு சுமையாக, துவண்டு விழு
கின்றோரைத் தூக்கித் தாங்கி
அன்புமொழி பேசி, அவர் நடமாடக்
கால் கொடுக்கும் அரிய சேவைக்
கென்று நிலை யம்வைத்தீர்! நும்மிருதாள்
எந்நாளும் உச்சி வைப்போம்!

"காலிழந்தோம், என் செய்வோம்! எஞ்சியுள
வாழ்நாள் நம் கக்கத் தூன்று –
கோலிருக்கும், பிறர்தயவை எதிர்பார்த்தெம்
உடல், உள்ளம் குறுகிப் போகும்,
நாலுபத்துப் பேர் நடுவே நடமாட
முடியாத நாணந் தோன்றும்,
வேலையெதும் செய்கின்ற வாய்ப்பிழந்தோம்"
எனத்தவித்தோர் விடிவு கண்டார்!
சிற்றெறும்பாய், பொன் பொருள் எல்லாம் நாலு
திசையும் போய்த் தேடித்தேடிப்
பெற்றுறையுள் உணவாதி வசதியெலாம்
செய்தன் பாய்ப் பேணு கின்றீர்!
மூற்றுமுமை முடமானோர் துயர்துடைக்கும்
முயற்சிக்கே அர்ப்ப ணித்தீர்!
நற்றவந்தான் செய்கின்றீர் – நகருக்குள்
இருந்தபடி, ஞாலம் உய்ய!

நண்பர்களின் கழகத்துக் கிளையாக
யாழ்நகரின் நடுவே வந்தீர்!
துன்புறுவோர் இல்லாத சமுதாயம்
காண்பதற்குத் துணிந்தீர் வாழி!
அன்புநெறி இதுவென்றிவ் வுலகறிய
ஒருமுரசம் அறைந்தீர் வாழி!
என்புமிவர் பிறர்க்குரியர் எனுஞ்சொல்லுக்
கிலக்கணம் நீர், என்றும் வாழி!

– சோ. பத்மநாதன்

# செயலாளரின் அறிக்கை:

**ஆரம்ப வரலாறு:**

கடந்த சில வருடங்களாக நடக்கும் வன்முறைகளால் தமிழ்ச் சமுதாயத்தில் அநேகர் அங்கவீனர்களாகியுள்ளதைப் பலரும் அறிவார்கள். இத்துர்ப்பாக்கியம் ஏற்பட்டவர்களுள் சிலர் கொழும்பிலுள்ள ஜெய்ப்பூர் தொழிற்சாலையில் கால் பெறமுடிந்தாலும், அநேகரால் இவ்வாறு நிவாரணம் பெறமுடியவில்லை. இவர்கள் ஊன்று கோல்களையே பாவிக்க முடிந்தது. இவர்களில் கொழும்பிற்குப்போக வசதியற்றவர்கள்பலர். வசதியுள்ளவர்களுக்குக் கொழும்புப் பயணமோ கடந்த இரு வருடங்களில் மரணப் பயணமாகவே இருந்தது. ஊன்று கோல் களுடன் பல இடங்களில் இறங்கி ஏறுவதோ வேதனையாகவிருந்தது. இந்நிலையை அவதானித்த நம்மிற் பலர். ஜெய்ப்பூர் தொழிற்சாலை ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவ வேண்டுமென்ற சிந்தனையுடன் செயற்பட்டோம். நோர்வே நாட்டின் நோருட் ஸ்தா பனத்தின் அதிகாரியான திருவாளர். ஜோன் டாக் கக்சிசன் அவர்கள் 1986ம் ஆண்டு முற்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தபோது அவரிடம் எமது நிலையை விளக்கி னேம். இதன் பின்னல் அவரின் வேண்டுகோளில் கொழும்பு ஜெய்ப்பூர் தொழிற்திட்டத்தின் செயலாளரும் கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் செயலாளருமான திருமதி. சுவர்ண பேர்டிணன்ட் 1986இல் மார்கழி மாதம் ஆறும் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார்.

இவர் எம்முடனும், வேறு பலருடனும் கலந்தாலோசித்த பின்பு, இங்கு ஒரு தொழிற் சாலையை நிறுவுவதற்குத் தனது முழு ஒத்துழைப்பையும் சில ஆலோசனைகளையும் நல்கினர். தொழிற்சாலையைத் தாமதமில்லாது ஆரம்பிப்பதற்கு ஏதுவாக அன்னையர் முன்னணி யிலிருந்து ஜெய்ப்பூர் கால் வேலைத்திட்டக்குழுவொன்றை உருவாக்கலாமென்றும் இக்குழு கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் ஓர் அங்கமாகச் செயற்படலாமென்றும் ஆலோசனை கூறினர். எமது குழு பூரண சுதந்திரத்துடன் இயங்காலாமென்றும் அறிவுறுத்தினர். நோருட் ஆலோசகரும் இதையே விரும்பியதாலும் காலம் கழிவதை விரும்பாததாலும் நாம் இவர் களின் ஆலோசனையை ஏற்றுச் செயற்பட்டோம். நோருட் எமது திட்டத்தை ஆராய்ந்த பின் முதற்கட்ட உதவியாக இரண்டரை இலட்சம் ரூபாயைத் தந்துதவியது. கொழும்பு நட்புறவுச் சங்கம் எமக்கு வேண்டிய இயந்திரங்களையும் மற்றும் உபகரணங்களையும் தொழிலாளர்களுக்குப் பயிற்சியளித்தும் உதவியது.

இயந்திரங்களும், உபகரணங்களும் மிகவும் சிரமத்தின் மத்தியில் யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப்பட்டன. எமது தொழிற்சாலைக்கு ஏதுவான இடமொன்றைத் தேடி அலைந்த பொழுது, எமது கோப்பாய் முன்னள் பாராளுமன்ற அங்கத்தவரான அமரர். வன்னிய சிங்கம் அவர்களின் பாரியார். பழைய பூங்கா வீதியிலுள்ள வீட்டைத் தந்துதவினர்.

எமது தொழில் நுட்பவியலாளர்கள் பயிற்சி முடிவடைந்து வந்ததும், 1. 07. 1987 இல் தொழிற்சாலை இயங்க ஆரம்பித்தது. இக்காலகட்டத்தில் உலோகச் சேர்ப்புக்குத் தேவை யான வாயு சிலிண்டர்கள் யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரத் தடைபோடப்பட்டிருந்தது. இதனல் நாம் பின்வாங்காது எமது தொழில் முகாமையாளரின் மதிநுட்பத்தினல் நிவற் முறைமூலம் செயற்கைக்கால்களைத் தயாரித்தோம்.

1987 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பதினைந்தாம் நாள், திருமதி. சுவர்ண பேர்டினன்ட் அம்மையார் எமது தொழிற்சாலையை வைபவரீதியாகத் தொடக்கி வைத்தார். அந்நாள் தொட்டு இத்தொழிற்சாலை துரிதமாக இயங்கிவருகின்றது.

## தொழிற்சாலை ஊழியர்களைப் பற்றிய சில குறிப்புக்கள்:

### நிர்வாகச் செயலாளர்:

அருட் சகோதரி யோசப் அவர்கள் ஆரம்பகாலத்தில் எமக்குத் தேவையானவற்றை கொழும்பிலிருந்து தானே லொறிமூலம் கொண்டுவந்து சேர்த்தமை ஒரு துணிகரச் செயலாகும். அக்காலத்தில் கொழும்புப் பயணம் மிகவும் பயங்கரமானதாக இருந்தது. இவரின் சேவை எமக்குச் சொற்ப காலம்தான் கிடைத்தது. இது எமது துர்ப்பாக்கியமே. அருட்சகோதரி புனர்வாழ்வில் விசேட பயிற்சி பெறுவதற்காக வெளிநாடு சென்றுள்ளார்.

1988ம் ஆண்டு புரட்டாதி மாதம் தொடக்கம் ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகஸ்தரான திரு. S. சிவநாதன் அவர்கள் நிர்வாக செயலாளராகக் கடமையேற்றுள்ளார். இவருடைய வேலை அனுபவமும் முதிர்ச்சியும் எம் வேலைகளை மிகவும் திறமையாக நடத்திச் செல்ல உதவுமென எதிர்பார்க்கிறோம்.

### தொழிற்சாலை முகாமையாளர்:

திரு. ஸ்ரான்லி பிரான்சிஸ் அவர்களை நாம் நேர்முகப் பரீட்ச்சை மூலமாகத் தோந்தெடுத்தோம்- அவர் ஒரு மாதகாலம் கொழும்பு தொழிற்சாலையில் பயிற்சி பெற்றார். 1989ம் ஆண்டு பங்குனி மாதம் இவர் மூன்று வார கால மேலதிக பயிற்சிக்காக ஜெய்ப்பூர் சென்று பயிற்சி முடித்து வந்துள்ளார். இவரின் அனுபவமும், முதிர்ச்சியும், கடமையுணர்ச்சியும், வேலைத்திறனும், பிரயாசையும் எம்மை மிகவும் கவர்ந்துள்ளன. இவர் எம்முடன் இருக்கும்வரை நாம் கவலைப்படத் தேவையில்லை.

### தொழில்நுட்பவியலாளர்கள்.

திரு. எல். யோன்சன், திரு. பி. பரம்குமார் ஆகிய இருவரில் ஒருவர் போலியோ வியாதியினால் ஒரு காலின் செயலை இழந்தவர். மற்றவர் விபத்தினால் ஒரு காலை இழந்தவர். ஒருவர் ஜெய்ப்பூர் தொழிற்சாலையில் உருவாக்கப்பட்ட காலின் உதவியுடனும், மற்றவர் கலிப்பர்வின் உதவியுடனும் தமது அன்றாட வாழ்கையை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். இருவரும் மிகவும் கடமையுணர்ச்சியுள்ளவர்கள். மற்ற அங்கவீனர்களின் மனோநிலையை நன்கு புரிந்து சிறப்பாகக் கடமை செய்கின்றார்கள். இருவரின் மலர்ந்த முகமும் சேவை மனப்பான்மையும் எல்லோரையும் கவர்ந்துள்ளன.

### எழுதுவினைஞர்:

செல்வி ராதிகா சோமசுந்தரம் எமது தட்டச்சு வேலைகளையும், அலுவலக வேலைகளையும் கவனித்து வருகிறார். அவரின் துடிப்பான நடையிலிந்து அவரும் ஜெய்ப்பூர் காலுடன் நடமாடுகிறாரென்று புரிந்துகொள்ள முடியாது. இவரின் சேவையும் மிகவும் அவசியமானது. உதவியாளராகிய இ. சுரேஷ், பெண் மேற்பார்வையாளரான திருமதி கணேசபிள்ளை அவர்களின் சேவை மிகவும் மகத்தானது. சுரேஷ் விடுதிக்கும், தொழிற்சாலைக்கும் தேவையான பொருட்களை வாங்குவதிலும் சிரமம்பாராது செயற்படுவார். தற்போது தொழிற்சாலையிலும் உதவியாளராகப் பயிற்சி பெறுகின்றார். திருமதி கணேசபிள்ளை விடுதியிலிருப்பவர்களுக்கு உணவு சமைத்துக்கொடுப்பதைப் பொறுப்பேற்றுள்ளார்.

தாதிப்பயிலுனராகிய செல்வி P. டெல்சியா அவர்கள் சென்ற மார்கழி மாதம் தொட்டு எம் அங்கவீனருக்குத் தேவைப்பட்ட முதலுதவி, ஊசி போடுதல் போன்ற மகத்தான வேலைகளைத் தனது ஓய்வு நேரத்தில் சேவை மனப்பான்மையுடன் கடமை புரிகின்றார். எமது சேவையாளர்கள் எல்லோருமே ஒருமை மனப்பாண்புடன் தமது சேவையைச் செய்ததினாலேயே எமது தொழிற்சாலை ஓர்இனிய இல்லம் போல செயற்படுகின்றது.

எமது செயற்பாட்டின் நிறைவு:

நாம் இது காலவரை 237 செயற்கை கால்களேயும், 8 செயற்கைக் கைகளேயும் 5 நபர்களுக்கு அலுமினிய கலிபர்களேயும் தயாரித்து அளித்திருக்கிறேம். முழங்காலுக்குக்கீழே காலொன்று செய்வதற்கு 2500 ரூபா வரையும், மேற்கால் ஒன்றிற்கு 3000 ரூபா வரையும் செலவாளுலும், விண்ணப்பதாரர்களிடமிருந்து 1000 ரூபாவையே அறவிடுகின்றேம். பணம் கொடுக்க வசதியற்றவர்களுக்காக நன்கொடைகள் மூலம் இப்பணத்தைப் பெற நாம் உதவி செய்கின்றேம், முழுமையான புள்ளி விபரங்கள் வேறு அறிக்கையாக வெளியிடப்பட்டுள்ளன.

வருங்காலத்தில் கைகளே இழந்தோருக்கும், வியாதியால் கை கால்களின் செயல் இழந்தோருக்கும் உதவ முயற்சி எடுக்கின்றேம், உற்பத்திக்குத் தேவையான சகல பாகங்களே யும் எமது மண்ணிலே தயாரிக்கவும் முயற்சி செய்கின்கிறேம்.

நாம் மனம் தளராமல் செயற்பட்டு வருவதற்குப் பொது மக்களினதும் சேவை ஸ்தாபனங்களினதும் உதவியும் தூண்டுகோலாக விளங்கி வருகின்றன, இதற்கும் மேலாக தூய மனப்பாங்குடன் சேவை செய்யும் அனேவரது ஒத்துழைப்பும் எமக்கு உறுதுணையாக விளங்குகிறது. ஜெய்ப்பூர் கால் கிடைக்கப்பெற்றேரின் புன்சிரிப்பும் மலர்ந்த முகமும் எமது மனம் தளராது எப்பொழுதும் பாதுகாத்துக்கொள்ளும்.

இத்திட்டத்தைச் செயற்படுத்த உதவிய அனேவருக்கும் எமது நன்றி, ஆரம்பகாலத் தில் செயலாளராகக் கடமையாற்றிய திருமதி யோசுநாதனுக்கு நாம் நன்றி கூறுகின்றேம்.

இத்திட்டத்தின் நிர்வாகக் குழுவினரது ஒத்துழைப்பும். திருமதி பேர்டினன்ட் அம்மை யாரின் உற்சாகமூட்டலும், றெட்பார்ஞவின் திட்ட இணைப்பதிகாரியான திரு. சோதிராசா அவர்களின் உதவியும் பிள்ளேப்பாதுகாப்பு நிதியத்தின் நிவாரண உத்தியோகத்தர் திருமதி கைலாசபதி, திரு. பொன்னுத்துரை அவர்களின் உதவியும் எல்லாவற்றிகும் மேலாக அன்னேயர் முன்னணியினரின் ஒத்துழைப்பும், செயலாளரின் வேலேப் பழுவைக் குறைத் துள்ளன. சுருங்கக் கூறின் இத்திட்டத்திற்கு உதவிய எல்லோருக்கும் எனது நன்றி.

1 - 6 - 1989

டாக்டர் திருமதி ஜெ. கணேசமூர்த்தி

---

எந்த ஒருவனும் நன்னெறி நின்றெழுகி நல்லின்பத்தோடு வாழச் சிந்தனேயாலும் செயலாலும் கடமைகளேச் செய்யவேண்டும்.

— ரெய்லர்

வைகாசி மாதம் 31ந் திகதி 1989 ஆண்டு வரை

# ஜெய்ப்பூர் செயற்கை அங்கங்கள் பொருத்தியவர்களின் விபரங்கள்

## ஜெய்ப்பூர் செயற்கைக் கால்

### விபத்திற்கான காரணங்கள்

| | | |
|---|---|---|
| துவக்குச்சூடு | — 15 | நபர்கள் |
| ஷெல் விபத்து | — 39 | ,, |
| மிதி வெடி | — 42 | ,, |
| புகையிரத வீதி விபத்துக்கள் | — 38 | ,, |
| நீரிழிவு நோய் | — 41 | ,, |
| குஷ்டம் | — 5 | ,, |
| Gangrane | — 19 | ,, |
| இயந்திர (கை)த் தொழில் சம்பந்தமான விபத்துக்கள் | — 8 | ,, |
| உயரத்திலிருந்து தவறி விழுந்தமையால் ஏற்பட்ட விபத்துக்கள் | 5 | ,, |
| வாள், கத்தி வெட்டுக்கள் | 4 | ,, |
| பிறப்பில் கால் இல்லாமல் பிறந்தவர்கள் | 2 | ,, |
| புற்றுநோய் | 3 | ,, |
| புயல் காற்றினல் கால் இழந்தவர்கள் | 2 | ,, |
| பாம்புக்கடி | 2 | ,, |
| வனவிலங்குகளினுல் தாக்கப்பட்டவர்கள் | 1 | ,, |
| | 226 | |

### மாவட்ட ரீதியில்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 176 |
| மட்டக்களப்பு | 19 |
| கிளிநொச்சி | 13 |
| மன்னுர் | 3 |
| வவுனியா | 8 |
| முல்லைத்தீவு | 3 |
| திருகோணமலை | 3 |
| பதுளை | 1 |
| | 226 |
| மீண்டும் 2வது கால் பூட்டியவர்கள் (யாழ்ப்பாணம்) | 11 |
| | 237 |

### ஜெய்ப்பூர் செயற்கைக் கால்களின் வித்தியாச வேறுபாடுகள்

| | |
|---|---|
| முழங்காலுக்கு கீழ் | 148 |
| முழங்காலுக்கு மேல் | 73 |
| இரு கால்களையும் இழந்தோர் | 5 |
| வளர்த்தியில் மீண்டும் கால்களை செய்தோர் | 4 |
| மேலதிக கால்கள் | 7 |
| | 237 |

### பால்

| | |
|---|---|
| பெண்கள் | 36 |
| ஆண்கள் | 190 |

### வயதெல்லை

| | | | |
|---|---|---|---|
| 1 | — 10 | : | 8 |
| 11 | — 20 | : | 31 |
| 21 | — 30 | : | 34 |
| 31 | — 40 | : | 50 |
| 41 | — 50 | : | 42 |
| 51 | — 60 | : | 42 |
| 61 | — 70 | : | 18 |
| 71 | — 80 | : | 1 |
| | | | 226 |

# ஜெய்ப்பூர் செயற்கைக் கை

**விபத்திற்கான காரணங்கள்;**

| | |
|---|---|
| ஷெல் விபத்து | — 4 |
| பிறப்பில் | — 3 |
| துவக்குச் சூடு | — 1 |

**வயதெல்லை**

| | | | |
|---|---|---|---|
| 11 | — 20 | : | 1 |
| 21 | — 30 | : | 5 |
| 31 | — 40 | : | 1 |
| 41 | — 50 | : | Nil |
| 51 | — 60 | : | 1 |

**பால்**

| | | |
|---|---|---|
| ஆண்கள் | — 6 | யாழ்ப்பாணம் |
| பெண்கள் | — 2 | |

**கலிபர் கால்கள்**

| | | |
|---|---|---|
| பெண்கள் | — 2 | (யாழ்ப்பாணம்) |
| ஆண்கள் | — 3 | |

தொகுப்பு;
**செல்வி ராதிகா சோமசுந்தரம்**
**திரு. எஸ். சிவநாதன்**

★


எப்போதும் பாடுபடு; எப்போதும் உழைத்துக் கொண்டிரு; உழைப்பிலே சுகமிருக்கிறது. வறுமை, நோவு முதலிய குட்டிப் பேய்களெல்லாம் உழைப்பைக் கண்டவுடன் ஓடிப்போய்விடும்.

— பாரதியார்


# ஜெய்ப்பூர் செயற்கைக் கால்

ஜெய்ப்பூர் அங்கமானது இந்தியாவிலுள்ள ஜெய்ப்பூர் நகரத்தில்உருவாக்கப்பட்டது. சாதாரண இந்திய மக்களது தேவைகளுக்குப் பொருத்தமாக அமைந்தது. இது எலும்புச் சிகிச்சை நிபுணரான டாக்டர் P.K. செத்தி என்பவரால் உருவாக்கப்பட்டது. இலங்கை மக்களுக்கும் இவ்வகையான அங்கமே மிகவும் பொருத்தமானதாகும். இது உறுதியானது என்பதோடு பார்வைக்கும் உண்மையான அங்கம்போல் தோற்றமளிக்கும். இதனை மேற்கத்தைய நாடுகளில் தயாரிக்கப்படும் அங்கங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது பாரம்குறைந்ததாகவும்; விலைகுறைந்ததாகவும் இருக்கிறது. மேற்கத்தைய நாடுகளில் தயாரிக்கப்படும் அங்கங்கள் சப்பாத்து அணியும் பாவனையாளருக்கே உருவாக்கப்பட்டது. ஜெய்ப்பூர் அங்கமானது கால்துண்டிக்கப்பட்டவரை சமனற்ற தரையிலும் சேற்றிலும் நீரிலும் நடக்கவும் மரங்களில் ஏறவும், மலைகளைக் கடக்கவும், துவிச்சக்கர வண்டிகளைச் செலுத்தவும், குந்தி இருக்கவும், சப்பாணிகட்டி இருக்கவும் அனுமதிக்கிறது. இதைவிட ஜெய்ப்பூர் காலினை மிகவிரைவாகவும், இலகுவாகவும், உற்பத்தி செய்யக் கூடியதாக உள்ளது. ஏனெனில் இதற்குரிய மூலப்பொருட்கள் இங்கேயே பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளன. அத்துடன் அடிக்கடி பழுது பார்க்கவும் தேவையில்லை.

காலானது இறப்பர் பாதப் பகுதியினாலும் அலுமினிய எலும்பு பொருத்துக்குழியினாலும் அமைக்கப்பட்டுள்ளது. பாதப்பகுதியானது ஸ்பொஞ்சு இறப்பரும், மரமும் நைலோன்நாரினால் இணைக்கப்பட்டு வல்கனைசின் மூலம் இறப்பரினால் உலோக அச்சில் வைத்து உறுதியாக்கப்படுகிறது.



அளவு எடுத்தல் —> அலுமினியம் தகட்டில் குறித்தல் —> குழாய் உருவாக்கல்



உருக்கி ஒட்டல்

எலும்பு பொருத்துக் குழியானது அலுமினியத் தகட்டினால் ஆனது. அளவுகள் அங்கவீனமற்ற காலில் இருந்து எடுக்கப்பட்டு அலுமினியத் தகட்டில் குறிக்கப்பட்டு வெட்டப்படுகிறது. பின்னர் இருகரைகளும் மடிக்கப்பட்டு குழாய் வடிவில் இணைக்கப்பட்டு ஒட்டப்படுகிறது. இக்குழாயானது அங்கவீனமுற்ற காலின் வடிவிற்கு வடிவமைக்கப்படுகிறது. இது துண்டிக்கப்பட்ட காற்பகுதியுடன் பொருத்தப்படுகிறது. மூட்டானது துண்டிக்கப்பட்ட பகுதியில் முழங்காலினைச் சுற்றிப் பொருத்துவதற்கு ஏற்றதாகச் செம்மையாக்கப்படுகிறது. 'ஒருவட்டவடிவமான மரப்பலகையானது இவ்வலுமினியக் குழாயின் அடிப்பகுதியில் இணைக்கப்படுகிறது. பின்னர் பாதப்பகுதியானது இம்மரப்பகுதியுடன் இணைக்கப்படுகின்றது. மூட்டின் உட்பகுதியானது மென்மையான மொத்தத்துணியினால் உறையிடப்பட்டு" கரைகள் தோற்பட்டியுடன் சேர்த்து ஒட்டப்படுகிறது. குழாயின் வெளிப்பகுதியானது Stocknette' இனால் மூடப்பட்டு பின்னர் நிறந்தீட்டப்படுகிறது இப்போது செயற்கைக் கால் இயற்கையான நிறத்தையும் வடிவமைப்பையும் பெறுகிறது. இந்த அவயவத்துடன் ஓர் தோல் முழங்கால் பட்டியுடன் இணைக்கப்படுகிறது. இதனைக் கொண்டு முழங்காலுக்குச் சற்று "மேலே உள்ள தொடைப்பகுதியில் கட்டப்படுகின்றது.

முழங்காலுக்கு மேல் நீக்கப்பட்டவர்களுக்கு பொருத்தும் செயற்கைக் கால் இரு பகுதிகளாகச் செய்யப்பட்டுள்ளது. முழங்கால் மூட்டுக்குப் பதிலாக உலோக பிணைச்சல் பூட்டப்பட்டுள்ளது. இக்கால் தோற்பட்டிகள் மூலம் இடுப்பில் கட்டப்படும்.

X. S. Y. பிரான்சிஸ்
தொழில் முகாமையாளர்.

# ஜெய்ப்பூர் கால்கள் பொருத்துவதற்குக் கால் அகற்றுதல்

எழுதியவர்
**வைத்திய கலாநிதி எஸ். பொன்னம்பலம் எப். ஆர். சி. எஸ். (எடின்)**
சத்திரசிகிச்சை நிபுணர், போதனு வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

ஓர் அவயவத்தின் பகுதியை அல்லது அவயவத்தை சத்திரசிகிச்சையின் மூலம் அகற்றுதல் தறித்தல் எனப்படும். இக்கட்டுரையினுல் கீழ்அவயவம் பற்றிக் கூறப்படுகின்றது.

ஒரு நோயாளியின் கால்களை அகற்றுதல் அவசியமானபோதும் அது நோயாளிக்கு நன்மை பயக்கும் என்று கருதினுல் ஒழிய எந்தவொரு சத்திரசிகிச்சை நிபுணரும் இச்சத்திர சிகிச்சையைச் செய்யமாட்டார்.

பொதுவாக இந்த சத்திரசிகிச்சையின் பின் நோயாளி மனச்சோர்வு அடைவதுடன் பின்வரும் காரணங்களிற்காக இச்சத்திரசிகிச்சையைச் விரும்புவதில்லை.

1. உடம்பின் ஒரு பகுதியை இழத்தல்.
2. ஊனமுற்றவராகவும் சிலவேளைகளில் படுக்கையிலே இருக்கவேண்டியும் நேரிடும். அத்துடன் சுயமாக உழைக்க முடியாத நிலை ஏற்படும்.
3. அங்கவீனத்தால் அவலட்சணமாக இருப்பதாகச் சிலர் கவலைப்படுவார்கள்.
4. சிலர் மூடநம்பிக்கை, மதநம்பிக்கைகளால் அவயவத்தின் ஒரு பகுதியை இழக்கக் கூடாது என்ற எண்ணம் உடையவர்களாக இருப்பார்கள்.

ஒரு நோயாளிக்கு பின்வரும் காரணங்களால் தான் அவயவத்தைத்தறிக்கும் சத்திர சிகிச்சை செய்யப்படுகின்றது என்பதை நன்கு விளக்கினுல் அவர் இச்சத்திரசிகிச்சைக்கு சம்மதம் அளிப்பார்.

1. அவயவத்தில் கடினமான காயங்கள் குருதிக்குழாய்களில் நோய்கள் அல்லது ஏதும் பாதிப்புக்கள் நீரழிவு நோய் ஆகியவற்ருல் அவயவம் உயிரற்றுப் போதலால்.
2. அவயவங்களில் ஏற்படும் ஒருவகையான புற்றுநோய், தீவிரமான தொற்றுக்கள், பதனழிவு நோய், நொருங்கல் காயம் ஆகியவற்ருல் பாதிக்கப்படும்போது சத்திர சிகிச்சை செய்வது தாமதமானுல் மரணம் ஏற்படும்.

மேற்கூறப்பட்ட இரண்டு காரணங்களும் 'தறித்தல்' சத்திரசிகிச்சை செய்வதற்கு முக்கிய சந்தர்ப்பங்கள் ஆகும். ஸ்பரிச உணர்வு குறைந்த அவயவம் சோர்வாதத்தால் பாதிக்கப்பட்ட அவயவம் நோவுள்ள அவயவம், குணமாக்கமுடியாதஎலும்பு நோயுள்ளஅவயவம்மூட்டுக்கள் அசையாமல் சிறந்தமுறையில் செயற்படமுடியாத அவயவம் உடலின்மற்றைய அவயவங்கள் செயற்படுவதற்கு இடைஞ்சலாகக் கருதப்பட்டால் அதை அகற்ற வேண்டும்.

கொழும்பிலுள்ள நட்புறவுச் சங்கத்துடன் யாழ்ப்பாண அன்னையர் முன்னணியினுல் இணைந்து தொடங்கப்பட்ட ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பொருத்தும் தொழிற்சாலை தறிக்கும் சத்திரசிகிச்சை செய்யப்பட்டு ஊனமுற்று அங்கவீனம் அடைதந்வர்கட்கு செயகைக் கால்களைப் பொருத்தி புனருத்தாரனம் செய்வதன் மூலம் அவர்களின் பயத்தை ஓரளவு நீக்கி உள்ளது. இந்த விளையாட்டுவிழா வைபவத்தின் நோக்கம் என்னவெனில் ஜெய்ப்பூர் கால் பொருத்தப்பட்டவர்கள் எவ்வளவு சாதாரணமாக இருக்கின்ருர்கள்.

என்பதைக் காட்டுவதற்காகும். சிகிச்சையின் தொடக்கமே தறித்தல் சத்திரசிகிச்சையாகும். நோயாளி உடல் உளரீதியாக பழைய சாதாரண நிலைக்குக் கொண்டு வரப்படும்போழுது சிகிச்சை முடிவு பெறுகின்றது. அவயவத்தில் சாதாரண தொழிற்பாடு பழைய நிலைக்கு வருவது பின்வருவனவற்றில் தங்கியுள்ளது.

1. தறித்தல் சத்திரசிகிச்சை செய்யப்படும் மட்டம்
2. செய்யப்பட்டபின் காணப்படும் காலின் அமைப்பு
3. செயற்கை அவயவம் பொருத்தும் வசதி.
4. புனருத்தாரணம்

தறித்தல் சத்திரசிகிச்சையானது செய்யப்பட வேண்டிய மட்டம் அவயவத்தின் நோய் நிலை ஆகியவற்றில் தங்கியுள்ளது. முழங்காலிற்கு மேல் தறித்தல் சத்திரசிகிச்சை செய்யப்பட வேண்டு மெனில் மிகச் சிறந்தளவு கால் எலும்பின் பெரிய ரொக்கான்ரர் முனையில் இருந்து25—30 செ மீ ஆகும். குறைந்தது அதே இடத்தில் இருந்து 15 செ. மீ அளவி லாவதுசெய்யப்பட வேண்டும்.

முழங்காலிற்கு கீழ் செய்யப்பட வேண்டுமாயின் சிறந்தளவு 14 செ.மீ இருத்தல் வேண்டும். காலின் ரிபியா எலும்பின் பிளேற்றோ பகுதியில் இருந்து 10 செ.மீற்கு குறை யாதிருத்தல் வேண்டும்.

சத்திரசிகிச்சை செய்து குணமாகியபின் முனையில் அமைப்பு கூம்பு வடிவாக இருத் தல் வேண்டும். இந்தச்சரியான அமைப்பை பெறுவதற்கு இப்பகுதியை கிறேப்பந்தனம் போட்டு காலைசிறிது உயர்த்திவைக்க வேண்டும். இதுபுண் குணமாகும் வேளையில் வீக்கம் ஏற்படாமல் பாதுகாக்க உதவும். இந்த இடத்தில் எலும்பு முன்னுக்கு தள்ளாமல் அருகில் உள்ள தசைகள் இழுத்துத் தைக்கப்பட வேண்டும். மூட்டுச் சுருக்கங்கள், இறுக்கத்தன்மை ஆகியன இருக்கக்கூடாது. முனைக்கு அருகில் உள்ள மூட்டு சாதாரணமாக இருப்பதற்கு அப்பியாசம் தொடர்ந்து கொடுக்கப்பட வேண்டும், சத்திரசிகிச்சை செய்யப்பட்ட இடத் தில் தழும்பு குறைவாகவும் நோ இல்லாமலும் ஒட்டி இராமலும் இருத்தல் வேண்டும்.

முனைகள் சரியாக அமையாவிடின் ஏற்படும் சிக்கல்களாவன;-

1. சருமத்தில் அழற்சி—எக்சிமா
2. செயற்கை கால்கள் சரியான முறையில் பொருத்தப்படாமல் கொப்புளங்கள் ஏற்படும்.
3. செயற்கை கால்கள் முனைமீது அமுக்கம் ஏற்படுத்துவதால் சருமத்தில் காயம் ஏற்படுதல்.
4. குருதி விநியோகம் குறைவதால் புண்கள் ஏற்படுதல்.
5. அவயவத்தின் முனையில் அதிகளவு தசைகள் காணப்படின், செயற்கைகால் பொருத்தி பாவிக்கும்போது பாதுகாப்பற்ற உணர்வு ஏற்படும்.
6. துண்டிக்கப்பட்ட நரம்புகள் வீங்கி நோவை உண்டாக்கும். நரம்புகளில் தொற்று ஏற்படுவது நோவை உண்டாக்குவதால் செயற்கைக்கால் பொருத்துவதற்கு இடை யூறாக இருக்கும்.

7. சிலவேளைகளில் தறிக்கப்பட்ட கால் இருப்பது போன்று போலி உணர்வு ஏற்படும். இது காலப்போக்கில் மறைந்துவிடும். இப்படி இல்லாத காலில் நோ இருப்பதாக கூறினால் சிகிச்சை செய்வது கடினம்.
8. உளவியல் ரீதியான ஒழுங்கீனம் வெகு அரிதாக துண்டிக்கப்பட்ட அவயம்தொடும் போது துடித்தல்.
9. தறிக்கப்பட்ட இடத்திற்கு மேல் உள்ள மூட்டில் இறுக்கம், அல்லது ஊனம் ஏற்படக்கூடும்.
10. எலும்பில் தொற்று ஏற்பட்டு கால் எலும்பு கொக்கி போல முன்தள்ளிக் கொண்டு இருத்தல்.

திருப்திகரமான முறையில் மூளையின் அமைப்பு காண்பிக்கப்படும்போது அவர் அந்த அவய வத்தின் மிகக் கூடிய தொழிற்பாட்டையும் பூரணமான புனருத்தாரணத்தையும் பெறக் கூடியதாக இருக்கும்.
அத்துடன் தன்னம்பிக்கையுடன் சுதந்திரமான திருப்திகரமான பயனுள்ள ஆரோக்கியமான வாழ்வு வாழக்கூடியதாகவும் இருக்கும்.

★

## காலத்தினாற் செய்த நன்றி - ஜெய்ப்பூர் செயற்கைக் கால்

ச. பொ. பாலசிங்கம்

யாழ். அன்னையர் முன்னணியின் ஆதரவில் இயங்கும் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலையின் இரண்டாவது ஆண்டு பூர்த்தி விழா மலருக்கு எனது இதயபூர்வ வாழ்த் துக்களை அளிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இச்சந்தர்ப்பத்தை அன்னையர் முன்னணி எனக் களித்தமையை நன்றியுணர்வோடு நோக்குகின்றேன்.

கடந்த 2.8.87ல் அரசகருமரீதியாகச் சென்றபோது வல்வெட்டித்துறையில் நிலப் பொறி வெடியிற் சிக்கி எனது இடது காலின் கீழ்ப்பாகத்தை இழந்தேன். எனது வாழ்வின் முடிவு இது என்றெண்ணி ஏங்கினேன். கலங்கினேன், அழுதேன். யாழ் - போதனா மருத்துவ மனை வைத்திய நிபுணர், ஆளுநர், சிரேஷ்ட வைத்தியர்கள், மருந்துவப் பரிகாரகர்கள் அனைவரும் பரிவோடும், ஊக்கத்தோடும் எனக்களித்த மருத்துவச் சேவையினால் ஆறுதலும் பூரண குணமும் அடைந்தேன்.

மருத்துவமனை வாழ்வு நினைவில் நீங்காதது. நாட்களோட, ஓட, ''நான் ஒரு சொத்தி'' ''முடவன்'' "ஊனமுற்றவன்'' ''இந்நிலையில் என் தொடர் நாட்கள் எப்படியோ? கடமை யைத் தொடர முடியாதே'' என உள்ளூற வருந்தினேன். செய்யுந் தொழிலே தெய்வ மெனப் போற்றி வாழ்ந்த செம்மையை நினைவு கூர்ந்தேன். இழந்த கால் உபாதை ஒருபுறம். மனச்சஞ்சலம் மறுபுறம், கனவில் காணும் காட்சிகள் இன்னொருபுறம்.

இந்நாட்களிற்றான், யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதிகளும், யாழ்- ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலைப் பொருளாளர்களுமாக திருமதி S. தெய்வேந் திரனும், திருமதி J. கணேசமூர்த்தி அவர்களும், கொழும்பு (F. I. N. S.) உற்றுழி உதவும் நட்புறவுச் சங்க கௌரவ செயலாளரும், ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பொருத்தும்

திட்ட முகாமையாளருமான திருமதி சுவர்ண பேர்டினன்ட் சகிதம் என்னை இரக்கத்தோடு வந்து பார்த்தனர். உற்றவை கேட்டனர். ஆறுதல் கூறினர். என்போன்றோர்க்கு ஜெய்ப்பூர் கால் தரக் கூடிய புனர்வாழ்வுப் பேற்றையும், ஆதார பூர்வமாக விளக்கினர். இருந்தும் இத் தேற்று மொழிகள் ஒரளவு நிம்மதிநிறையும். எதிர் நோக்கையுமே உண்டுபண்ணின. கூறப்பட்டவை என் மனோநிலைக்கேற்ற மாத்திரைக் குளிசைகள் என்று எண்ணினேன். இவ்வெண்ணம், போதனா வைத்தியசாலையைவிட்டு வெளியேறி, யாழ் – ஜெய்ப்பூர் செயற் கைக்கால் தொழிற்சாலையில் காலடி எடுத்து வைத்த அன்றே மாற்றமடைந்தது. அன்று அவர்கள் கூறியதெல்லாம் பெறுமவற்றுள் இறுதுணைஉண்மையென உணர்ந்துகொண்டேன்.

ஐம்பத்திரண்டவது செயற்கைக்கால் எனக்குப் பொருத்தப்பட்டது, வைத்தியகலாநிதி திருமதி J. கணேசமூர்த்தி உட்பட, அன்னையர் முன்னனித் தலைவி திருமதி . தேம்பா குணநாயகம், தொழில் முகாமையாளர் திருவாளர். பிரான்சிஸ் செயல் நுட்பவியலாளர்கள் அனைவரும் எனக்குக் காட்டிய பரிவும், புரிந்துணர்வும், செயற்றிறனும், அறிவுரையும் புத்துயிர் அளித்தன. என்னை செயற்கைக் காலுடனேயே வீட்டுக்கு நடந்து செல்லக்கூடிய தாக அனுப்ப அவர்கள் எடுத்த பிரயாசை என்றும் என் மனத்தைவிட்டு நீங்காதவை. நன்றிக்கும் கட்டுப்பாட்டுக்கும் உரியவை.

''துன்பத்திற்கு யாரே துணையாவார் தாம் உடைய
நெஞ்சம் துணை ஆல் வழி'' என்பது குறள்

கடந்த கால வன்கணாரின் இழி செயல்களினால் உடலுறுப்புக்களை இழந்து வருந்துவோரின் எண்ணிக்கை (2000) இரண்டாயிரம் வரை என மதிப்பிடப்பட்டுள்ளது. விஞ்ஞானக்கலை விரிவடைந்திருக்கும் பல நாடுகளில் உடலுறுப்பின்மை எவ்வித பின்னடைவுகளையும் கொடுப்பதில்லை அவர்கட்டு. மறுவாழ்வு அல்லது மாற்று வாழ்வுத் திட்டங்கள் காத்திருக் கின்றன. ஆயின் எமது மத்தியில் அவ்வித திட்டங்கள் உருவாக்கங்களாகவில்லை. கை, கால்களை இழந்து, வாழ்வே இருளாகிவிட்டதென்று எண்ணிக் கலங்குவோர்க்கு இத் தொழிற் கூடம் ஒரு வரப்பிரசாதம். எமது நெஞ்சத் துணிவும், இறையருளும், பயிற்சியும் எஞ்சிய வாழ்வின் உடற் பஞ்சத்தைப் போக்கும்.

உண்மையில் இத்தொழிற்சாலை ஓர் விழுமிய கலைக்கூடம். இப்பணி தெய்வீகமானதும் கூட. இதில் உழைப்பவர்கள் என்றென்றும் பாராட்டப்பட வேண்டியவர்கள். ஊக்கப் படுத்தப்பட வேண்டியவர்கள். இரு தொழில் நுட்பவியலாளர்களும் தமது உடற் கூற்றின் குறைப் பாட்டைப் பெரிதென்றெண்ணாமல் பொறுமையாகச் செயற்படுவது நினைவுக்குரியது. பலவித, குறைபாடுகளுடன், வேண்டுகோளுடன் தம்மை அணுகும் சகலரையும் சிரித்த முகத்தோடு வரவேற்று, அவர்கள் வார்க்கும் சோகக்கதைகளைக்குச் செவிமடுத்து செய்முறை கூறி சீராகவும் செம்மையாகவும் செயலுருப்படுத்தும் தொழில் முகாமையாளர் நன்றிக்கும் அன்புக்கும் உரியவர். நாளும் பொழுதும் நன்றே செய்து, நலிந்தவர்கள், மெலிந்தவர் நன்மைகள் எண்ணி முன்னைப்பிராணர்க்கு அன்னையவள் ஆறுற்போல் அன்னையர் முன்னணி யின் ஆக்கமுயர் செயற் பணியின் தலைவியை மெய்யுணர்வோடு போற்ற வேண்டும்.

இத்தொழிலகம் பலதுறைகளில் முன்னேற்றமடைய வேண்டும். பொருத்தமான கால் களைப் பொருத்துதல் போல கைகளை இழந்தவர்கட்குக் கையும் பொருத்தப்பட வேண்டும் திடசங்கறபத்தோடு முயற்சித்தால் கைகூடாதது ஒன்றுமில்லை. நினைவதை நிறைவேற்ற நிபுணத்துவ அறிவுடையோர், பொருள் நிறைந்தோர் எம்மத்தியில் இல்லாமலில்லை.

இப்பணிக் கேற்ற ஆக்கத்தையும், அறிவையும் அளிக்கவல்ல மேலைத்தேய நாடுகள், தாபனங்கள் முன் வராமலுமில்லை. குறுகியநோக்கில், இத்தொழிற்சாலைக்கு ஏற்ற நூல்கள், வானொலி, தொலைக் காட்சி அமைப்பு, பயிற்சிக்கேற்ற நிலையான மிதிச்சக்கர வண்டி, நவீன உபகரணங்கள், மருந்து வகைகள், மலசலகூட சீரமைப்புக்கள் ஆகியன அவசியமாகும். தமிழ்பேசும் ஊனமுற்றோர்க்கு இத்தொழிலகம் ஒன்றே இருப்பதனால், ஏனைய தமிழ் மாவட்டக் கிராமத்தவர் மட்டத்தில் இப்பணிமனையின் செயற்பாடுகள் வெளிவர ஆவனசெய்ய வேண்டும். இதை அவ்வவ் மாவட்ட அன்னையர் முன்னணியினர் செய்வது உசிதமாகும். இவ்வாறு, இத் தெய்வீகப்பணி விரிவாக்கப் படுவதற்குத் தேவையான பணமும், பொருட்களும் வாரி வழங்க வேண்டுமென வேண்டுதல் பொருத்தமுடையதென எண்ணுகின்றேன். ஊனம் ஞானத்தைக் கொண்டு வருதல் இயல்பு.

யாழ் ஜெய்ப்பூரின் செயற்கைக்
கால் ஓராண்டு நிறைவு
யாழ் அன்னையரின் முன்னணிக்கு
ஆனதொரு வெற்றி
யாழ் ஜெய்ப்பூர் செயற்கைக்
கால் பெற்ற மன நிறைவு
யாழ் ஜெய்ப்பூரே! நீ வாழ்க!
வளர்க! உன்வெற்றி.

---

''சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஊங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு'' — குறள்

எவ்வளவு நீண்ட ஆயுசு என்று ஒருவனைபபற்றி பெருமையாகப் பேசுவதை விட, எத்தனை நல்ல காரியங்களை அவன் சாதித்திருக்கிறான் என்று மதிப்பிடுவதே புத்திசாலித்தனம்
— பாட்ரிட்ஜ்

★

## சிறுவனின் தயாள மனப்பான்மை

கொக்குவில் புகையிரத வீதியில் வசிக்கும் டாக்டர் V. கனகசபை தம்பதியினரின் புத்திரனாகிய K. நாகேஸ்வரன் சென்ற வருடம் தனது பத்தாண்டு பிறந்த தின வைபவத்தைப் பரித்தியாகம் செய்து தன் வயதோடொத்த அங்கவீன சிறுவர்களை நினைத்து ரூபா ஐந்நூறை ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழில் நிர்வாகத்திற்கு அன்பளிப்புச் செய்துதவினார். இதை நாம் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது இவ்வருடமும் தனது 11வது பிறந்த தினத்தையொட்டி ரூபா 500ஐ மீளவும் எமக்கு அன்பளிப்பு செய்துள்ளார். இச்சிறுவனைப் போல் இன்னும் அநேகர் உணர்வார்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம்.



தொழிலக முகாமையாளரும், தொழில் நுட்பவியலாளர்களும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது.



கிழக்கு மாகாணத்தில் இருந்து வந்த திருமதி காளிமுத்து திரு K. செல்வராசா, திரு. M. கதிரவேல், திரு. K. M. ஜின்னு, திரு. M. ஞானப்பிரகாசம்





றெயில் விபத்தில் இரு கால்களையும் இழந்த செல்வி. லலிதாதேவி சரவணமுத்து
மேற்றனுடன் நிற்பதையும்
ஜெய்ப்பூர் கால்கள் பொருத்திய பின் நிற்கும் காட்சிகள்.



பிறப்பில் கால் குறைபாட்டிலுள்ள
ஒருவருக்கு சத்திரசிகிச்சை செய்யாமல்
ஜெய்ப்பூர் பாதம் பொருத்தப்பட்டிருக்கும்
காட்சி.

## எமது அங்கவீனச் சிறுவர்களிற் சிலர்.



குருநகரைச் சேர்ந்த D. கமிலிற்ரன்
வயது 6 ஹெலி சூட்டினால் மேற்காலை
இழந்தவர்.



அளவெட்டியைச் சேர்ந்த L. தீபன்
வயது 4 விமானக் குண்டு வீச்சினால்
மேற்காலை இழந்தவர்.



கோப்பாயைச் சேர்ந்த T. தசாயினி
வயது 4 ஷெல் தாக்குதலினால் கீழ் காலை
இழந்தவர்.





றெயில் விபத்தினல் இரு மேல் கால்களேயும் இழந்த வேலணையைச் சேர்ந்த திரு. S. பூபாலசிங்கம் வயது 42 ஜெய்ப்பூர் செயற்கைக் கால்களேயும் இரு பாகங்களாகப் பொருத்தி நடைபயிலும் காட்சிகள்.

# அன்பளிப்பாளர் அறிக்கை

| | | | |
|---|---|---|---|
| தை 1988 | | ரூ. | ச. |
| திரு K. ஞானக்குமார் | தெல்லிப்பளை | 1000 | 00 |
| Dr. & Dr. (திருமதி) J. K. S. வீரசேகரா | கொழும்பு | 1000 | 00 |
| திருமதி S. சாந்தகுமார் | கொழும்பு - 6 | 500 | 00 |
| பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவை நிலையம் | யாழ்ப்பாணம் | 1000 | 00 |
| மோர்ச்சன்ற் பிளுன்ஸ் லிமிட்., யாழ்ப்பாணம் | | 2000 | 00 |
| திரு S. G. ராசா | வசாவிளான் | 500 | 00 |
| திரு T. மனோரங்கன் | வேலணை | 1000 | 00 |
| செல்வி V. யோகேஸ்வரி | வேலணை | 100 | 00 |
| திரு S. தர்மலிங்கம் | ,, | 100 | 00 |
| ,, I. துரைசாமி | | 100 | 00 |
| R. மகாலிங்கம் | ,, | 100 | 00 |
| ,, T. அருணகிரி | | 100 | 00 |
| திருமதி R. சிவமணி | ,, | 100 | 00 |
| திரு K. ராஜகோபால் | | 100 | 00 |
| ,, E. கைலாசபிள்ளை | ,, | 100 | 00 |
| T. பிரகாசம் | | 50 | 00 |
| ,, K. இளங்கேஸ்வரன் | ,, | 250 | 00 |
| S. நல்லைநாதன் | | 150 | 00 |
| ,, T. சிதம்பரம் | ,, | 100 | 00 |
| S. ராஜதுரை | | 100 | 00 |
| ,, P. நடராஜமணி | ,, | 100 | 00 |
| K. மயில்வாகனம் | புளியங்கூடல் | 100 | 00 |
| ,, V. K. கனகரட்ணம் | வேலணை | 140 | 00 |
| S. சோமாஸ்கந்தராஜா | ,, | 100 | 00 |
| ,, N. P. பரமலிங்கம் | | 100 | 00 |
| P. தணிகாசலம் | ,, | 100 | 00 |
| ,, S. சீவரட்ணம் | | 100 | 00 |
| V. நடராஜா | ,, | 100 | 00 |
| திருமதி K. உமாதேவி | | 100 | 00 |
| திரு சுப்பிரமணியம் | ,, | 50 | 00 |
| ,, T. பாலசூரியர் | | 100 | 00 |
| ,, A. எலசுராஜா | கோண்டாவில் | 1000 | 00 |
| திருமதி K. சிவசிதம்பரம் | வண்ணார்பண்ணை | 1000 | 00 |
| திரு R. ரமணன் | தெல்லிப்பளை | 1000 | 00 |
| திரு M. சோமசுந்தரம் | உடுவில் | 1000 | 00 |
| மாசி 1988 | | | |
| திரு C. கணேசமூர்த்தி | சாவகச்சேரி | 1000 | 00 |
| ,, M. சுப்பிரமணியம் | இணுவில் | 1000 | 00 |
| ,, A. அம்பரநில்லி | வல்வெட்டித்துறை | 1000 | 00 |

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| திரு சொர்ணலிங்கம் | வேலணை | 1000 | 00 |
| திருமதி K. மகேஸ்வரன் | | 500 | 00 |
| திரு M. மோகன்ராஜா | | 750 | 00 |
| திருமதி R. வூட்ஹவுஸ் | | 3000 | 00 |
| திருமதி N. சின்னையா | கொழும்பு - 5 | 1000 | 00 |
| திருமதி A. அருணாசலம் | கொக்குவில் | 5000 | 00 |
| திரு T. சிவம் | சுன்னாகம் | 2000 | 00 |
| திரு S. மகேந்திரன் | அவுஸ்திரேலியா | 1000 | 00 |
| திரு பூதன் தேவராஜன் | பருத்தித்துறை | 1000 | 00 |
| திரு N. ஜீவசுதன் | தெல்லிப்பளை | 1000 | 00 |
| திரு R. ரமணணி | ,, | 1000 | 00 |
| திரு M. சோமசுந்தரம் | உடுவில் | 1000 | 00 |
| வண. T. S. பிரேமராஜா, | தென்னிந்திய திருச்சபை | 3000 | 00 |
| திருமதி J. N. சிவப்பிரகாசம் | யாழ்ப்பாணம் | 1000 | 00 |
| திரு . சீனிதேர்ஸ்வரன் | தொண்டமேனம் | 1000 | 00 |

பங்குனி 1988

| | | | |
|---|---|---|---|
| திரு V. தங்கம்மா | கரவெட்டி | 300 | 00 |
| ,, V. சுப்பிரமணியம் | கரணவாய் | 1000 | 00 |
| திருமதி R. திருச்செல்வம் | வசாவிளான் | 1000 | 00 |
| திரு N. பரமசோதி | பரந்தன் | 1000 | 00 |
| ,, S, நவரட்ணராஜா | ஓமந்தை | 500 | 00 |
| ,, K. யோகநாதன் | துணுக்காய் | 1000 | 00 |
| Dr. (செல்வி) M. முருகேசம்பிள்ளை | | 1500 | 00 |
| திரு ரட்ணசபாபதி | மல்லாகம் | 1000 | 00 |
| Dr. பொன்னம்பலம் | யாழ்ப்பாணம் | 1000 | 00 |
| Dr. S. வேலும்மயிலும் | நல்லூர் | 1000 | 00 |
| திருமதி இந்திரா மகாதேவா | கொழும்பு | 1000 | 00 |
| கிறிஸ்தவ தொழிலாளர் சமாஜம் | வடபிராந்திய கிளை | 50000 | 00 |
| நகர கொமாண்டர் | யாழ்ப்பாணம் | 1000 | 00 |
| திரு A. கனகராசா | KKS | 1000 | 00 |

சித்திரை 1988

| | | | |
|---|---|---|---|
| திரு கஜனந்தனம் | கீரிமலை | 500 | 00 |
| தலைவர், இளைஞர் சமாஜம் | சாவகச்சேரி | 1000 | 00 |
| திரு சர்வா யோகேஸ்வரி | கரவெட்டி | 1000 | 00 |
| டயக்கோனியா | சுவீடன் (1ம் முறை) | 100,000 | 00 |
| திரு V. கணபதிப்பிள்ளை | சாவகச்சேரி | 200 | 00 |
| ,, கமலநாதன் | ஏழாலை | 200 | 00 |
| ,, P. குமார் | தெல்லிப்பளை | 400 | 00 |
| லையன்ஸ் கிளப் | யாழ்ப்பாணம் | 1000 | 00 |
| திரு, திருமதி A. J. செல்வரட்ணம் | அளவெட்டி | 2000 | 00 |
| திரு ஜெகதீஸ்வரன் | | 200 | 00 |
| டயக்கோனியா A. பஜாஜ் ஸ்கூட்டர், டாக்ஸி போக்குவரத்து அலுவல்கள் | | 66000 | 00 |

| வைகாசி 1989 | ரூ. | ச. |
|---|---|---|
| அவுஸ்திரேலியா உயர்ஸ்தானிகர் | 75000 | 00 |
| லயன்ஸ் கழகம் யாழ்ப்பாணம் | 300 | 00 |
| திரு. A. செல்வசந்நிதி | 1000 | 00 |
| ,, A. அருணசலம் | 1000 | 00 |
| ,, M. மஹ்றுப் | 500 | 00 |
| ,, A. மார்க்கண்டு | 700 | 00 |
| ,, C. கந்தசாமி | 150 | 00 |
| ,, T.G. அருள்பஹாமாஸ் | 5000 | 00 |
| ,, T.B. பாலசுப்பிரமணியம் | 1000 | 00 |
| ,, S. சின்னத்தம்பி | 500 | 00 |
| ,, தங்கபூர்ணம் | 1000 | 00 |
| ,, S. கோடீஸ்வரன் | 500 | 00 |
| ,, A.V. ஜெகநாதன் | 200 | 00 |
| ,, C. சிவப்பிரகாசம் | 250 | 00 |
| ,, F. ரவீந்திரன் | 500 | 00 |
| றெட்பார்ன மட்டக்களப்பு | 5000 | 00 |

| ஆனி 1988 | | |
|---|---|---|
| திரு K. வேலுப்பிள்ளை | 1000 | 00 |
| திருமதி I. அல்போன்சஸ் | 1000 | 00 |
| Dr. V. கருணகரன் தெல்லிப்பளை | 5000 | 00 |
| செல்வி C. சந்திரசேகரம் | 500 | 00 |
| திருமதி N. கதிரவேல் | 500 | 00 |
| ,, S. கனகசபை | 500 | 00 |
| x துர்க்கா தேவஸ்தானம் தெல்லிப்பழை | 10000 | 00 |
| x மின்சார இணைப்புக்கள் யாழ்ப்பாணம் | 1000 | 00 |
| x Dr. பிலிப்ஸ் யாழ்ப்பாணம் | 1000 | 00 |
| x பிறட் கோ பண்டத்தரிப்பு | 500 | 00 |
| x பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம் | 500 | 00 |
| x புனிதா ஜிவல்லறி ,, | 500 | 00 |
| x ரவி அன் ராஜ் ரெக்ஸ்ரைல்ஸ் யாழ்ப்பாணம் | 500 | 00 |
| x எயிட்லைன்ஸ் ,, | 500 | 00 |
| x வறணி மிஷன் பாம் ,, | 250 | 00 |
| x ரட்ணம் பார்மஸி ,, | 250 | 00 |
| x சிற்றி டெக்ஸ் ,, | 250 | 00 |
| x பிற்றுஸ் மொடர்ன் மார்க்கட் ,, | 500 | 00 |
| x லிங்கம்ஸ் சில்க் ,, | 500 | 00 |
| x நொர்தேன் பார்மஸி ,, | 500 | 00 |
| x சிறுவர் பாதுகாப்பு நிலையம் (U.K) | 30000 | 00 |
| x சிறில் பார்மஸி யாழ்ப்பாணம் | 500 | 00 |
| x திரு Dr. (திருமதி) கண்ணுத்துரை | 1000 | 00 |

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| x கணேசன் ஸ்ரோர்ஸ் | யாழ்ப்பாணம் | 250 | 00 |
| x அம்பிகாபதி | ,, | 50 | 00 |
| x ஜெனரல் றேடர்ஸ் | ,, | 50 | 00 |
| x அம்பாள் றேடிங் என்டபிறைஸ் யாழ்ப்பாணம் | | 50 | 00 |
| ʌ திரு T. ஜெகநாதன் | | 50 | 00 |
| ʌ நந்தி இன்டஸ்றீஸ் | | 20 | 00 |
| v திரு V.K இராசரட்ணம் | | 250 | 00 |
| ʌ திரு K. கிருபாகரன் | | 200 | 00 |
| ʌ ,, R·V.S சுந்தரேசன் | | 500 | 00 |
| ʌ யூனியன் ஏஜன்ஸீஸ் | | 300 | 00 |
| ʌ சென்றல் நேசிங் ஹோம் | | 1000 | 00 |
| ʌ HUDEC | யாழ்ப்பாணம் | 1000 | 00 |
| ʌ சித்ராலயா | ,, | 500 | 00 |
| ʌ திரு G. பாலகுமாரன் | ,, | 100 | 00 |
| ʌ வண. சொலமன் | அளவெட்டி | 300 | 00 |
| ʌ திரு குமாரசாமி | நயினாதீவு | 100 | 00 |
| ʌ ,, T. சுகிர்தா | | 20 | 00 |
| ʌ ,, K.S.R அனி பஜார் | | 100 | 00 |
| ʌ சரவணாஸ் | யாழ்ப்பாணம் | 100 | 00 |
| ʌ திரு இல்கா உசிற்றல்ஸ் செஞ்சிலுவைச்சங்கம் (ஜெய்ப்பூர்) | | 1000 | 00 |
| ʌ திருமதி R. பிரபாகரன் | | 1000 | 00 |
| ʌ திரு E. சரவணபவன் (உதயன் வெளியீடுகள்) | | 5000 | 00 |
| ʌ திரு S. L. அப்துல் ரஹிம் | | 200 | 00 |
| ʌ ஆசீர்வாதம் அச்சகம் | | 1000 | 00 |
| ʌ M. P. C. S தெல்லிப்பழை | | 5000 | 00 |
| ʌ மருந்தாக்கல் போதனா ஆஸ்பத்திரி | | 1100 | 00 |
| ʌ ஸ்ரீ லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம் (KKS) | | 2000 | 00 |
| ʌ திரு R. விக்னராஜா (சந்தைப்படுத்தல் திணைக்களம்) | | 5000 | 00 |
| ʌ ஹட்டன் நஷனல் வங்கி | | 2500 | 00 |

## ஆடி 1988

| | | | |
|---|---|---|---|
| ʌ செல்வி ராமச்சந்திரன் | கொக்குவில் | 1530 | 00 |
| ʌ திரு ச. யோகநாதன் | கோப்பாய் | 1000 | 00 |
| ʌ குகன் ஸ்ரோர்ஸ் | யாழ்ப்பாணம் | 1000 | 00 |
| ʌ கொழும்பு ரெக்ஸ்ரைல்ஸ் | யாழ்ப்பாணம் | 500 | 00 |
| ʌ ரஞ்சனாஸ் | யாழ்ப்பாணம் | 500 | 00 |
| ʌ Dr. & திருமதி C.J. எலிசன் (அவுஸ்திரேலியா) | | 8936 | 00 |
| ʌ சிங்கம்ஸ் பார்மஷி | | 250 | 00 |
| ʌ லக்கி பிளாசா (நவீனசந்தை) | | 500 | 00 |
| ʌ திரு M. P. V ராஜா | (றெயில்வே) | 111 | 11 |
| ʌ ,, E. தர்மேஸ்வரன் | (ஆவரங்கால்) | 51 | 00 |
| ʌ ,, V. யோசப்பு | ஊர்காவற்றுறை | 2000 | 00 |
| ʌ ,, K. பாலேந்திரன் | யாழ்ப்பாணம் | 300 | 00 |
| ʌ ,, V. ஏரம்பமூர்த்தி | ,, | 1000 | 00 |

| | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|
| A | ,, A.C. நடராஜா | வட்டுக்கோட்டை | 150 | 00 |
| A | ,, V.S. மருதலிங்கம் | மானிப்பாய் | 100 | 00 |
| A | சப்ரு யுனிக்கோ பிஞன்ஸ் லிமிட்டெட் | | 1000 | 00 |
| A | திரு P. மயில்வாகனம் | நீர்வேலி | 500 | 00 |
| A | ,, V. கனகசபை | சுண்டிக்குளி | 1100 | 00 |
| A | சப்ரு உமா எக்ஸ்போ லிமிடட் | | 6085 | 00 |
| A | திருமதி ரட்ணம் | உரும்பிராய் | 250 | 00 |
| A | திரு T. விஸ்வப்பா | யாழ்ப்பாணம் | 1000 | 00 |
| A | Dr. S. நாகநாதன் | சங்கானை | 1000 | 00 |
| A | திரு P. சோதிநாதன் | | 25 | 00 |
| A | செல்வி யாழினி அருணகிரிநாதன் | | 1000 | 00 |
| A | M.T. சோமசுந்தரம் அன் சன்ஸ் | | 1000 | 00 |
| A | திரு S. ஐங்கரன் | | 250 | 00 |
| A | சீமாட்டி | நவீன சந்தை | 1000 | 00 |
| A | திரு S. குகதாசன் | தெல்லிப்பளை | 50 | 00 |
| A | திரு C. பாலசுப்பிரமணியம் | | 50 | 00 |
| A | செல்வி பிரேமிளா | கொக்குவில் | 50 | 00 |
| A | ,, சாந்தா சிவசம்பு | அளவெட்டி | 100 | 00 |
| A | அர்ச் வின்சன் போல் | | 1000 | 00 |
| A | திரு K. சிவாஜி லிங்கம் | | 100 | 00 |
| A | மோற்றிவாசன இல்லம் | மன்னர் | 1000 | 00 |
| A | திரு p. செல்வராசா | உரும்பிராய் | 1001 | 00 |
| A | திரு p. துரைராசா | யாழ்ப்பாணம் | 500 | 00 |
| A | திரு S. சாந்தகுமார் | ,, | 50 | 00 |
| A | திரு S. நவனீதன் | அச்சுவேலி | 500 | 00 |
| A | திரு B ராசதுரை | ஊர்காவற்றுறை | 500 | 00 |
| A | திருமதி M. மகிழ்ராஜா | உடுவில் | 250 | 00 |
| A | மரியன்னை சங்கம் | பலாலி | 500 | 00 |
| A | செல்வி உமா சிவபாதசுந்தரம் | பருத்தித்துறை | 500 | 00 |
| A | குட்லக் எம்போறியம் | யாழ்ப்பாணம் | 1000 | 00 |
| A | ஹற்றன் நஷனல் வங்கி ஊழியர் நலன்புரிச்சங்கம் | | 3000 | 00 |
| X | திரு. லிங்கநாதன் KKS | | 500 | 00 |
| Z | ராதிகா ஜுவலறி யாழ் | | 500 | 00 |
| X | றூபி " " | | 500 | 00 |
| X | அருணு " " | | 250 | 00 |
| X | இந்திரா " " | | 250 | 00 |
| X | S S பேரம்பலம் " | | 500 | 00 |
| X | மெறிக் என்சினியர் பிறைவேற் லிமிட் | திருநெல்வேலி | 500 | 00 |
| X | அபிராமி | ,, | 500 | 00 |
| Z | திரு. T கணேசன் | யாழ் | 1000 | 00 |
| | டயமன் ஹவுஸ் | ,, | 1000 | 00 |
| | செல்வி P செல்வநாயகம் | நல்லூர் | 5000 | 00 |
| | பேபி நீட்ஸ் | யாழ் | 250 | 00 |

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| திரு. S குணரட்ணம் | உரும்பிராய் | 500 | 00 |
| திருமதி P ஞானேஸ்வரி | மல்லாகம் | 500 | 00 |
| x ரவீந்திரன் | யாழ் | 500 | 00 |
| x திருமதி N பொன்னையா | தின்னவேலி | 500 | 00 |
| x திரு P செல்வநாதன் (R. S அச்சகம்) | யாழ் | 500 | 00 |
| x சிக்மா சில்க்ஸ் இன்டஸ்ரிஸ் லிமிட் | | 1000 | 00 |
| x செல்வி M. கௌரி | யாழ் | 1000 | 00 |
| x திரு. V தங்கேஸ்வரன் | மயிலிட்டி | 50 | 00 |
| x திரு. P சோதிநாதன் | யாழ் | 25 | 00 |
| x காந்தி சனசமூக நிலையம் | கொக்குவில் | 120 | 00 |
| ^ திருமதி. பத்மாவதி | VVT | 200 | 00 |
| ^ A. நல்அபிமானி | | 50 | 00 |
| ^ செல்வி சாந்தினி | | 100 | 00 |
| ^ A நல்அபிமானி | கொழும்புத்துறை | 150 | 00 |
| ^ S குமாரசாமி | உரும்பிராய் | 100 | 00 |
| ^ இரத்தினமயில்வாகனம் | கோண்டாவில் | 600 | 00 |
| ^ மாணவர் கல்வி வட்டம் | நெல்லியடி | 1270 | 00 |
| ^ திரு K நித்தியானந்தன் | குப்பிளான் | 50 | 00 |
| ^ வர்த்தகர்சங்கம் | நவீனசந்தை | 500 | 00 |
| ^ திரு S வசந்தன் | KKS | 50 | 00 |
| ^ மசில் தெல்லிப்பழை | | 100 | 00 |
| ^ உதயன் அச்சகம் (ஊழியர்கள்) | | 854 | 00 |
| ^ A· நல்ல அபிமானி | | 250 | 00 |
| ^ திருமதி, G, அமரரட்ணம் | VVT | 2000 | 00 |
| ^ திரு, நல்லநாதன் | | 134 | 00 |
| ^ AC/L நலன் புரிச்சங்கம் | சுன்னாகம் | 1000 | 00 |
| ^ லியோ கிளப் | யாழ் | 7100 | 00 |
| ^ உதயன் (வெளியீடு) | யாழ்ப்பாணம் | 403 | 50 |
| ^ திரு, T ரட்ணராசா | உரும்பிராய் | 50 | 00 |
| V. காளிமுத்து | யாழ் | 500 | 00 |
| லிங்கநாதன் | KKS | 500 | 00 |

## ஆவணி 1988

| | | | |
|---|---|---|---|
| திருமதி T. தம்பிராசா | சுன்னாகம் | 500 | 00 |
| திரு P. நடராஜா | யாழ்ப்பாணம் | 1000 | 00 |
| லயன்ஸ் கிளப் | மானிப்பாய் | 1000 | 00 |
| A நல்ல அபிமானி | கொழும்புத்துறை | 500 | 00 |
| திரு பிலிப் லக்ஸனம்பேர்க் | | 5000 | 00 |
| Dr. M. குணரட்ணம் | யாழ். ஆஸ்பத்திரி | 2000 | 00 |
| ,, A. S. நடராஜா | வட்டுக்கோட்டை | 750 | 00 |
| செல்வி கே. சிதம்பரப்பிள்ளை | வட்டுக்கோட்டை | 500 | 00 |
| திரு S. பழனிநாதன் | வேலணை | 750 | 00 |
| ,, J. A. ஸ்ரீபன் | யாழ்ப்பாணம் | 1000 | 00 |
| ,, T. அழகேந்திரா | தாவடி | 2000 | 00 |

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| சென்றல் கிளினிக், யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | 500 | 00 |
| x அம்பிகாபதி, பெரியகடை, யாழ்ப்பாணம் | | 500 | 00 |
| திருமதி T. தம்பிராசா | சுன்னுகம் | 500 | 00 |
| திரு V. இளங்குமரன் | K.K.S. | 1000 | 00 |
| ,, ரட்ணராஜா | உரும்பிராய் | 200 | 00 |
| செல்வி V. லோகேஸ்வரி | தெல்லிப்பளை | 500 | 00 |
| திருமதி P. V. வசந்தகுமாரி | கோண்டாவில் | 500 | 00 |
| செல்வி D. தேவதாசன் | அளவெட்டி | 100 | 00 |
| திரு P. யோகநாதன் | யாழ்ப்பாணம் | 300 | 00 |
| திருமதி மீனு ஸ்ரீதரன் | (USA) | 3280 | 00 |
| வைத்திய படிப்புகள் பகுதி VI (1983) | | 200 | 00 |

## புரட்டாதி 1988

| | | | |
|---|---|---|---|
| திரு பிரேமஜோதி | சுன்னுகம் | 150 | 00 |
| ,, S. ஜோர்ஜ்ராசா | வசாவிளான் | 200 | 00 |
| ,, S. கனகலிங்கம் | சாவகச்சேரி | 1000 | 00 |
| திரு. S. யோகராஜா | யாழ்ப்பாணம் | 300 | 00 |
| ,, N. ஜீவசுதன் | தெல்லிப்பளை | 50 | 00 |
| சுறப்ட்கியர் அன்ட் ஸ்ரவோட்சையர் தமிழ் சங்கம் (UK) | | 54,475 | 00 |
| றெட்பானு | மட்டக்களப்பு | 9000 | 00 |
| அன்னையர் முன்னணி | சுண்டிக்குளி | 1000 | 00 |
| திருமதி B. சிவதாசன் | அவுஸ்திரேலியா | 1000 | 00 |
| Dr. திருமதி கணேசமூர்த்தி | யாழ்ப்பாணம் | 1000 | 00 |
| திரு S. சிவகுமாரன் | கைதடி | 1000 | 00 |
| ,, J. ஜெயகுமார் | கொக்குவில் | 1000 | 00 |
| ,, A. C. பௌசுல் ஹக் | யாழ்ப்பாணம் | 1000 | 00 |
| திரு. பிலிப் | லக்ஸ்ஸெம்பேர்க் | 1666 | 00 |
| ,, ரெபெட் ஸ்நெல் | ,, | 6666 | 00 |
| மெற்றோ ஸ்ரீல் இண்டஸ்றீஸ் | யாழ்ப்பாணம் | 500 | 00 |
| Dr. P. அருளானந்தன் | யாழ். வைத்தியசாலை | 2642 | 50 |
| வைத்திய மாணவர் பகுதி (2) 1983 | | 200 | 00 |
| திரு S. துரைரட்ணம் | கொட்டடி | 1000 | 00 |
| ,, S. ஜெயசீலன் | அவுஸ்திரேலியா | 7500 | 00 |

## ஐப்பசி 1988

| | | | |
|---|---|---|---|
| திரு. T. ஜெயகுமார் | கொக்குவில் | 2000 | 00 |
| செல்வி சிவதர்ஷினி | அளவெட்டி | 600 | 00 |
| யூனைட்டெட் கிளப் | லண்டன் | 5000 | 00 |
| திரு. P. சின்னராசா | KKS | 1000 | 00 |
| திரு. A. கிருணசாமி, | யாழ்ப்பாணம் | 500 | 00 |
| நீர்ப்பாசன இலாகா, தமிழ் கலாச்சார சங்கம், கொழும்பு | | 1000 | 00 |
| திரு. P. சுப்பிரமணியம் | அரியாலை | 500 | 00 |
| ,, நஜீமுதீன் | கரவெட்டி | 200 | 00 |
| ,, திருநாவுக்கரசு | உரும்பிராய் | 500 | 00 |

கார்த்திகை 1988

| | | |
|---|---|---|
| I. ராசதுரை பருத்தித்துறை | 2500 | 00 |
| திரு. M. கந்தையா வட்டுக்கோட்டை | 3000 | 00 |
| Dr. W. A. ரஞ்சிதமலர் (USA) | 15000 | 00 |
| Dr. T. சாந்தகுமார், இலங்கை தமிழ்ச் சங்கம், அவுஸ்., | 20,540 | 00 |
| திரு P. ஜெயசுந்தரம் லக்சம்பேர்க் | 27,900 | 00 |
| செல்வி B. தங்கராஜா மீசாலை | 2500 | 00 |
| அர்ச். அன்னம்மாள் கோவில் மானிப்பாய் | 1000 | 00 |
| திருமதி பூமணி சுன்னுகம் | 200 | 00 |
| Dr. K. சிவகணேசன் (UK) | 2800 | 00 |
| திரு. திருமதி மனோ அமரசிங்கம் யாழ்ப்பாணம் | 2000 | 00 |
| திரு K. குலசிறி யாழ்ப்பாணம் | 1000 | 00 |
| ,, K. தட்சணாமூர்த்தி கரவெட்டி | 1000 | 00 |
| ,, M. கோபாலரட்ணம் சுன்னுகம் | 1000 | 00 |
| செல்வன் சுசன்த், யாழ். வைத்தியசாலை | 1000 | 00 |

மார்கழி 1988

| | | |
|---|---|---|
| திரு K. சபாநடேசர் அவுஸ்திரேலியா | 1934 | 00 |
| ,, K. விக்னேஸ்வரதாசன் மேற்கு ஜெர்மனி | 159,249 | 50 |
| ரொட்டறி கிளப் திருகோணமலை | 1000 | 00 |
| திருமதி அருள்வதனி VVT | 1000 | 00 |
| திரு S. M. V. திசாநாயகம் யாழ்ப்பாணம் | 1000 | 00 |
| T. R. R. O. லிமிட்., வேலணை | 1500 | 00 |
| செல்வி S. கொன்செப்ரா இளவாலை | 400 | 00 |
| A நலம்விரும்பி யாழ்ப்பாணம் | 3000 | 00 |
| திரு. டொனல்ட் ஞானக்கோன் கொழும்பு | 3250 | 00 |
| Dr. S. பொன்னம்பலம் யாழ். வைத்தியசாலை | 2000 | 00 |
| Dr. M. குணரட்ணம் யாழ். வைத்தியசாலை | 1000 | 00 |
| திரு. K. பாலேந்திரா யாழ்ப்பாணம் | 100 | 00 |
| அகதிகள் புனர்வாழ்வு நிதி 1983 | 2500 | 00 |

---

x 1ம் ஆண்டு நிறைவுவிழா அன்பளிப்புக்கள்

A உதயன் பத்திரிகை மூலம் கிடைத்த அன்பளிப்புகள்

★

# அன்பளிப்பாளர் அறிக்கை

தை 1989

| | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|
| S. A. பர்ணந்து | | | 200 | 00 |
| C. ராசையா அவுஸ்திரேலியா | | | 1000 | 00 |
| K. குருஞானசுந்தரம் | நல்லூர் | | 50 | 00 |
| S. கணேஷமூர்த்தி | சாவகச்சேரி | | 25 | 00 |
| P. வில்வராஜசிங்கம் | விஸ்வமடு | (JJF 204/1/89) | 150 | 00 |
| V. ஐயாசாமி சர்மா | தெல்லிப்பளை | | 800 | 00 |
| V. N. கமலநாதன் | கல்முனை | | 50 | 00 |
| ஜிம்மா - அலி – C. இஸ்லாம், | யாழ். | (JJF 208/1/89) | 1000 | 00 |
| S. சாந்தகுமார் | நவாலி தெற்கு | (JJF 206 / 1 / 89) | 200 | 00 |
| செல்வி A. இதயா | கோண்டாவில் | | 500 | 00 |
| Dr. P. சின்னப்பா | யாழ்ப்பாணம் | | 2000 | 00 |
| யுனைட்டெட் கிளப் லண்டன், | டாக்டர் கருணாகரன் மூலம் | | 25000 | 00 |
| T. வைரமுத்து | மேற்கு ஜெர்மனி | 44 DM | | |
| G. யோகலிங்கம் | ,, | 44 DM | | |
| K. யோகராஜா | ,, | 44 DM | | |
| N. யோகேந்திரா | ,, | 46 DM | | |
| T. ஜெயபிரகாஸ் | ,, | 44 DM | | |
| P. தேவாதிரன் | ,, | 44 DM | | |
| W. A. எலியாஸ் | ,, | 44 DM | | |
| N. முத்துலிங்கம் | ,, | 44 DM | | |
| N. சிவகுமார் | ,, | 44 DM | | |
| M. K. உதயகுமார் | ,, | 102 DM | | |
| E. கிருபாகரன் | ,, | 150 DM | | |
| | | | 11969 | 00 |
| செல்வி பத்மினி செல்வராசா | யாழ்ப்பாணம் | | 5000 | 00 |
| இலங்கை தமிழ் சங்கம், விக்ரோரியா கூட்டுறவில்லாதது, | (அவுஸ்திரேலியா | Aus. D. 1000) | 27754 | 00 |
| திருமதி K. ஆழ்வாப்பிள்ளை | கொழும்பு | | 18000 | 00 |
| R. R. F. 83 | யாழ்ப்பாணம் | (JJF 214/2/89) | 1000 | 00 |
| S. ஸ்ரீஸ்கந்தவரதன் | ஏழாலை | (JJF 211/1/89) | 250 | 00 |
| U. இளங்குமரன் | காங்கேசன்துறை | | 200 | 00 |
| திருமதி R. சிங்கம் | அவுஸ்திரேலியா | | 16000 | 00 |
| V. சிவபாக்கியம் | மூதூர் | (JJF 212/1/89) | 1000 | 00 |
| K. வேலுப்பிள்ளை | தெல்லிப்பளை | | 100 | 00 |
| A. ஸ்ரீகுமார் | ஏழாலை | | 350 | 00 |

ரூ. ச.

## மாசி 1989

| | | |
|---|---|---|
| திருமதி கனகரத்தினம் அரியாலை | 1000 | 00 |
| K. ரவீந்திரன் நோர்வே | 1000 | 00 |
| Dr. P. அருளானந்தம் யாழ்ப்பாணம் | 4000 | 00 |
| திருமதி நீலா செனட் அவுஸ்திரேலியா | 1000 | 00 |
| திருமதி L. P. N. சிங்கம் கொழும்பு | 1000 | 00 |
| T. மயில்வாகனம் வண்ணார்பண்ணை | 1000 | 00 |
| M. ஜீவசுதன் தெல்லிப்பழை (JJF 215/2/89) | 1000 | 00 |
| S. யோகராஜா யாழ்ப்பாணம் | 50 | 00 |
| S. கஜநந்தன் கீரிமலை | 300 | 00 |
| தமிழ் ஈழம் சங்கம் அவுஸ்திரேலியா | 138,80 | 00 |
| T. R. R. O. லிமிட்., யாழ்ப்பாணம் (JJF 208/1/89) | 2000 | 00 |
| திரு. M. ஆனந்தராஜா சுண்டிக்குளி (JJF 216 /2/89) | 1000 | 00 |
| S. ஜோர்ஜ்ராஜா வயாவிளான் | 125 | 00 |
| M. ஜீவசுதன் தெல்லிப்பழை | 50 | 00 |
| M. பத்மநாதன் மானிப்பாய் | 25 | 00 |
| S. ஜோர்ஜ்ராசா தெல்லிப்பழை | 25 | 00 |
| M. ஜீவசுதன் தெல்லிப்பழை | 40 | 00 |
| R. R. F F. 83 யாழ்ப்பாணம் (JJF 65/1/88) | 1000 | 00 |
| திரு. சதானந்தன் வெள்ளவத்தை, கொழும்பு | 1000 | 00 |
| A. S. துரைசாமி கொழும்பு - 5. | 1000 | 00 |
| தமிழ் கிறிஸ்தவ சமாஜம், விக்டோரியா அவுஸ்திரேலியா | 11462 | 00 |
| R. R F. 83 யாழ்ப்பாணம் (JJF 207/1/89) | 1000 | 00 |
| திருமதி R. நீற்றும்மா வயாவிளான் | 300 | 00 |
| செல்வன் N. கோகுலன் பளை | 300 | 00 |
| R. பிரபாகரன் சுன்னாகம் | 250 | 00 |
| T. R. R. O. லிமிட்டெட். யாழ்ப்பாணம். | 1000 | 00 |
| திருமதி M. ஆனந்தராஜா சுண்டுக்குளி | 1000 | 00 |

## பங்குனி 1989

| | | |
|---|---|---|
| செல்வி N. சோபனாதேவி பருத்தித்துறை | 250 | 00 |
| S. குணரட்ணம் உரும்பிராய் | 50 | 00 |
| M. பத்மநேசன் மானிப்பாய் | 250 | 00 |
| S. கோடீஸ்வரன் தெல்லிப்பழை | 250 | 00 |
| செல்வி மேரி மற்றில்டா யாழ்ப்பாணம் (JJF 218/3/89) | 500 | 00 |
| N. பரமசோதி பரந்தன் | 300 | 00 |
| R, R.F. 83 யாழ்ப்பாணம் (JJF 217-3-89) | 1000 | 00 |
| வண. A. J. செல்வரட்ணம் அவுஸ்திரேலியா | 2600 | 00 |
| றெட்பானா மட்டக்களப்பு ((JJF 180-184/10/88) | 5000 | 00 |
| தமிழ்பேசும் மக்கள் குழு லண்டன் (பவுண் 1000) | 56675 | 00 |
| திருமதி நீற்ரு பொன்னம்பலம் சுண்டிக்குளி | 2500 | 00 |

| | | |
|---|---|---|
| M. செல்லத்துரை கிளிநொச்சி (JJF 224-4-89) | 300 | 00 |
| திருமதி S. கந்தையா சுன்னாகம் (JJF 226:4-89) | 1000 | 00 |
| திருமதி M. சரஸ்வதி புன்னாலைக்கட்டுவன் (JJF 227-4-89) | 1000 | 00 |
| செல்வி துரைராஜா அளவெட்டி | 400 | 00 |
| பௌசெல் ஹக் யாழ்ப்பாணம் | 50 | 00 |
| T. R. R. O. லிமிட்டெட் யாழ்ப்பாணம் | 1000 | 00 |
| A. பரராஜசிங்கம் ஒஹியா (JJF 220-5-89) | 1000 | 00 |
| செல்வி S. ஜெகநாதன் அரியாலை | 200 | 00 |
| S. மோகன்ராஜ் இணுவில் | 250 | 00 |
| S. காசிராஜா | 300 | 00 |
| செல்வி A. சிவபாதசுந்தரம் வல்வெட்டித்துறை | 25 | 00 |
| செல்வி A. இதயா கோண்டாவில் | 50 | 00 |
| செல்வன் A. N. குஞ்சே தலைமன்னார் | 100 | 00 |
| திருமதி சோமசர்மா கைதடி, நுணுவில் | 500 | 00 |
| அரசாங்க அதிபர் வவுனியா (JJF 231-5-89) | 1000 | 00 |
| தமிழ் கத்தோலிக்க சமாஜம் மெல்பேன் | 25000 | 00 |
| A. சின்னத்துரை V. V. T. | 200 | 00 |
| V. I. சர்மா தெல்லிப்பளை | 250 | 00 |
| S. குணரட்ணம் தெல்லிப்பளை | 200 | 00 |
| S. மகாராஜா கரவெட்டி | 5 | 00 |
| அன்னையர் முன்னணி யபழ்ப்பாண்ம் | 50 | 00 |
| திருமதி E T. மேதர் யாழ்ப்பாணம் | 35 | 00 |
| S. சிவநாதன் யாழ்ப்பாணம் | 27 | 00 |
| விக்டர் மலர் துரைசாமி அவுஸ்திரேலியா | 1000 | 00 |
| கினட்லின் அழகக்கோன் (Aus. D) | 300 | 00 |
| சிட்னி தமிழ் கிறிஸ்தவ நட்புறவுச் சங்கம் அவுஸ்திரேலியா (Aus. D) | 150 | 10 |
| R. R. F. 83 யாழ்ப்பாணம் | 1500 | 00 |
| A. வேலன் யரழ்ப்பாணம் | 650 | 00 |

## பொருள் அன்பளிப்புகள்

| | | |
|---|---|---|
| மஸ்கன்ஸ் லிமிட்., 18 No. அஸ்பெஸ்டர் கூரைத்தகடுகள் பெறுமதி | 4200 | 00 |
| சிறுவர் பாதுகாப்பு நிதி அரிசி, மைசூர் பருப்பு | 2245 | 00 |
| வண. கோவிந்தராஜ் மெதடிஸ்ற் தேவாலயம், யாழ்ப்பாணம். 1 மூடை அரிசி | 980 | 00 |
| A. ருத்திரலிங்கம் (சமோகன் லிமிட்.) 2 பைக்கற் சிமெந்து | 220 | 00 |
| M. P. C. S. தெல்லிப்பளை அரிசி, மாவு, சீனி, பருப்பு, லக்ஸ்பிறே | 3041 | 00 |
| அலுவலக உபபொருட்கள் லிமிட்., யாழ்ப்பாணம் 1 உருக்கு அலுமாரி (லாச்சியுடன்) | 1800 | 00 |
| செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணம் 12½ மீற்றர் பக்றிச்ரோஸ் துணி, மருந்துகளும் | | |

| | | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| K. திருநாவுக்கரசு | திரியாய் | (JJF 220-1-89) | | 2500 | 00 |
| T. R. R. O. லிமிட்டெட் | யாழ்ப்பாணம் | (JJF 209-1-89) | | 1000 | 00 |
| T. R. R. O. | " " | (JJF 159-8-88) | | 1000 | 00 |
| A. செந்தீஸ்வரன் | தொண்டமானாறு | | | 300 | 00 |
| T. R. சின்னையா | யாழ்ப்பாணம் | | | 30 | 00 |
| A. பத்மதேவா | மானிப்பாய் | | | 250 | 00 |
| L. தீபன் | அளவெட்டி | | | 65 | 00 |

## சித்திரை 1989

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிறிஞேறி அலோஷியஸ் | கொழும்பு - 3 | | | 2500 | 00 |
| S. சுப்பிரமணியம் | தர்மபுரம் | | | 250 | 00 |
| B. அமிர்தநாதன் | சில்லாலை | (JJF 221-4-89 | | 1000 | 00 |
| M. மரியாம்பிள்ளை | மேற்கு ஜெர்மனி | | 50 DM | | |
| K. வில்சன் | " | | 100 00 | | |
| R. ரவீந்திரன் | " | | 20 DM | | |
| A. தெய்வேந்திரன் | " | | 50 DM | | |
| S. முருகதாஸ் | " | | 50 DM | | |
| தங்கராசா | " | | 100 DM | | |
| V. தியாகலிங்கம் | " | | 50 DM | | |
| A. F. வில்பிறெட் | " | | 50 DM | | |
| S. செல்வபாஸ்கரன் | " | | 50 DM | | |
| R. மனோகரன் | " | | 50 DM | | |
| S. V. மகாதேவன் | " | | 50 DM | | |
| N. சிங்கராயர் | " | | 50 DM | | |
| K. கனகலிங்கம் | " | | 100 DM | | |
| K. கைலங்கிரிநாதன் | " | | 100 DM | | |
| N. A. அருமைநாயகம் | " | | 50 DM | | |
| M. சிவலிங்கம் | " | | 50 DM | | |
| T. சத்தியமூர்த்தி | " | | 50 DM | | |
| K. சுந்தரலிங்கம் | " | | 75 DM | | |
| S. நடராஜா | " | | 50 DM | | |
| | | | | 19665 | 00 |
| பிபில பிரிவு | சிட்னி - அவுஸ்திரேலியா | (அவுஸ். D 60) | | 1493 | 00 |
| S. ஜெயகாந்தன் | ஆனைக்கோட்டை | | | 1000 | 00 |
| K. ஞானக்குமார் | தெல்லிப்பளை | (JJF 222-4-89) | | 1000 | 00 |
| A. பிரபாகரன் | சுன்னாகம் | | | 75 | 00 |
| T. R. R. O. லிமிட்டெட் | யாழ்ப்பாணம் | (JJF – 274/4/80) | | 2000 | 00 |
| செல்வி நாகேஸ்வரி | மாதகல் | | | 75 | 00 |
| S. ராசகிளி | சுன்னாகம் | | | 50 | 00 |
| M. தேவபாலன் | ஊர்காவற்றுறை | | | 25 | 00 |
| S. கைலேஸ்வரன் | கொக்குவில் | (JJF 123-4-89) | | 1000 | 00 |

# எமது முதலாம் ஆண்டு விழாவுக்கு அன்பளிப்புச் செய்தோர் விபரம்

M. P. C. S. யாழ்ப்பாணம் கதிரைகள், கூடாரம்
ஏஜன்ஸ், பிரதான வீதி, யாழ்ப்பாணம்
விளையாட்டு மைதானத்துக்கான அலுமினிய பந்தல்
நாயகம்ஸ் ஸ்ரோர்ஸ், சுண்டுக்குளி ஒலி அமைப்பு இயந்திரம் 2 வாகனம்
ஞானம்ஸ் ஸ்ருடியோ, 10 போட்டோ புளக்குகள்
லேடன் காமன்ஸ் 2 டசின் பனியன்கள்
M/s முகம்மதலி அப்துலலி, யாழ்ப்பாணம் 1 பைசிக்கிள் வண்டி
M/s ராஜு ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம் 1 பைசிக்கிள் வண்டி
வில்லியம் ஹாவே ஞாபகார்த்த வைத்தியசாலை, யாழ்ப்பாணம்
இல. 27 துவாய்கள்
லங்கா சீமெந்து லிமிட்., K.K.S. 1 போட்டி வெற்றிக் கிண்ணம்
ப. நோ. கூ. சங்கம் இல. 1 போட்டிக் கிண்ணம்
M. P. C. S, லிமிட்., தெல்லிப்பளை அம்புலன்ஸ் சேவை
செஞ்சிலுவைச் சங்கம். யாழ்ப்பாணம்.
ரூபா 1000/- பெறுமதியான 80 உடுப்புப் பொதிகள்

மேற்கூறிய அன்பளிப்புப் பார்சல்களுக்கும், மேலும் உணவுப் பொதிகள், பாலுணவு, தேங்காய், மரக்கறி, கருவாடு, முழங்கைப் பொருத்துகள், சுற்றுத்துணி மற்றும் இதர பொருட்களை அடிக்கடி அன்பளிப்புச் செய்த அன்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Dr. திருமதி S. தெய்வேந்திரா
பொருளாளர்

★

## எங்கள் விருந்தாளிகளின் குறிப்பு புஸ்தகத்தில் இருந்து
(தமிழாக்கம் செய்யப்பட்டது)

மனிதப் பெறுமானத்தின் கோணத்தில் பார்க்கும்போது வலது குறைந்தோர்க்கு இது ஒரு அருமையான தொழிற்சாலையாகும். வரப்போகும் ஆண்டுகளில் இது மிகவும் ஓர் உன்னத வளர்ச்சி அடையுமென நான் நம்புகிறேன்,

**தளபதி O. P. பஸ்ரீச்சா**
*உதவிப் பணிப்பாளர்*
*மருத்துவ சேவகர்*
*30 - 09 - 1988*

---

அர்ப்பணிக்கப்பட்ட மக்களால் செய்யப்படும் மகத்தான தொழில் ஒரு சிறு பகுதியினரால் நடாத்தப்படுகிறது, இந் நிறுவனத்திற்கு நானும் ஏதாவது செய்திருக்கலாமென எண்ணுகிறேன்.

**அ. கௌஷிக்**
*104, ராஜ பூங்கா*
*ராம் ஹாலி நம் - 5*
*ஜெய்ப்பூர் - 302004*
*01 - 10 - 88*

---

எனது வருகை மிகவும் ஆழமாக மனதில் பதிந்துள்ளது. குறுகிய காலத்தில் பாரிய சேவைகள் நடைபெற்றுவிட்டன. தொழில் வாய்ப்பே கிடையாதென்றிருந்த சில மக்களுக்கு தொழில் வாய்ப்பளித்தமை மெச்சத்தக்க ஒரு சிறப்பு அம்சமாகும். குறைந்த வளங்களுடன் கூடிய சேவை நடைபெற்றிருக்கிறது. மக்கள் பலருக்கு உதவி கிடைத்திருக்கிறது.

எனது வருகைக்கு நன்றி
மாமா

**மரியன் பேச்**
SCF ஐக்கிய இராட்சியம்
*10, வாட் பிளேஸ்*
கொழும்பு -7
SCF யாழ்ப்பாணம்
*10 - 11 - 88*

இது ஓர் மிகவும் உயிரோட்டமான வருகை. இச் சமுதாயத்திற்கு நீங்கள் ஆற்றும் இப் பெரும் சேவைக்கு யாழ்ப்பாண மக்கள் மிகவும் நன்றி உடையவர்களாக இருப்பார்களென நம்புகிறேன்.

டேவிட் லெவி / ஸ்ரீபன் சக்ரோர்
BBC லண்டன்
29 - 11 - 88

---

எனது இரண்டாவது வருகை திறப்புவிழாவில் பங்கு பற்றிய பின்பு 300 பேர் வரையில் பதிவுசெய்யப்பட்டுள்ளார்கள், 216 பேர்களுக்கு அவயவங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இது ஓர் சிறந்த சாதனையாகும். இத் திறமையான தொழில் தொடர்ந்து நடைபெறவேண்டும்,

டாக்டர் ஆர். பேர்சன்ஸ்
இயக்குனர் SCF ஐக்கிய இராட்சியம்
10, வாட் பிளேஸ்
கொழும்பு - 7
8 - 3 - 89.

---

## சிந்தனைக்கு ஓர் விடயம்

உலகம் ஒன்று. ஆதலினால் யாவரையும் உன்னைப் போல் நேசி வேறு ஒருவருக்கு தீமை செய்யும் பொழுது அது உனக்கே தீமை செய்வதாகும். மற்றவரை நேசிக்கும் போது அது உன்னையே நேசிப்பதாகும்.

மற்றவருக்கு சேவை செய்வது மற்றையோருக்கு உதவுவதாகும் உலகிற்கு நன்மை செய்வதாகும். உலகிற்கு நாம் ஏன் நன்மை செய்ய வேண்டும்? உலகில் உள்ளோர்க்கு நாம் செய்யும் சேவை நமக்கு உண்மையாக ஆற்றும் உதவியாகும். ஓர் ஏழைக்கு ஐந்து சதம் கொடுத்து விட்டேன் என்று பெருமிதம் அடையாதே. அவ் ஏழை வந்ததனால் தானே அவனுக்கு கொடுத்த கொடையால் எனக்கு நான் நான் நன்மை செய்கிறேன் என பெருமைப்படு. பெறுபவன் அல்ல. கொடுப்பவனே ஆசீர்வதிக்கப்படுகிறான். உன்னுடைய தர்மமும் இரக்கமும் உலகில் நிலைபெறச் செய்வதற்காக நன்றியுடையவனாக இரு. அதனால் நீ தூய்மையும் பூரணமும் அடைகிறாய். நீ உதவி செய்பவனை கடவுளாக நினைத்து அந்த மனிதனுக்கு நன்றி உடையவனாக இரு.

— சுவாமி விவேகானந்தர்

# பொதுமக்களாகிய நீங்கள் எவ்வாறு எமக்கு உதவலாம்.

1. அங்கவீனர் ஒருவரை (கை அல்லது கால்) எங்கு சந்திபீர்களாயினும் அவரை எம்மோடு தொடர்பு கொள்ளச் செய்யவும்.

குறிப்பு:- கை வேண்டியோர் பதிவு செய்து வைத்தால் உதிரிப்பாகங்கள் கிடைத்ததும் அவர்களுடன் தொடர்பு கொண்டு செயற்கை கைபொருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

2. எம் திட்டத்திற்கு அன்பளிப்புச் செய்யப்படும் ரூபா1000 ஒரு ஜெய்ப்பூர் செயற்கை காலை வேண்டிய ஒரு நபருக்கு நன்கொடை செய்ய உதவும். வேண்டுமானல் உங்களுக்குப் பொருத்தப்பட்ட நபரின் பெயரும் விலாசமும் கொடுத்து அறிமுகஞ் செய்யலாம்.

3. செயற்கைக் கை ஒன்றிற்கு ரூபா 5000 அன்பளிப்புச் செய்து உதவலாம். சகல அன்பளிப்புகளும் வருமான வரியிலிருந்து விலக்கப்படும்.

4. எந்தவொரு வேலைநாட்களில் எமது தங்கு விடுதியில் செயற்கை அங்கம் பொருத்திப் பயிற்சி பெறும் 10 நபர்களுக்குத் தேவையான உணவு பக்கட்டுக்களை முன்னறிவித்தலுடன் அன்பளிப்பு செய்யலாம். பிறந்தநாள் வைபவங்கள் மங்கள வைபவங்கள் மரணித்த ஒருவரின் நினைவிற்காக எமது அங்கவீனர்களை நினைவிற் கொள்ளவும்.

5. பால்மா, தேயிலை, கோப்பி, பருப்பு, மாவு, சீனி, தேங்காய், அரிசி, அப்பளம், சோயா, மரக்கறிவகைகள் அன்புடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

6. பணஉதவி சிறியதோ பெரியதோ உங்களது தியாகம் அங்கவீனருக்கு நன்மையளிக்கும்.

காசோலை கொழும்பு நட்புறவுச் சங்கம் யாழ்கிளை என்ற முகவரிக்கு நேரிலோ தபால்மூலமோ அன்பளிப்பு செய்யலாம்.
ஒவ்வொரு அன்பளிப்புக்கும் பற்றுச்சீட்டு அனுப்பி வைக்கப்படும்.

கடவுள் எம்மை இந்நிலையில் படைத்ததற்கு நாம் என்றும் நன்றி உடையவனுய் இருப்பதை மறக்கக்கூடாது.

★



ஜெய்ப்பூர் நகரில் உள்ள S. M. S. மருத்துவமனையில் எமது முகாமையாளர் உன்னத தொழில்நுட்பவியலாளரான மாஸ்ரர் G என்று அழைக்கப்படும் ராம்சந்திர சர்மாவுடனும், டாக்டர் சத்தியேந்திர சர்மாவுடனும் தொழில் நுட்பம் பயிலும் பொழுது



சென்ற ஆண்டு சைக்கிள் ஓட்டப்போட்டியில் பங்கு கொள்ளும் ஜெய்ப்பூர் கால் பாவனையாளர்கள் போட்டி ஆரம்ப வேளையில்

# எமது அடுத்த கட்ட நடவடிக்கைகள்



மீசாலையைச் சேர்ந்த T. பைகிறதி வயது 14 அவர்களிற்கு எமது தொழிற்சாலையில் காண்பூரில் தயாரிக்கப்படும் ''அலிம்கோ'' செயற்கை கை பொருத்தப்படுகின்றது.



மன்னாரைச் சேர்ந்த அன்ரனி நிமால் வயது 11 நோயினால் இடது கால் செயலற்றவர் கலிப்பரின் உதவியினால் நடை பயிலுகிறார்.



சைக்கிள் ஓட்டப் போட்டியில் முல்லைத்தீவைச் சேர்ந்த திரு. ம. செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் முதலிடம் பெற்று பரிசாக புதிய சைக்கிள் ஒன்றையும் வெற்றிக்கிண்ணத்தையும் எமது விசேட விருந்தாளியான பிரித்தானிய தூதரக அதிகாரியிடம் இருந்து பெற்றுக்கொள்கிறார்.



உலகதரிசன உத்தியோகஸ்தர்கள் செயற்கை அங்க பாவனையாளர் சங்கத்திற்கு உதவி செய்ய வருகை தந்தபொழுது சங்க உபதலைவர் திரு. பரமகுமார் மாலை சூடி கௌரவிக்கின்றார்.



உலகதரிசன உத்தியோகஸ்தரை பாவலையாளர் சங்க நிர்வாகிகள் திரு பரம்சோதி அவர்கள் மாலை சூட்டி கௌரவிப்பதையும் உபசெயலாளர் செல்வி ராதிகா சோமசுந்தரம் மாலையுடன் நிற்பதையும் காணலாம்.

புகைப்படங்கள்: டாக்டர் திருமதி கணேஷமூர்த்தி திரு. பிரான்ஸிஸ்

# எனது ஜெய்ப்பூர் விஜயமும் பயிற்சியும்

ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி எட்டாம் ஆண்டு மாசி மாதம் 17ந் திகதி யாழ். செஞ்சிலுவை சங்கத்தின் ஊடாக எமது தொழிற்சாலைக்கு உதவ வருகைதந்திருந்த இந்திய செஞ்சிலுவைச் சங்க உத்தியோகத்தரான DR. பிட்டம்பார்டயல் ( Chairman Rajastan State, Red Cross ) அவருடன் வந்த ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற் சாலை நுட்ப வியலாளரான முகமட் கான் அவர்கள் அன்று இக்கட்டான நிலையில், பல வகையான கஷ்டங்கள் மத்தியில் செயல்பட்டுவரும் எமது தொழிற்சாலையைப் பார்வை யுற்று, தொழிற்சாலைக்கு உடனடியாக தேவைப்படும் உதிரிப்பாகங்களாகிய, செயற்கைப் பாதங்கள், செயற்கை உபகரணங்கள் முதலியன அனுப்புவதாக உறுதி மொழி கூறி தொழிற்சாலை முகாமையாளரான என்னை இந்திய செஞ்சிலைவச் சங்கத்தினூடாக செயற் கைக்காலைப்பற்றி மேலும் பயிற்சி பெறுவதற்காக ஜெய்ப்பூருக்கு அனுப்பி பயிலுவதற்கு வேண்டிய வசதிகளை பொறுப் பேற்பார்கள் என்று வாக்குறுதி தந்தார்கள். பல மாதங்கள் கழித்து எமக்கு சில உதிரிப்பாகங்கள் யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக வந்து சேர்ந்தன. பயிற்சியைப் பற்றி எதுவித செய்தியும் குறிப்பிடப்படவில்லை.

இவ்வருட தொடக்கத்தில் எமது காரியாலய நிர்வாகத்தர் எம் செலவில் ஜெய்ப்பூர் சாய்மான்சிங் ( S.M.S )Medical College Hospital என்ற வைத்தியசாலையில் உள்ள ( R.R.C ) Research and Rehabilitation Centre ஆராய்ச்சி புனர்வாழ்வு நிறுவனத்தின் உயர் அதிகாரியான DR . Kasliwal உடனும், செயற்கை அங்கம் பொருத்தும் நிறுவன மாகிய Viklang Mahaveer Smaiti செயலாளரான DR. Metha அவர்களுடனும் தொடர்பு கொண்டு எனது 3 வார பயிற்சியை ஏற்பாடு செய்தனர்.

மாசி மாதம் 1ம் திகதி கொழும்பு சென்று சகல பயண அனுமதிப்பத்திரங்களையும் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்தேன். எமது தலைமை காரியாலயத்தின் செயலாளரான திருமதி. சுவர்ண பேர்டினன்ட் அவர்கள் ஜெய்ப்பூர் செயற்கைப் பாதக்கை நிர்ணயித்த பிதாவென கருதப்படும் DR. P. K செத்தியை காணுவதற்கு எனக்கு ஓர் அறிமுகக் கடிதத்தையும் தந்து உதவினார். சனிக்கிழமை இரவு 11.30 மணியளவில் நான் கட்டு நாயக விமானத் தளத்தில் நின்று சென்னையை நோக்கி எயார் லங்கா விமான மூலம் முதல் கட்டமான பிரயாணத்தை மேற் கொண்டேன். ஞாயிறு அதிகாலை சென்னையை அடைந்து பரிஸ் நகரில் ஒரு தங்கு விடுதியில் தங்கி ஏறக்குறைய 2250 K.M தூரத்தில் உள்ள டெல்கி தலைநகருக்கு செல்வதற்காகப் புகையிரதப் படுக்கை ஆசனத்துக்குச் சீட்டுப் பதிவு செய்தேன். மூன்றும் நாள் புதன்கிழமை கிருண்ட்றங் எக்ஸ்பிரஸ் [G. T. Exprss] இல் எனக்கு உறங்கு ஆசனம் கிடைத்தது. மாலை 5.30 மணியளவில் சென்னை மத்திய புகையிரத நிலையத்தைவிட்டு புதுடில்லிநோக்கி புகையிரதம்புறப்பட்டது. ஒருபெரிய அதிர்ச்சி என்னவெனில் என்னுடன் இருந்த ஐந்து பயணிகளும் தாங்கள் கொண்டு வந்திருந்த இரும்புச் சங்கிலிகளை எடுத்து தங்கள் பொதிகளினூடாகச் செலுத்தி படுக்கை ஆசனத்தின் கொழுக்கியுடன் சேர்த்து பூட்டினர். என் அருகில் இருந்தவர் ஆங்கிலத்தில் என்னிடம் வினவிய போது நான் ஆயத்தமாக வரவில்லை. சுருங்கக் கூறின் நான் இலங்கை வாசி. முதற்தடவையாக வட இந்தியா நோக்கி செல்கிறேன் என்று எடுத்துக் கூறினேன். அவர் பொதிகளை பாதுகாக்க இப்படி செய்வது வழக்கம் ஜாக்கிரதையாக இருக்கும் படி கூறினார், இத்தோடு நாங்கள் ஒருவரோடொருவர் சம்பாஷிக்கத் தொடங்கி நேரத்தைக் கடத்தினோம். 36 மணித்தியாலத்தின் பிற்பாடு பல மாகாணங்களுக்கூடாக சென்ற

புகையிரதம் வெள்ளி அதிகாலை ஆறு மணிக்கு புதுடில்லியை வந்து அடைந்தது. அங்கிருந்து வெளியேறி ஓட்டோ மூலம் 5 K.M தொலைவிலுள்ள டில்லி நகருக்கு வந்து 450 K M தொலைவில் உள்ள ஜெய்ப்பூர் நகரை நோக்கி மறு புகையிரதத்தை எடுத்தேன். காலை 9.00 மணிக்கு புறப்பட்ட கடுகதி பற்றைக்காடும், வரண்ட பிரதேசங்களினூடாக சென்று மாலை 5.30 மணியளவில் அழகிய ஜெய்ப்பூர் நகரை வந்தடைந்தது. என்ன அதிர்ச்சி! அழகிய கட்டடங்கள் சனப்புழக்கம், வாகனங்கள் நிறைந்திருந்தன. ஓர் ஓட்டோ மூலம் S. M. S மருத்துவசாலையை வந்தடைந்தேன். இங்கு நான் என்னை அறிமுகப்படுத்தி, எனக்கு கொடுக்கப்பட்ட படுக்கை அறைக்கு வந்து ஸ்நானம் செய்து, உறங்கி எனது நான்கு நாள் பயணக்களையைப் போக்கினேன்.

மறு நாள் காலை R.R.C அதிபரான DR காஸ்லிவால் அவர்களை சந்தித்து என்னை அறிமுகம் செய்து வைத்தேன். அவர் எங்கள் யாழ் தொழிற்சாலை விபரங்கள் யாவற்றையும் நன்கு அறிந்து கொண்டு அவருக்கு உதவியாளரான DR. திருமதி மடு என்பவரை அறிமுகம் செய்து வைத்ததும் அவர் என்னை அழைத்துச் சென்று தொழிற்சாலை போர்மனை ஜெய்ப்பூர் பாத அச்சு நிபுணரான ஒம் பிரகாஷ் சர்மா என்பவரை அறிமுகப் படுத்தி தொழில் நுட்பங்கள் பற்றி கலந்து உரையாடினோம். பின்னர் நேரிலும் சில கால் பொருத்தியவர்களுடன் நுண்துறை பற்றி வினவினேன் அவர்கள் பல வருட கால அனுபவமுற்றவர்கள் எங்கள் திறமையை கண்ணுற்று வியப்புற்றனர். நான் இங்கிருந்து கொண்டு சென்றிருந்த புகைப்படங்கள் விசேஷமாக சயிம்ஸ் ( Symes ) கால் உள்ளவர் களுக்கு ஜெய்ப்பூர் பாதத்தை குடைந்து செய்த முறைகள் அவர்களை கவர்ந்து கொண்டன. இப்படிப்பட்டவர்களுக்கு அங்கு விஷேச பாதங்கள் உருவாக்குவதே வழக்கம், அதற்கேற்ற சகல வசதிகளும் உள்ளன. அலுமினிய செயற்கை பாதங்களில் எதுவித வித்தியாசமும் காணப்படவில்லை.

அடுத்த கட்டமாக H D.P.E (High Density Polythene ethyline) என்னும் பெற்றோலிய கழிவு மூலப்பொருளினால் தயாரிக்கப்படும் பகுதிக்குச் சென்று மாஸ்டர் ஜீ என்றழைக்கப்படும் ரும் சந்திரசர்மா என்பவரையும் சந்தித்தேன். பிரபல நடிகையான மயூரி என்பவருக்கு செயற்கைக்கால் தயாரித்தவரும் இவரேயாவர். இப்பகுதியில் இருந்து P.O.P. மூலம் ஒருவரின் துண்டிக்கப்பட்ட பாதத்தில் இருந்து அச்செடுத்து காலை மக்கியால் தயாரித்து குழாயை சூடாக்கி சொக்கற் தயாரிக்கும் முறை அனைவற்றையும் இவர் எனக்கு நன்கு பயின்று கொடுத்தார். இது அலுமினிய சொக்கற்றிலும் பாரம் குறைந்து, மிக சொகுசாக இருந்தாலும் இதை வெளிப்படையாக ஏற்றுக் கொள்வதற்கு இன்னும் வாக்குவாதங்கள் நடைபெறுகின்றன. எமது சூடான தேச சுவாத்தியத்துக்கு ஒப்பிட்டு பார்க்கும் போதும், துண்டிக்கப்பட்ட அங்கத்தில் நாளாந்த விரிவாக்கம் மெலிவு போன்ற வேறுபாடுகளுக்கு ஏற்றதாகச் செய்வதற்கு அலுமினிய சொக்கற்றே தகுந்ததென நாம் கருதுகின்றோம். எதுவாகிலும் மூலப் பொருட்கள் கிடைக்குமானால் இங்கு தயாரிக்கவும் முடியும். எம் பார்வைக்கு ஒரு சொக்கற் கொண்டு வந்துள்ளோம்.

கால் பொருத்துவதற்கு இங்கு வருவோர் நூற்றுக்குத் தொண்ணூறுக்கும் மேலானோர் வறியவர்களிலும் வறியவர்களாவர். ஏறக்குறைய 150—200 பேர் கால் பொருத்துவதற்காகத் தங்கியுள்ளனர். ஆண் பெண் என்ற வேறுபாடுகளுடன் 65 படுக்கைவசதிகள் உள்ளன. மீதியானோருக்கு ஓர் பெரியசாலை உள்ளது. படுக்கை கம்பளங்கள், பீங்கான் கோப்பை போன்ற பாத்திரங்கள் இலவசமாய் கொடுக்கப்படுகின்றன. மூன்று நேரஉணவும் தேநீரும் மருத்துவ சிகிச்சையும் இலவசமாக கொடுக்கப்படுகின்றது. முறிவு நெறிவுவைத்

திய கலாநிதியாகிய டாக்டர் சத்தியேந்திரா சர்மா (Sathiyendra Sarma) 8 மணித்தியால நேரமும் இவர்களைப் பராமரித்து வருகிறார். சகல நிர்வாக நடவடிக்கைகளையும் நடாத்தும் Vicklang Mahaveer Samite செயலாளரான D. R. Metha அவர்களுக்கும் அவருக்கு உதவியாளரான S. M. Das அவர்களும் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப்பொருட்கள் தொட்டு நுட்பவியலாளர் பராமரிப்பு உணவு, புனர்வாழ்வு காலைப்பொருத்தியோர் திரும்பி செல்வதற்கு வேண்டிய குறைந்த கட்டண செலவுகள் போன்ற யாவற்றையும் கவனித்து வருகிறார்கள்.

எனது கடைசி கட்டப் பயிற்சியாக ஆராய்ச்சி நிறுவனத்தின் ஓர்தொட்டிக்ஸ் (Orthoticcs) என்னும் பிரிவிற்கு வந்தது. இங்கு பிறப்பிலேயே கால்களில் ஏற்படும் குறைபாடுகளை ஆராய்ந்து Valrus, Valgues, deformity, Drop foot, Elevated foot ஆகிய குறைபாடுகளுக்குத் திருத்தநிற்குப் பாவிக்கும் அலுமினிய ஊன்று கம்பிகளுக்குப் பதிலாகப் பாவிக்கும் பொலித்தின் உபகரணங்கள் தயாரிக்கும் முறையையும் P.O.P பன்டேஜ் பாவித்து திருத்தும் முறைகள் யாவற்றையும் இயலுமான அளவு கற்றுக்கொண்டேன். இத்தொழிற்சாலையில் வேலை புரிபவர்களில் (80%) என்பது வீதமானோர் அங்கவீனராவர். அவர்கள் கால் பொருத்துவதற்காக வந்த ஒருசிலர் தங்கள் நன்றியைக் காட்டுவதற்காக எதுவித ஊதியமும் இன்றித் தன்னைப்போன்ற மற்றையோருக்கும் மறுவாழ்வு கொடுத்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

என்னுடைய பிரியாவிடை நான் கிட்டியதும் Dr. P. K. Sathi வேலைசெய்யும் Guruledgby வைத்தியசாலைக்குச் சென்று அவரை சந்தித்தேன். எங்கள் யாழ் தொழிற்சாலையைப் பற்றி அறிந்திருந்த அவர் மேலதிக சில விபரங்களை என்னிடம் கேட்ட அறிந்த மூன்று மணித்தியால நேரம் அவரது ஆராய்ச்சி நிலையத்தில் தொழில் நுட்பங்களை பற்றி வினவினேன். சற்றும் சலிக்காமல் எல்லாவற்றையும் எடுத்து விளக்கினார். அவர் நிர்ணயித்த ஜெய்ப்பூர் கால் இன்னுமொரு அயல்நாட்டில் விசேஷமாய் யாழ் தொழிற்சாலையில் எதுவித வசதியுமின்றிச் செயற்படும் முறைகளை அவர் கேட்டு ஆச்சரியப்பட்டார். நான் இலங்கை திரும்பியதும் அவர் எமது தலைவிக்கு எழுதிய கடிதம் இதற்குச் சான்றாகும்.

மேலும் சங்கநேரி கேட்முன்னால் டயர், டியூப் ஒட்டும் கடை நடாத்தும் Chugga Bhai அவர்களையும் சந்தித்தேன். இங்கு முதன் முதலாக ஜெய்ப்பூர் பாதம் தயாரிக்கும் போது றப்பர் உருக்கி ஒட்டுவதற்கு (Vulganising) வேண்டியநுட்பத்தை Dr. சேத்திக்கு அளித்தவர். தற்சமயம் இவர் தனது தொழிற்சாலையில் பாதங்களைத் தயாரித்து R. R. C நிறுவனத்துக்கு விற்கின்றார்.

வெகு சொற்ப நாட்களில் பார்த்துக் கற்கவேண்டியனவற்றைக்கற்று எனக்கு உதவியாய் இருந்த அனைவருக்கும் என் சார்பிலும் தொழிற்சாலை நிர்வாகம் சார்பிலும் நன்றி கூறி மிக மனவருத்தத்துடன் அழகிய ஜெய்ப்பூர் நகரைவிட்டு வெளியேறினேன். எனது மதிய இரவு போசனம் சப்பாத்தியானாலும் அவர்களது அன்பும் ஆதரவும் என் உடல் மெலிவைக் காட்டவில்லை.

சென்னை வந்து சேர்ந்ததும் எனது விமானச்சீட்டை பதிவுசெய்து விட்டு இரு நாட்கள் இருந்தமையால் ராணி மலரில் வெளிவந்த ரூபா 200 பெறுமதியான செயற்கைக் கை என்ற டாக்டர் ஆத்மநாதன் தயாரிப்புக் கூற்றைப் பார்க்க K.K. நகரில் உள்ள உடல்

ஊனமுற்றோர் அரசாங்க மருத்துவமனைக்குச் சென்று டாக்டர் ஆத்மநாதனை கண்டு என்னை அறிமுகப்படுத்தி எங்களது தொழிலக செயற்பாட்டை விளக்கி செயற்கைக்கையைப் பற்றி வினவினேன். அவர் எப்படி செய்யலாம் என்ற கூற்றை எழுதியிருந்தார். அவர் தயாரித்த ஒரு எளிய செயற்கையாவது பார்வைக்கு இருக்கவில்லை இன்னமும் ஆராய்ச்சியில் இருக்கிறார். டாக்டர் ஆத்மநாதன் மருத்துவமனையில் சகல பகுதிகளுக்கும் கூட்டிச்சென்று சென்னை செயற்கைக்கால் (Madras foot) என்பனவற்றை விளக்கி மனையின் மறுவாழ்வு திட்டங்களையும் விளக்கிக் கூறினர். இவருக்கு எனது நன்றியைத் தெரிவித்து இந்தியாவை விட்டுப் புறப்பட்டேன்.

**திரு. X. S. Y. பிரான்சிஸ்**
தொழிற்சாலை முகாமையாளர்.

கடவுள் மனிதருக்கு மட்டும் கொடுத்துள்ள ஒரே அரும்பொருள் அன்பு. அது நெஞ்சுடன் நெஞ்சை, உயிருடன் உயிரை பிணைக்கும் ஒரு வெள்ளித்தளை
— வால்டர் ஸ்கொட்

# கால்கள் வழங்கும் கருணைத் தொழிலகம்

யாழ் சுண்டிக்குளி வீதியும், பழைய பூங்காவீதியும் சந்திக்கும் அந்த நாற்சந்திற்குப் போனதுமே "டங் டங்" என்று இரும்பு அடிக்கும் ஓசை எம்மைச் சுண்டியிழுக்கிறது. அந்தச் சப்தம் வரும் திசையை நோக்கினால் யாழ் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற் சாலை தான் என்பதை விளம்பரப் பலகை மூலம் உடனடியாக அறிந்து கொள்ளலாம்.

ஓர் இளம் பெண் சுறுசுறுப்பாக அங்குமிங்கும் நடந்து கொண்டிருக்கிறாள். அவளுடைய கையில் இருந்த அந்தச் சாவி கீழே விழுகின்றது. அதனை எடுக்க அவள் குனிகின்றாள். கீழே விழுந்த சாவியைப் பார்க்கக் கீழே சென்ற என் பார்வை தற் செயலாக அவள் கால்களில் விழுகின்றது. எனக்குள்ளே ஒரு அதிர்ச்சி! அந்தக் கால்...... அவளது ஒரு கால் செயற்கைக் கால் என்றால் நம்பவே முடியவில்லை. இந்தச் செயற்கைக் காலுடனா இவள் இத்தனை வேகமாக நடந்து சென்றாள்? அந்தத் தொழிலகத்தில் டைப்பிஸ்டாக் கடமை புரிபவள் ஒரு காலை இழந்தவள். ஆனால் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பொருத்தப்பட்ட தன் பின்னர் நிஜக்கால் உள்ளவர்களுக்கு நிகராக வளையாமல் வாழ்ந்து கொண்டிருப்பவள் என்பதைப் பின்னர் அறிந்தபோது அந்தச் செயற்கைக்கால் தொழிற்கூடத்திற்கு இருப்பது ஏதோ ஒரு ஆலயத்துள் இருப்பது போன்ற உணர்வைத்தான் ஏற்படுத்தியது.

இத்தொழிலகத்தின் முகாமையாளர் திரு. எக்ஸ். எஸ். வை. பிரான்சிஸ் அவர்களிடம் தொழிலகம் பற்றிய விபரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டபோது, அத்தொழிலலத்தின் மீது எமக்கு ஏற்பட்ட மதிப்பு இன்னும் பன்மடங்கு அதிகரிக்கின்றது.

கால்களை இழந்தவர்கள் கழித்து வைக்கப்பட வேண்டியவர்கள் அல்லர் — கவலைப்பட வேண்டியவர்கள் அல்லர், தாம் ஊனமுற்றவர்கள் என்ற தாழ்வு மனப்பான்மைக்குத் தள்ளப்பட வேண்டியவர்கள் அல்லர் மற்றவர்களுக்கு நிகராக வாழக்கூடியவர்கள் என்று சவால் விடுகின்ற ஒரு சந்நிதியாகவே இத்தொழிற்சாலை அமைந்துள்ளது.

யாழ் அன்னையர்முன்னணியும், ஏனைய சேவை நிலையங்களும் தனிநபர்களும் எடுத்துக் கொண்ட முயற்சியால் 20 பேர் கொழும்பு சென்று செயற்கைக்கால் பொருத்தி வந்தனர். இது நடந்தது 1986-க்கு முன்னர்.

அன்னையர் முன்னணி 152 பேரைச் சிபார்சு செய்து அனுப்பியது இவர்களில் சிலருக்குக் கால் பொருத்த ஏற்படும் செலவை "நொறாட்" (NORAD) ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. ஜோண் ஹட்சிசன் பொறுப்பேற்பதாக ஒப்புக்கொண்டார். ஆனால் 5 பேர் மட்டுமே கொழும்பு சென்று கால் பெற்றனர். ஏனையவர்களுக்கு என்ன நடந்தது? கொழும்பு செல்வதில் உள்ள சிரமங்களால் காலில்லாவிட்டாலும் பரவாயில்லை என்று சமாதானம் செய்து கொண்டு இருந்து விட்டனர். காரணம்?

1) கொழும்பு செயற்கைக்கால் தொழிற்சாலையிலுள்ள சிங்களவர்களுக்குத் தமிழில் விளங்க வைத்துத் தமக்குப் பொருத்தமான — தம்மை உறுத்தாத கால்களைப் பெறுவதில் உள்ள சிரமம்.
2) இவர்களை அழைத்துச் செல்பவர்களுக்கு ஏற்படக் கூடிய தங்குமிடப் பிரச்சினை.
3) கொழும்பில் தமிழருக்கு எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்றிருக்கும் பயங் கரமாக சூழ்நிலை.

4) இங்கிருந்து செல்லும் தமிழர்கள் மீது அங்கிருந்த சிங்கள ஊழியர்கள் காட்டிய துவேஷமனப்பான்மை.

5) கொழும்பு செல்லும் வழியில் உள்ள இராணுவத்தடை முகாம்களில் உள்ளவர்கள் கேட்கும் வினாக்கள் கால் அற்றுப் போனதை விளக்கமாகக் கூறிய பின்னரும் அவர்கள் சந்தேகத்தோடு நடந்து கொண்ட விதங்கள் ஆகியன கொழும்புப் பயணங்களுக்குத் தடை விதித்து நின்றன.

யாழ்ப்பாணத்திலேயே ஒரு தொழிலகத்தை ஆரம்பித்தால் என்ன என்ற ஆலோசனையை திரு. யோண் ஹட்சிசன் வழங்கினார். கொழும்பு நட்புறவுச் சங்கமும் அதற்குத் தனது ஆதரவை வழங்கியது அன்னையர் முன்னணியும் உவகையோடு ஏற்றுக் கொண்டது. எனவே தான் யாழ். தொழிலகத்தின் தற்போதைய முகாமையாளர் உட்பட் ஜோண்சன், பரமகுமார் எனும் இளைஞர்களும் இத்தொழில் நுட்பங்களில் பயிற்சி பெறுவதற்காகக் கொழும்புத் தொழிற்சாலைக்கு அன்னையர் முன்னணியால் அனுப்பி வைக்கப்பட்டனர். ஜோண்சனும், பரமகுமாரும் செயற்கைக்கால்களின் துணையுடனேயே நடந்து கொண்டிருப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பயிற்சியைப் பெற்று யாழ். திரும்பிய இவர்களைப் பயன்படுத்தித் தொழிற்சாலையை ஆரம்பிப்பதிலே ஒரு சிக்கல், சிறிலங்கா அரசின் பாதுகாப்புச் சட்டங்கள் யாழ்ப்பாணத்துக்கு அலுமினியத் தகடுகளையோ ஒக்சிஜன் கொள் கலங்களையோ கொண்டுவர முடியாது தடைவிதித்திருந்தது. இது விடயமாக பந்தோபஸ்து அமைச்சரைச் சந்திக்கப் பலர், பல தடவைகளில் முயன்றனர், மக்களுக்கு இருந்ததை விட அவரைச்சுற்றி அதிக பந்தோபஸ்து இருந்ததால் பாவம் இவர்களுக்கு அவரது தரிசனம் கிடைக்கவில்லை. அதிஉத்தம ஜனாதிபதிக்கும் மனுச் செய்தனர். அவரிடமிருந்து கடிதம் கிடைத்ததென்ற பதில் கூடக் கிடைக்கவில்லை. கால் உடைந்த ஆட்டுக்காகக் கண்ணீர் விட்ட புத்தபகவானின் வாரிசுகள் நடத்தும் ஆட்சியிலே கால் உடைந்த மனிதனுக்குக் கால் பொருத்தக் கட்டாயச் சட்டங்கள் தடை விதித்தன. இரங்க மறுத்தன.

ஆயினும் சேவை செய்ய வேண்டும் என்ற வேகம் மேலோங்கி நின்றபடியால் காவல் துறைகளுக்கு மறைத்து ஒழித்து அலுமினியத் தகடுகளைக் கொண்டுவந்து ஒட்டுவதற்குப் பதிலாக நுட்பமான முறையில் தறைந்து கால்களைத் தயாரித்து பதினொரு பேருக்கு முதலில் கால்கள் பொருத்தினர். இது அன்னையர் முன்னணியும் தொழிலக உறுப்பினர்களும் நிகழ்த்திய ஒரு சாதனை என்றே சொல்லலாம்.

இந்திய இராணுவ வருகைக்குப் பின்னர் இத்தகைய தடைகள் இல்லாத காரணத்தால் சென்ற ஆண்டு யூலை மாதம் முதலாம் திகதி கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் தலைவி திருமதி சுவர்ணா பேர்டினட் அவர்கள் உத்தியோக பூர்வமாக தற்போது இயங்கிவரும் தொழிற்சாலையைத் தொடக்கி வைத்தார். இடையில் சென்ற ஒக்டோபர் 10 முதல் டிசம்பர் 14 வரை இந்திய இராணுவ நடவடிக்கையின் விளைவாகச் செயற்பட முடியவில்லை எனினும் இந்த ஓராண்டு காலத்துள் முழங்காலுக்கு கீழே காலிழந்தவர்கள் 86பேர் முழங்காலுக்கு மேல் காலிழந்தவர்கள் 41 பேர் முழங்காலுக்கு கீழ் இரு கால்களையும் இழந்த ஒருவர் முழங்காலுக்கு மேல் இருகால்களையும் இழந்த ஒருவரென 129 பேருக்குச் செயற்கைக் கால்கள் வழங்கப்பட்டு அவர்கள் சுயமாக நடந்து வாழ வரம்பெற்றுள்ளனர்.

காலிழந்தவர்களிடமிருந்து முதலில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு பின்னர் அதி முக்கியமானவர்களுக்கு முதலிடம் வழங்கப்பட்டு வாரத்தில் ஐவர் என்ற பிரகாரம் கால்கள் பொருத்தப்படுகின்றன. கால்பொருத்தப்பட்டவர் ஒருவாரகாலம் தொழிலகத்திலேயே தங்கியிருந்து நடக்கும் பயிற்சி பெற வேண்டும். அதற்கு வேண்டிய தங்குமிடம் உணவு போன்ற வசதிகள் அங்கேயே உண்டு. ஒருவாரத்துக்கு ரூபாய் நூறுமட்டும் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

ஒருவருக்கு ஒரு கால் பொருத்தப்படுவதற்கு ரூபாய் ஆயிரம் செலவாகின்றது. வசதியுள்ளவர்கள் முழுத்தொகையையும் கட்டுகிறார்கள். சிலர் தம்மால் முடிந்த தொகையை மட்டுமே கொடுக்கின்றனர், அதற்கும் வழியில்லாதவர்களுக்கு இலவசமாகவே கால் பொருத்தப்படுகின்றது.

கொழும்பு நட்புறவுச் சங்கம் இத்தொழிற்சாலைக்கு வழங்கிவரும் ஆதரவு குறிப்பிடத்தக்கது, நொறுட் ஸ்தாபனம் போன்றவற்றின் நிதி உதவிகள் அவர்கள் மூலமாகவே அன்னையர் முன்னனியை வந்தடைகின்றன. இறப்பர் பாதங்களும் முழங்கால் மூட்டுக்களும் மட்டுமே கொழும்பில் இருந்து பெறப்படுகின்றன. ஏனையவை யாவும் இங்கேயே தயாரிக்கப்படுகின்றன- ஆகக்கூடிடியது 10 வயதுக்கு மேற்பட்டோருக்கு மட்டுமே உள்ளன. ஆனால் யாழ்ப்பாணத் தொழிலகம் இங்கே கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களின் துணையுடன் மூன்று நான்கு வயதுச் சிறுவர்களுக்கும் செயற்கைக்கால்களைத் தயாரித்து அவர்களைப் பத்துவயது வரை முடமாக வாழ்ந்து சீரழியாது தடுத்துத் துணைபுரிகிறது.

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் முயற்சியால் ஜெய்ப்பூர் தொழிலகத்தில் இருந்து இங்கு வந்து ஆலோசனை வழங்குவதற்கென்று வந்த பிரதம தொழில் நுட்பவியலாளரான திரு முகமட்கான் இவர்கள் சேவையை தொழில் நுட்பத்திறனை வியந்து தனது ஆலோசனையே தேவையில்லை எனும் அளவுக்கு பாராட்டிச் சென்றுள்ளார்.

இங்கு வந்து மீளக் கால்களைப் பெற்றுச் சென்றவர்கள் தொழிலகத்தில் உள்ள குறிப்பு ஏடுகளில் எழுதிச் சென்றுள்ள வாசகங்களைப் படிக்கும் போது அவர்களது உள்ளத்து உணர்வுகளையும் தமக்குக் கிடைத்த புனர்வாழ்வையுமிட்டு அவர்கள் குறிப்பிட்டுள்ள வாசகங்கள் எமது உள்ளங்களை தொடுவனவாக அமைந்துள்ளன.

தொழிலகம் தொடங்கி இரு வருட நிறைவை யூலை முதலாம் நாள் கொண்டாடவிருக்கிறது அன்னையர் முன்னனி. அந்நாளில் இங்கு கால் பெற்றவர்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி மற்றும் ஓட்டப் பந்தயங்களில் பங்குபற்றி மற்றவர்களுக்கு இணையாகத் தம்மால் சாதனை நிகழ்த்த முடியும் என்று நிரூபிக்கவுள்ளார்கள். ''இவர்கள் இன்னலுறக்கூடாதே'' (They Shall not Suffer) எனும் தொழிலகத்தின் விருதுவாக்கு நிறைவேறிவருகிறது. தேவையானவர்கள் தேடிச் சென்று பயனுற வேண்டும் என்று அழைப்பு விடுத்துப் பணி புரியக் காத்துநிற்கின்றனர்.

இந்தப் புனர்வாழ்வுப் பணிமனைக்கு நம்மவர்கள் தம்மால் முடிந்த அளவு உதவிடல் வேண்டும். இத்தொழிலகத்துக்கு நாம் வழங்கும் உதவிகள் நமக்கு வழங்கும் உதவிகளே. யாழ் ஜெய்ப்பூர் தொழிலகத்தின் பணிகளுக்குக் கைகொடுத்துத் துணை நிற்பது தமிழனான ஒவ்வொருவருக்கும் உள்ள கட்டாயக் கடமையாகும்.

நன்றி — புதிய உலகம்
துணை ஆசிரியர்: நாவண்ணன்
தை — ஆனி 1988

# சாதனை நிகழ்த்தும் தாய்க்குலம்

தானகவே எதையும் செய்யமுடியாத குழந்தைக்குத் தாய்தான் அனைத்தும். அந்த அன்னையின் பணியானது தனது பிள்ளை குழந்தையாக இருப்பதோடு மட்டும் முடிந்துவிடுவதில்லை. பிள்ளை எத்துணைதான் பெரியவனகிவிட்டாலும் அவளைப் பொறுத்தவரை அவளுக்குப் பிள்ளை பிள்ளைதான். இயலாமைகளில் எல்லாம் துணிந்து அர்ப்பணித்துத் தொண்டுசெய்வது தாய்மைதான். அந்தத் தாய்மையின் — அந்தத் தாய்க்குலத்தின் ஒன்றிணைந்த பாரியசக்தியாக இன்று திகழ்வதுதான் யாழ், அன்னையர் முன்னணி.

என்ன செய்வது? எவர் செய்வது? எப்படிச் செய்வது? என்ற வினக்களுக்கு விடை கிடைக்காது தமிழினம் ஏங்கிக்கொண்டிருந்த காலகட்டம்தான் 1984-ம் ஆண்டு சிறீ லங்கா இராணுவத்தின் கெடுபிடிகள் கொடிகட்டிப் பறந்தகாலம். கேள்வி நியாயமற்ற முறையில் எமது இளைஞர் கைது செய்யப்பட்டுச் சிறைச்சாலைச் சுவர்களுக்குள் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்ட காலம். இந்த வேளையிற்தான் தாய்மை விழித்துக் கொண்டது. தம் பிள்ளைகள் தவிப்புறு நிலைகண்டும் தாய்க் குலம் தூங்கிக் கொண்டிருக்காது. இம்சையுறும் இளைஞர்களை விடுவிப்பதற்காக திருமதி தேம்பா குணநாயகம் அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது தான் அன்னையர் முன்னணி எனும் இந்தச் சேவை இயக்கம்.

நாளடைவில் இம் முன்னணியின் சேவைகள் பரவலாக்கப்பட்டுள்ளன. அன்று எம் இளைஞர்களைப் பாதுகாத்தல் எனும் நோக்கோடு உருவாக்கப்பட்ட இப் பணியானது தனது சேவையைப் புனர்வாழ்வுப் பணிக்காகவும் ஈடுபடுத்தியுள்ளது. குறிப்பாக விதவைகள் புனர்வாழ்வுக்காக அவர்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து சுயவருமானம் பெறுவதற்கு வகை செய்துள்ளனர்.

இன்று இவ்விதைவைகளால் தயாரிக்கப்படும் அரிசி, மாவு பைகளில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளன. இன்னும் தரமான இத் தயாரிப்பினை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யுமளவுக்கு முன்னேறியுள்ளனர். நாளடைவில் வெளிநாட்டு ஏற்றுமதியும், உற்பத்தியும், அதனுல் வாழ்வு இழந்த எம் தாய்க்குலம் பெறும் வருமானமும் கணிசமான அளவு அதிகரிக்கும் என்பது நம்பிக்கையாகும்.

அடுத்ததாக இவ் விதைவைகளின் பிள்ளைகளின் கல்விக்கும் ஏனைய தேவைகளுக்கும் உதவும் வகையில் வெளிநாட்டில் உள்ளவர்களைத் தத்துப் பெற்றோராகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றது.

இவை அனைத்திற்கும் மேலாக இன்றைய எமது தேவையை உணர்ந்து — கடந்த கால அசம்பாவிதங்களால் கால்களை இழந்தவர்களுக்கு ஜெய்ப்பூர் செயற்கைக் கால் வழங்கும் பணியைச் செய்துவருகின்றது. அன்னையர் முன்னணி யாழ்ப்பாணத்தில் செயற்கைக் கால் தொழிற்சாலையை நிறுவிய ஈராண்டு நிறைவுகளை வரும் யூலை முதலாம் நாள் கொண்டாடவுள்ளது.

ஆண்களால் சாதிக்க முடியாத அரும்பெரும் சாதனைகளைப் பெண்களால் சாதிக்க முடியும் என்பதற்கு இந்தத் தொழிலகமே ஒரு சான்று அல்லவா?

நன்றி! (புதிய உலகம்)
தை — ஆனி 1983

# ஊனமகற்றும் உயிராலயம்

எம் மண்ணில் கடந்த ஐந்து வருட காலமாகத் தொடரும் இராணுவ நடவடிக்கைகளால் உயிரினை இழந்தோர் அநேகர். சிதைக்கப்பட்ட குடும்பங்களோ கணக்கிலடங்கா. சொந்த மண்ணிலேயே அகதிகளானோர் ஆயிரமாயிரம். இழப்புக்களோ எழுத்தில் வடிக்க முடியாதன. உயிரிழப்புக்களோ ஈடுசெய்ய முடியாதன, பொருள் இழப்புக்களை முயன்றால் ஈட்டிக் கொள்ளலாம். ஆயினும் எம் மத்தியில் உடல் அங்கங்களை இழந்து தவிக்கும் அங்கவீனர்களின் மனக்குமுறல்களுக்கு ஆறுதல் அளிக்க முடியுமா? அவர்கள் இழப்பை ஈடுசெய்ய முடியுமா? ஆம் முடியும். ஊனமுற்றோருக்கு உறுதுணையாக நிற்கும் 'ஜெய்ப்பூர்' செயற்கைக் கால் தொழிற்சாலையால் முடியும். இது வெறும் தொழிற்சாலையல்ல. சமுதாயத்தின் தேவை அறிந்து சேவை செய்யும் ஓர் ஆலயம். யுத்தக் கருமேகங்கள் எம்மண்ணை சூழ்ந்திருந்த வேளையிலே. பலதரப்பட்ட இன்னல்களுக்கு மத்தியிலே யாழ். அன்னையரின் முன்னணியினரின் அரிய முயற்சியின் வெளிப்பாட்டால் ஆரம்பிக்கப்பட்டதே இத் தொழிலகமாகும். பல்வேறு வெளிநாட்டு உதவிவழங்கும் நிறுவனங்களின் அனுசரணையுடன், கடந்த ஒருவருடமாக போற்றக்கூடிய வகையில் இயங்கி வருகிறது இத் தொழிலகம். நாம் தொடர்ந்தும் அந்நியக் கரங்களை நம்பி இருப்பது பொருத்தமற்றது. எம் சொந்த உழைப்பின் மூலம் எம் மண்ணின் வளங்களைக் கொண்டு இது போன்ற தொழிலகங்கள் சிறப்புற இயங்கச் செய்தல் காலத்தின் கட்டாயம். எம் சமுதாயத்தில் கால்களை இழந்து பரிதவிக்கும் பலரும் பயன்பெற வேண்டும். இவர்கள் வாழ்வும் இனிதே அமைக எனும், இவ்வூனமகற்றும் உயிராலயத்தின் உன்னத இலட்சிய நோக்கு ஈடேற எம் சஞ்சிகையும் சிறு பங்களிப்பை ஆற்றுமாயின் யாம் உளப்பூரிப்படைவோம்; திருப்தியடைவோம், வாசகர்களுள் பலருக்கும் எடுத்துரைக்கலாம், நிதியுதவி செய்யலாம். இது எம் கடமை, ஏன்? சமுதாயத்தின் கடப்பாடும்கூட. முன்னணியினரின் முன் மாதிரியைப் பிற சமூகசேவை நிறுவனங்கள் பின்பற்றி ஒழுகுவது காலத்தின் தேவையாகும்.

ஆசிரியர் குழு

நாம் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிலகத்தினுள் நுழைந்தபோது காலை நேரம் ஒன்பதைத் தாண்டிவிட்டது. யாழ். பழைய பூங்கா வீதியிலமைந்துள்ள சாதாரண இல்லமொன்றே தொழிலகமாக இன்று மிளிர்கின்றது. அடக்கமான சிறிய கட்டிடம், ஆனல், உள்ளே நுழைந்த பின்புதான் அதன் ஆற்றல் அளவிடற்கரியது என்று புலப்பட்டது. காற்ரோட்டமான கட்டிட அமைப்பு, முன்றலை அழகுசெய்யும் மலர்ச் செடிகள், அமைதியான சூழ்நிலை, தூய்மையான பராமரிப்பு இவை யாவும் இங்கு வருவோர் மனத்திற்கு சாந்தியைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. நோயாளர் தம்நோயை மறக்கச் செய்யும் சிறந்த வைத்தியசாலைகளே ஆலயங்களாக அமைய முடியும். தொழிலகத்தின் முன் கூடத்தில் செயற்கைக் கால் பொருத்திய இருவர் நடத்தற் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். கட்டிடத்துள் காலை வைத்ததும் எம்மை அன்பாக வரவேற்றார் தொழில் முகாமையாளர். தொழிலகத்தை நிர்வகித்துவரும் அன்னையர் முன்னணிப் பிரதிநிதி ஒருவரோடு உரையாடலைத் தொடங்கினேம்.

1. ஜெய்ப்பூர் செயற்கைக் கால்திட்டம் இங்கு உருவான வரலாற்றைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுக?

சமகால நிகழ்வுகளால் கால்களை இழந்தோர் தொகை எம் சமூகத்தில் அதிகரித்துச் சென்றமை, கால்களை இழந்தோர் கொழும்பு சென்று செயற்கைக்கால் பொருத்துவதில் எதிர்நோக்கிய போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிபோன்ற பிரச்சினைகள், மேலும் இவர்கள் செயற்கைக்கால் பொருத்துவதில் தேர்ச்சி பெற்ற தொழில் நுட்பவியலாளருடன் தொடர்பு கொள்வதில் எதிர்நோக்கிய கஷ்டங்கள்போன்ற காரணங்களால் தமிழ்ப் பிரதேசத்தில் செயற்கைக்கால் பொருத்தும் நிலையமொன்றின் அவசியத்தை அன்னையர் முன்னணியினராகிய நாம் உணர்ந்தோம்; இந்நிலையில் "நோராட்" ( NORAD ) ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஜோண் ஹட்சிசனின் ( John. Hutchison ) யாழ். விஜயம் எமக்கு நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தியது. இவருடைய உதவியால் கொழும்பு நட்புறவுச் சங்கக் காரியதரிசியும், கொழும்பு செயற்கைக்கால் தொழிலக நிர்வாகியுமான திருமதி சுவர்ண பேர்டினன்டின் அளப்பரிய ஒத்துழைப்பைப் பெற்றோம்.

அவரின் ஆலோசனையுடனும், ஒத்துழைப்புடனும் தொழில் முகாமையாளர் ஒருவரைத் தெரிவுசெய்தோம். அத்துடன் ஊனமுற்ற இருவரை செயற்கைக்கால் தயாரிக்கும் தொழில் நுட்பவியலாளராக, அவர்களுக்கு தேவையான பயிற்சியை வழங்கிச் சேர்த்துக் கொண்டோம்: இதனை நிர்வகிப்பதற்கு ஓர் நிர்வாகக் குழுவை அமைத்துக் கொண்டு கடந்த வருடம் யூலை மாதம் 1-ம் திகதியிலிருந்து இங்கு செயற்பட்டு வருகின்றோம்.

2. இத்திட்டத்திற்கான முக்கிய உதவிகள் எப்படிப் பெறப்பட்டன?
தொடர்ந்தும் உதவிகள் கிடைத்தவண்ணம் இருக்கின்றனவா?

பிரதானமாக உதவிகள் பின்வரும் வழிகளில் கிடைக்கின்றன.

(i) கொழும்பில் அமைந்துள்ள செயற்கைக் கால் தொழிலகத்தை நிர்வகிக்கும் (Friend in Need Society) கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் மூலம் பெறப்படும் உதவிகள்.

(ii) NORAD, SCE போன்ற வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் கனடா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், போன்ற உதவி வழங்கும் நாடுகள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கப் பெறும் நிதி உதவி.

(iii) வெளிநாடுகளில் வதியும் நலன் விரும்பிகளிடமிருந்து பெறப்படும் நிதி உதவி, ஆனால் இவ்வுதவிகள் அனைத்தும் இதுவரைகாலம் இத்தொழிற்சாலை இயங்குவதற்கே போதுமானதாயமைந்தது, எதிர்காலத்தில் இத்திட்டம் சிறப்புற இயங்க நலன்விரும்பிகளிடமிருந்து உதவிகள் எதிர்பார்க்கின்றோம்.

3) இத்திட்டத்தின் மூலம் கால்களைப் பெறவிரும்பும் விண்ணப்பதாரர்கள் எவ்வாறு உங்களுடன் தொடர்பு கொள்கிறார்கள்? சமூகத்தில் எல்லா மட்டங்களைச் சேர்ந்தவர்களிற்கும் இந்த உதவி கிடைக்கப் பெறுகிறதா?

எம்முடன் யாழ் பொதுவைத்தியசாலை மூலமே பெரும்பாலும் செயற்கைக்கால் பொருத்தப்பட விரும்புவோர் தொடர்பு கொள்கிறார்கள். சிலர் அவ்வப் பிரதேச உதவி அரசாங்க அதிபர்கள் மூலமும் தொடர்பு கொள்கிறார்கள்.

சகலரும் எவ்விதமான வேறுபாடுமின்றி சமத்துவமாகவே நடாத்தப்படுகின்றனர். சகல சமூகமட்டங்களைச் சார்ந்தோரும் எம்முடன் தொடர்பு கொண்டு பயன்பெற முடியும்.

4) எமது சமூகத்திடமிருந்து நீங்கள் எவ்வகையான உதவிகள் மற்றும் ஒத்துழைப்பை பெற விரும்புகிறீர்கள்?

இத்திட்டம் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டப்பட்டிருந்தால் தான் இதுவரை இத்திட்டம் மூலம் பயன்பெறாது இருக்கும் கால்களை இழந்தோர் எம்முடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு அதிகமாகும். அத்துடன் மக்களுக்கு செயற்கைக் கால் பொருத்தியுள்ளோரும் எமது சமூகத்தின் அங்கத்தவரே என்ற உண்மை உணர்த்தப்படல் வேண்டும். அதன் மூலம் இவர்களுக்கும் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும் வேறு பலநாடுகளில் அரசாங்க மற்றும் தனியார் தொழில் வழங்குநர்கள் ஊனமுற்றோர் ஊனமுற்றோருக்கென 1% தொழில் வாய்ப்பினை வழங்கக் கூடியதாகக் திட்டமிட்டுச் செயலாற்றுகின்றனர். இம்முன்மாதிரியை நாமும் பின்பற்றுவோமாயின் எம்சமூகத்தில் உள்ள ஊனமுற்றோர்களும், பிறர் உதவியின்றி தம் சொந்த உழைப்பிலேயே வாழக்கூடியதோர் சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்தவர்களாவோம்.

5) இத்திட்டத்தை எமது பிரதேசத்தின் மற்றைய பகுதிகளுக்கு விஸ்தரிக்கும் நோக்கம் உண்டா?

இத்தொழிலகம் வடக்கு கிழக்குப் பிரதேச மக்களுக்கு சேவையாற்றும் நோக்குடன் நிறுவப்பட்டது. கால்களை இழந்தோர் இலங்கையின் எப்பகுதியில் இருப்பினும் அவர்களுக்கு உதவ இந்நிறுவனம் எப்போதும் தயாராயுள்ளது.

6) செயற்கைக் கால் பொருத்துவதுடன் உங்கள் பணி முடிவடைகின்றதா? அல்லது அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதன் மூலம் அவர்கள் சமூகத்தில் சமசந்தர்ப்பத்தையும் சமத்துவத்தையும் அடைவதற்கு ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கின்றீர்களா? வேலைவாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுக்கிறீர்களா?
அன்னையர் முன்னணியினர் ஒருசில செயற்கைக்கால் பொருத்தியோருக்கு புனர்வாழ்வழித்தனர், மேலும் அவர்கள் புனர்வாழ்வுத் திட்டம் ஒன்றின் மூலம் பலருக்கும் புனர்வாழ்வளிக்க திட்டமிட்டுள்ளனர்.

7) செயற்கைக் கால்போன்று செயற்கைக்கை செய்யமுடியாதா?
செயற்கைக் காலைவிட செயற்கைக் கையானது விசேட தொழில்நுட்பமுறையில் தயாரிக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் இம்முறையையும் அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளோம். அத்துடன் போலியோ நோயால் பாதிக்கப்பட்டோருக்கு (Callipers) வகைக்கால்களையும் பொருத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

அப்பிரதிநிதியிடம் நன்றியைத் தெரிவித்துக் தொழிலகத்தின் பிறபகுதிகளைப் பார்வையிட்டோம். குறிப்பாக பணியாற்றும் கூடத்தில் தொழில்நுட்பவியலாளர்கள் செயற்கைக்கால் பொருத்துகின்ற முறையை நேரடியாக அவதானிக்கக்

கூடியதாக இருந்தது. தொழில்நுட்பவியலாளர்களான திரு. பரமகுமார், திரு. ஜோன்சன் ஆகிய இரு இளைஞர்களும் இச்செயற்கை கால் திட்டத்தின் மூலம் பயனடைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் இங்கேயே தங்கிநின்று முழுமையாக இயங்குகிறார்கள். செயற்கைக்கால் வடிவமைக்கப்படுதல், பொருத்துதல் மேற்பூச்சிடல் (Painting) ஆகிய செயல்கள் யாவும் இச்சிறிய கூடத்திலேயே நிகழ்கின்றது. பிரதிக்கிழமைகள் தோறும் ஐந்துபேருக்கு இச் செயற்கை அங்கமானது பொருத்தப்படுகின்றது. செயற்கைக் கால் பொருத்திச்செல்வோர் தம் அனுபவத்தை புத்தகம் ஒன்றில் குறித்துச் செல்வது முன்மாதிரியான நடவடிக்கையாகும். கடைசியாக தொழில் முகாமையாளர் திரு. X. S. Y. பிரான்சிஸ் அவர்கள் இதுபற்றிய மேலதிக விபரங்களைத் தந்தார். அவர் எங்களிடம் கூறியதாவது:- '' இந்த ஜெய்ப்பூர் செயற்கைக்காலானது இந்தியாவிலுள்ள ஜெய்ப்பூர் நகரில் எலும்புச் சிகிச்சை நிபுணரான Dr. P.K. செத்தி என்பவரால் முதன் முதலாக உருவாக்கப்பட்டது. இது உறுதியானதாகவும் விலைகுறைந்ததாகவும் இருப்பதாலும் பார்வைக்கு உண்மையான அங்கம் போல் தோற்றம் அளிப்பதாலும் சகல மட்டங்களிலுளள கால்களை இழந்தோருக்கும் ஒரு வரப்பிரசாதமாய் அமைந்துள்ளது. இக்காலைப் பொருத்தியவர்கள் நடத்தல், இருத்தல், ஓடுதல், வாகனங்களை ஓட்டுதல் போன்ற சகல கருமங்களையும் மற்றைய மனிதர்கட்கு ஒப்ப ஆற்ற முடியும். அத்துடன் இந்த ஜெய்ப்பூர் காலினை மிகவிரைவாகவும் மிக இலகுவாகவும் உற்பத்தி செய்யக் கூடியதாயுள்ளது. இதற்குரிய மூலப்பொருட்களை இங்கேயே பெற்றுக் கொள்ளமுடியும் என்பதும் அடிக்கடி பழுது பார்க்கத் தேவையில்லை என்பதும் குறிப்பிடக் கூடிய முன்னேற்றமான அம்சங்களாகும். முழங்காலுக்கு மேல் கால் நீக்கப்பட்டவர்க்கு பொருத்தும் செயற்கைக்கால் இரு பகுதிகளாகச் செய்யப்பட்டு முழங்கால் மூட்டுக்குப் பதிலாக உலோகப்பிணைச்சல் பூட்டப்படும். ஷெல் தாக்குதல்களால் கால்களை இழந்த குழந்தைகள் பலரும் இங்கு செயற்கைக்கால் பொருத்தியுள்ளனர். இவர்களுள் கோப்பாயைச் சேர்ந்த 4 வயது தசாயினியும் அளவெட்டியைச் சேர்ந்த 4வயது தீபனும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இங்கு கால் பொருத்தியோரில் 25% ஆனோர் நீரிழிவு நோய் காரணமாக கால்கள் அகற்றப்பட்டவர்களாவர். ஏனையோரில் பெரும்பாலானோர் ஷெல் மற்றும் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்கள் காரணமாக கால்களை இழந்தோராவர். இத்தொழிலகத்தில் செயற்கைக்கால் பொருத்துவோர் 1000/- ஐ உதவிப்பணமாகச் செலுத்த வேண்டும். ஆனால் குறிப்பிட்ட தொகைக் கால்களைத் தயாரிப்பதற்கான உற்பத்திச் செலவை சில நலன்விரும்பிகள் ஏற்றுக்கொள்வதால் வசதி குறைந்தோருக்கு கட்டணமின்றியே பொருத்தி வருகிறோம்.

(இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்றோர் சிலருடன் உரையாடினோம். முதலில் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் அர்ச்சகர் திரு. V. ஐயாசாமி சர்மா கூறினார் )

1987ம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ம் நாள் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் வளவில் நிகழ்த்தப்பட்ட ஷெல் தாக்குதலில் எனது இருகால்களும் பாதிப்புற்றன பின்னர் இடதுகாலின் முழங்காலுக்கு கீழான பகுதி அகற்றப்பட்டது. 1988ம் ஆண்டு ஆவணித்திங்கள் 20ம் திகதி தான் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பொருத்தப்பட்டது. காலை இழந்தநிலையில் மிகவும் மனச்சோர்வுற்றிருந்த நான் தற்போது செயற்கைக்கால் பொருத்தப்பட்ட நிலையில் முன்போல் எதுவும் செய்யமுடியும் என்ற தன்னம்பிக்கை மேலோங்கப் பெற்றவனாக இருக்கின்றேன். இத்திட்டத்

தின் மூலம் என்போன்ற பலர் பயன் பெற்று மற்றவர்கள் போல் வாழவேண்டும் என்பதே என் அவா ஆகும்.

அடுத்து நீரிழிவு நோய் காரணமாக காலை இழந்த எழுதுவினைஞர் திரு. K. விமலநாதனுடன் உரையாடியபோது அவர் கூறியதாவது:

"கால் அகற்றப்பட்ட போது இனி எனக்கு என்ன வெளி உலக வாழ்க்கை என்ற விரக்தி ஏற்பட்டது. நான் சமூகத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் புறக் கணிக்கப்பட்டு வருவதை உணர்ந்தேன். மிகவும் வேதனையான சூழ்நிலையில் எனது குடும்பத்துக்கு பாரமாக இருப்பதை உணர்ந்தேன் ஆனல் இப்போது புதிய தோர் உத்வேகத்துடன் உடல் தளர்ந்திருப்பினும் உள்ளம் தளராது எனது கருமங்களில் ஈடுபடுகிறேன். எனது இன்றைய உற்சாக நிலைக்குக் காரணமான இந்த ஜெய்ப்பூர் செயற்கைக் கால்திட்டம் வாழ்க! வளர்க! என வாழ்த்து கிறேன்.

நன்றி

ஜீவசக்தி ஐப்பசி — மார்கழி இதழ்

★

# வலது குறைந்தோருக்கு வாழ்வு

வலது குறைந்திருத்தல் அல்லது அங்கவீனனுயிருத்தல் எமது சமூகத்தில் அம்மனிதனின் வாழ்வில் ஒரு சாபக்கேடாகக் கருதப்படுகிறது. அவர்களும் மனிதர் என்று நோக்கப் படுவதில்லை. மாருக சமூகத்திற்கு வேண்டாத்தக்கதாகவே நினைக்கின்றனர். இவ்வாறான ஒரு நிலையில் தான் யாழ். அன்னையர் முன்னணி வலது குறைந்திருப்போருக்கு வாழ்வளிப் பதற்காக இந்த நிலையத்தை ஆரம்பித்தது.

வலது குறைந்தோருக்கு ஏற்படும் கஷ்டங்களை அனுபவத்தில் அறிந்தவன் நான், 1982ம் ஆண்டு மரத்திலிருந்து விழுந்ததினுல் என் கால்களில் ஒன்றை இழந்து கஷ்டப் பட்டேன். அந்தச் சமயத்தில் செல்வி. இராணி அந்தோனிப்பிள்ளை எமது நிலைக்கு மிகவும் அனுதாபப்பட்டு கொழும்பிலுள்ள செயற்கைக்கால் பொருத்தும் நிலையத்தில் எனக்கு கால் பொருத்த ஆவன செய்தார். அவரது நன்முயற்சியினுல் எனக்கு கால் பொருத்தப் பட்டதினுல் நான் மீண்டும் தன்னம்பிக்கையுடன் செயல்பட முடிந்தது. இன்று எமது சமூகத்தில் பல்வேறு காரணங்களினுல் எமது உறுப்புக்களை இழக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. அதனுல் உறுப்புக்களை முக்கியமாக கால்களை இழந்தவர்களுக்கு கொழும்புக்குச் சென்று பொருத்துவதற்கு ஏற்படும் கஷ்டங்களை சிந்தித்து அன்னையர் முன்னணியினர் இந்தச் சேவையைச் செய்ய ஆர்வம் கொண்டனர். அவர்களுக்கு நாம் என்றும் கடமைப்பட் டவர்கள். அவர்களது தன்னலமற்ற சேவைக்கு எமது நன்றிகள். இந்த நிறுவனத்தின் தலைவி, தேம்பா. குணநாயகம் மிகுந்த கவனமெடுத்து இந்த நிறுவனத்தை நடாத்தி வருகின்றார் அத்துடன் தொழிற்சாலை முகாமையாளர் திரு. X. S. Y. பிரான்சிஸ் அவர்கள் மிகவும் பொறுப்புணர்வுடன் தொழிற்சாலையை மேம்படுத்தும் நோக்குடன் செயல் படுகின்றார். மேலும் யாழ்ப்பாணம் வைத்தியாலையைச் சேர்ந்த வைத்தியர்கள் திருமதி. தெய்வேந்திரம், திருமதி. கணேஷமூர்த்தி ஆகியோரின் மனமுவந்த சேவைகள் மறக்கற் பாலன அல்ல. கணக்காளராக கடமையாற்றும் திரு. சிவநாதன் பொறுப்புணர்வுடன் எனக்கு அன்பையும் அனுபவத்தையும் பகிர்ந்தளிக்கிறார். அந்த வகையில் செயற்கைக்கால் பொருத்தப்பட்ட நானும் எனது நண்பனும் ( ஜோண்சன் ) இங்கு செயற்கைக்கால் உருவாக்கும் துறையில் பணியாற்றி வருகிறோம். அதனுல் இங்கு வந்து பலன் பெறும் பல அங்கவீனர்களைப் பார்த்து மிகவும் சந்தோஷமடைகிறோம். கடந்த 2 வருட காலத்தில் 237 நபர்கள் செயற்கைக்கால் பொருத்தப்பட்டு வெளியேறியுள்ளனர். இவ்வாருகப் பலன் பெற்ற நாம் எல்லோரும் யாரையும் கையேந்தாது வாழவே விரும்புகிறோம். இந் நிறுவனத்துக்கு சமூக நிறுவனங்கள், தொண்டர் ஸ்தாபனங்கள் உதவி செய்ய வேண்டும் அன்னையர் முன்னணியின் இத்தொண்டு வளர ஆவன செய்ய வேண்டும்.

நன்றி

ப. பரமகுமார்
தொழில் நுட்பவியலாளர்.

# ஜெய்ப்பூர் சாலையின் அரிய சேவையினால் எம் பாதங்கள் இம் மண்ணில் பதிகின்றன.

**"யாழினிது குழலினிது என்பர் தம் மக்கள்
மழலைச் சொற் கேளாதவர்"**

இம் மண்ணில் நாங்கள் எதுவித குறையுமின்றி முழுமையாய் பிறந்து வளர்ந்து வரும் வேளை எம் சொந்தக் கைகளாலும், கால்களாலும் தவழ்ந்து மகிழ்ந்தோம், சின்னஞ் சிறு பாதங்களால் ஓடி, ஆடி விளையாடினோம், எம் மழலைகளாலும் எங்கள் தந்தை, தாய்மாரை குறள் கூறியாங்கு மகிழவும் வைத்தோம். பின்னர் காலங்கள் உருண்டோடிக் கொண்டு வந்த வேளையில் எங்களின் விதிச்சமைய என்போற் பலரை எதிர்பாராதவகையில் சூழ்நிலை முடமாக்கியுள்ளது. நோயினால் காலிழந்தோர், எம் மண்ணில் அதிகரித்து வந்த அசம்பாவிதங்களினால் கை கால் இழந்தோர், விபத்துக்களினால் அங்கம் இழந்தோர் இப்படிப் பலரும் பல வகையில் முதியோர் தொடக்கம் சிறியோர் வரை வயது எல்லை இன்றி அசுங்கவீனர்களாக்கப்பட்டோம். நாம் திடமாக நிமிர்ந்து நிற்பதற்கு எமது முக்கிய மான உறுப்பு கால் என்பது எல்லோரும் அறிந்ததே, இம் முக்கிய உறுப்பான காலை இழந்த நிலையில் நாங்கள் இப்போது முடமாகி பரிதவிக்கும் நிலைக்குள்ளானோம். சிறு பராயத்தில் எங்களின் குறும்பைக் கண்டு மகிழ்வுற்ற தாய்மாரை இப்போ நாம் எம் அங்கத்தை இழந்த பரிதாப நிலையைப் பார்த்து கண் கலங்க வைத்துள்ளோம். நாங்களுமே நாள் பூராவும் கண்கலங்கும் நிலைக்குள்ளானோம். சமுதாயத்துடன் சேர்ந்து வாழும் வாய்ப்பை இழந்திருந்தோம். காலை இழந்த நாங்கள் எங்கள் வாழ்வையும் இழந்த நிலைக்குள்ளானோம். மக்கள் மத்தியில் முன் செல்வதற்கு வெட்கமடைந்திருந்தோம். பாடசாலையில் கல்வி கற்கும் அவ் வேளையில் மற்றைய மாணவர்களால் புறக்கணிக்கப்பட்டோம். விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குகொள்ள முடியாத நிலையில் கவலை அடைந்தோம், ஊன்று கோலே எங்கள் உறுதுணை என நம்பியிருந்தோம். சமூகத்தில் நாங்கள் செய்த தவது தான் என்ன எனக் கேட்கின்றோம்.

இவ்வாறான வேளையில் இன்றைய கால கட்டத்தில் எம் ஈழமக்களிற் பலருக்கும் இவ் அங்கமே முக்கியமான தொன்றாகும் என்பதனை கருத்திற் கொண்ட எங்கள் யாழ். அன்னையர் முன்னணியினர் ஒன்று சேர்ந்து இதற்கான ஆக்க பூர்வமான நடவடிக்கையில் ஈடுபட்டு இதனை செயல் வடிவில் உருவாக்கி எம் சொந்த மண்ணான யாழ் நகரிலே 1, 07. 1987-ல் ஜெய்ப்பூர் தொழிற்சாலையை இயங்க ஆரம்பித்து வைத்துள்ளார்கள். எனவே எங்கள் தலைவி திருமதி. குணநாயகம் அவர்களுக்கே என் நன்றியை முதற் கண் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். இத் தொழிலகம் என் போன்றோர்க்கெல்லாம் ஒரு வரப்பிரசாதமாய் அமைந்துள்ளது. இன்றை விஞ்ஞான உலகில் அங்கம் இழந்த எங்களின் குறையை பெரும்முயற்சியுடன் நிவர்த்திசெய்து வருவது இத்தொழிலகமாகும். ஊனமுற்ற எங்களை நொண்டி, முடம் எனப் பரிகாசம்செய்து சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்ட எம் மவர்க்கு இவ் ஜெய்ப்பூர் தொழிலகம் ஓர் காமதேனுவாக அமைந்திருக்கிறது. என்பதனை யிட்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். நாங்கள் பல துறைகளையும், பல கலைகளையும் கற்பதற்கு எமக்கு பல்கலைக்கழகம் அமைந்திருப்பதுபோல், பல கட்டங்களில் கால், கைகளை இழந்த என்போன்றோர்க்கு இத்தொழிலகம் பலதுறைகளிலும் முன்னேற்றமடைந்து வளர்ந்து வந்துள்ளமை ஓர் வரப்பிரசாதமாகும். கால்களை இழந்தவர்களுக்கு பல விதத்திலும் கால்களைப் பொருத்தியும், கைகளை இழந்தோர்க்கு கை கொடுத்துதவவும்

போலியோ நோயினால் கால்களின் செயல் இழந்தவர்களுக்கு கலிப்பர் வகையான கால்களைப் பொருத்தியும் ஊனமுற்ற எங்களுக்கு உதவி புரிந்தும், ஊக்கமளித்தும் வருகின்றனர். நினைத்தவற்றை நிறைவேற்றும் நிபுணர்களைத்தான் இறைவன் நியமித்துள்ளார் என எண்ணி நான் பெருமை அடைகின்றேன்.

கடந்த 82-ம் ஆண்டில் இவ் அனைத்தையும் பெறும்வாய்ப்பை இழந்த நான் இந்தியாவிலுள்ள ஜெய்ப்பூர் வைத்தியசாலைக்கு என் இழந்த காலை பொருத்துவதற்காக சென்றேன். பல சிரமத்தின் மத்தியிலும் நான் போக்குவரத்து செய்துள்ளேன். போகும் வழியிலுள்ள இடர்ப்பாடுகள், தங்குமிட வசதியின்மை முக்கியமாக மொழிப் பிரச்சனை. முதலில் நான் அங்கு காலைப் பொருத்தி நடந்த வேளை எனது காலில் நோ ஏற்பட்டது. சில இடங்களில் கால் இறுக்கமாக அண்டுவதுபோல் இருந்தும் இதனை எல்லாம் எடுத்துக் கூறமுடியாமல் மொழி எனக்குப் பெரும் இடையூறாக இருந்தது. இவ்வாறான இடர்ப்பாடுகள் எல்லாம் எம் எதிர்காலத்தில் ஏற்படாதிருக்க எமக்கு உறுதுணையாக எமது சொந்த நாட்டில், எம் யாழ். மண்ணில் உருவாக்கப்பட்ட எங்கள் ஜெய்ப்பூர்த் தொழிற்சாலையால் நாம் அனைவரும் பெரும் பாக்கியம்பெற்றுவிட்டோம். இத் தொழிலகத்தில் நான் (61) அறுபத்தியோராவது ஆளாக காலைப் பொருத்திக்கொண்டேன், மிக குறைந்த செலவுடனும், விரைவாகவும் திறமையாகவும், மிகு நுட்பமாகவும், மலர்ந்த முகத்துடனும் கடமையாற்றி வருகின்றனர். எங்கள் தொழில் நுட்பவியலாளர்களான ஜோன்ஸன், பரமகுமார் என்ற இரு அன்பர்களும் எங்கள் முகாமையாளரான திரு. பிரான்சிஸ் அவர்களும் தமது சிரமத்தையும் கருத்திற் கொள்ளாது இத்தொழிலகத்தை இன்னும் மேம்பட வளர்க்க வேண்டுமென்ற ஆர்வத்தால் இந்தியாவில் உள்ள ஜெய்ப்பூரிற்கே சென்று அங்கு இன்னும் பல தொழில் நுட்பங்களையும் கற்று வந்துள்ளார்.

எங்கள் ஜெய்ப்பூர் பாதம் பார்ப்பவர்களுக்கு உண்மையான அங்கம்போலவே தோற்றமளிக்கும். ஏனைய நாடுகளில் தயாரிக்கப்படும் கால்களுடன் ஒப்பிட்டு நோக்கும் போது எம் யாழ் நகரிலுள்ள ஜெய்ப்பூர்ச் செயற்கைக் காலே பாரம் குறைந்ததாகவும், நடப்பதற்கு மிக இலகுவாகவும் அமைந்த தொன்றாகும். எமது நாட்டு செயற்கைக் கால்களைக் பொருத்திக்கொண்ட நாங்கள் வேறு எவரின் உதவியுமின்றி உழவுத் தொழில் முதற் கொண்டு பல வகையான துறைகளையும் நாமாகவே செய்யக் கூடியதாய் உள்ளது. தண்ணீரிலும் பாவிக்கக் கூடியதாயுள்ளது. மேடு பள்ளம் எல்லாம் நடக்கவும் உதவியளிக்கின்றது. துவிச்சக்கர வண்டி ஓடவும், மரங்களில் ஏறும் ஆற்றல் உள்ளவர்களாகவும் சிலர் உள்ளனர். அத்துடன் எமது காலில் ஏற்படும் திருத்தங்களையும் உடனுக்குடன் திருத்துவதற்கு எமக்கு வசதியாய் அமைந்துள்ளது. நாங்கள் எத்தனைமுறை வந்தாலும் எம்மை ஆதரவாக அன்புடன் வரவேற்று எமது காலினை திருத்தஞ்செய்து தருவார்கள் இங்குள்ள எமது அன்பர்கள், இதுவும் எமக்கு கிடைத்துள்ள ஓர் அதிஷ்டமாகும். அநேகமாக நான் இங்கு வரும்வேளையில் என் போன்றவர்களைச் சந்திப்பேன். அவர்கள் வரும் போது ஊன்று கோலுடனும், சோகமயமான முகத்துடனும் வருவதைத்தான் என்னால் காணக்கூடியதாய் இருக்கின்றது. ஒரு கிழமை அவர்கள் இங்கு தங்கி நிற்கும்போது தங்கள் மனதில் உள்ள கவலையையும், காலிழந்த சோக வரலாறு போன்றவற்றையும் மற்றவர்களுக்கும் கூறி மன ஆறுதலடைவார்கள். பின் காலைப் பொருத்தி நடக்க ஆரம்பித்ததும் அவர்கள் மனதில் உள்ள மகிழ்ச்சியை முகத்தில் காணக்கூடியதாய் இருக்கும். அவர்கள் வீடு திரும்பும்போது தாமாகவே நடந்து செல்வதைக்கண்டு நானும் மகிழ்ச்சி அடைவேன். நான் ஐந்து வயதில் காலை இழந்ததினால் என் சொந்தக் கால்களால் நடந்த அனுபவத்தை என்னால் நினைவிற்கொள்ள முடியவில்லை. ஆதலினால் செயற்கைக் காலே

என் இயற்கைக் காலாக மாறியுள்ளது. இதேபோல் கால்களைப் பொருத்திய இளம் சமுதாயத்தினர் அனைவரையும் செயற்கைக் கால் என்ற பேதமின்றி இதுதான் எங்கள் சொந்தக் கால் என்ற மனப்பக்குவத்துடன் நடக்க கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே என் மனதின் எதிர்பார்ப்புக்களாகும். இத் தொழிலகம் வெளியே நின்று பார்ப்பவர்களுக்கு மட்டும் இது கால்களைப் பொருத்திக் கொள்ளும் ஜெய்ப்பூர்த் தொழிற்சாலை எனத் தோன்றலாம். ஆனால் இதற்குள் கால்களைப் பொருத்திக் கொண்ட அனைவர்க்கும் தம் இல்லம்போலவேதான் அமைந்துள்ளது. இப்படியாக என் போன்ற அங்கவீனர்களுக்கெல்லாம் மாபெரும் மகத்தான சேவையை ஆற்றிவரும் எங்கள் தலைவி திருமதி குணநாயகம் அவர்களுக்கும், முகாமையாளரான திரு. பிராசிஸ் அவர்களுக்கும், காரியதரிசி திரு. சிவானந்தன் அவர்களுக்கும் மற்றும் என் அன்புச் சகோதரி ராதிகா மற்றும் ஜோன்சன், பரமகுமார், மேற்றன் போன்ற இவர்களின் சேவை என்றும் என் மனதை விட்டகலா கல்லில் வரைந்த ஓவியம்போல் பதிந்துள்ளது.

இப்போது எம் சொந்த மண்ணான யாழ். நகரிலே எம் அன்னையர்களாலே உருவாக்கப்பட்டு எங்களை ஊக்குவித்துவந்த ஜெய்ப்பூர்ச் சாலை தனது இரண்டாம் ஆண்டு பூர்த்தியை அடைகின்றது. எனவே நாங்களும் எம் மண்ணில் எம் பாதங்களை பதிய வைக்கின்றோம் என்பதை நான் என் மனமார்ந்த நன்றியுடனும், மிக்க மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

செல்வி அ. இதயா

# முக்கிய அறிவித்தல்

1) செயற்கை கால் பொருத்துவதற்காக பணம்கோரி வரும் எந்த ஒரு நபருக்கும் பணம் கொடுத்து உதவ வேண்டாம். அந்நபரை எம்மிடம் நேரிலோ அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளச் செய்யவும்.

2) எம் ஜெய்ப்பூர் கால் பொருத்தும் திட்டத்தின் பிரகாரம், அங்கவீனர்களுக்கு கால் பொருத்தி, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதே முக்கிய அம்சமாகும்.

3) எமது ஜெய்ப்பூர் செயற்கைக்கால் முழங்காலுக்கு கீழ் அல்லது முழங்காலுக்கு மேல் என்றாலும் ரூபா 1000/- மட்டுமே அறவிடப்படுகிறது.

4) மூலப்பொருட்கள் சம்பள உயர்வுகள், நிர்வாகச் செலவுகள் உச்ச நிலையை அடைந்தாலும் செயற்கை காலின் பெறுமதி வேறுபடமாட்டாது.

5) வசதி உள்ளோரிடம் ரூபா 1000/- வசூலிக்கப்படுகிறது. வசதி குறைந்தோரிடம் இயன்றதை தயாள மனதுடன் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. வசதி அற்றோருக்கு இலவசமாகக் கொடுக்கப்படுகிறது.

6) செயற்கை அங்கம் பொருத்துவதற்கு உதவி செய்ய விரும்பினால் எவ்வளவு தொகையாயினும் காசோலை மூலமோ, பணமாகவோ எம் காரியாலயத்துக்கு கொடுத்து பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளவும்.

7) எமது திட்டத்தின் கீழ் செயற்கை அங்கம் பழுது பார்ப்பதும், துண்டிக்கப்பட்ட பாகத்தின் வளர்ச்சிக்கேற்றவாறு உருவாக்கிக் கொடுப்பதும் வழமை. பாகங்கள் புதிதாக மாற்றிக் கொடுக்கும் பொழுது அவற்றின் பெறுமதி மட்டுமே அறவிடப் படுகிறது. சில சந்தர்ப்பங்களில் வசதியற்றோருக்கு இனாமாகவும் கொடுக்கப் பட்டுள்ளது.

# ஜெய்ப்பூர் கால் பொருத்தப்பட்டோரின் மணிமொழிகள்

இப்போது எனது கால் இல்லையே என்றே கவலை இல்லாமல் மிகவும் சந்தோஷமாக உள்ளேன்.

ந. ரவரத்தினராசா
வவுனியா 17-3-88

சுருக்கமாக சொன்னால் இது ஒரு மகத்தான தெய்வீக சேவை நினைப்பது போல் இலகுவான குறைந்த செலவில் நடக்கின்ற காரியமல்ல. இது ஒரு தெய்வீக வரப்பிரசாதம்.

சு. இரத்தினசபாபதி
மட்டக்களப்பு. 25- 3 – 88

நான் மீண்டும் முன்பு போல் எனது கணவனையும் பிள்ளைகளையும் கவனிக்கக்கூடிய ஒரு குடும்பப் பெண்ணாகி விட்டேன்.

திருமதி கு. அன்னப்பிள்ளை
காங்கேசன்துறை. 1 - 4 - 88

எதிர்காலத்தில் புதிய வாழ்வு பெற ஜெய்ப்பூர் கால் பொருத்தும் நிலையத்தார் உதவியுள்ளார்கள். புதியபாதையை காட்டியதற்காக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

திருமதி லோ. யோகேஸ்வரன்
கரவெட்டி. 29 - 4 - 88

எனது இல்லாத காலை செய்து தந்து எனது வாழ்க்கையில் ஒளிவிளக்கு ஏற்றிய சிற்பிக்கு எனது மனமார்ந்த நன்றியை நான் மட்டும் அல்ல எனது குடும்பமே நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆ. மார்க்கண்டு
தெல்லிப்பளை. May 88

பட்டாம் பூச்சியாகத் திரியும் வயதில் சிறகிழந்த பறவைபோல் கிடக்கின்றேனே என்று கண்ணீர் விடாத நாளே கிடையாது. எனது அழிந்த கால் மண்ணோடு மண் ஆனது. ஆனால் அந்த மண்ணான காலை கொண்டு வந்து எனக்குப் பொருத்திய சிற்பக் கலைஞனுக்கு எனது வாழ் நாள் முழுவதும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். அவரின் சேவை ஆல் போல் தழைத்து அறுகு போல் வேர் ஊன்றவேண்டும் என்று ஆண்டவனை வேண்டிக் கொள்கின்றேன்.

சி. கோமலஸ்வரன்
தெல்லிப்பளை. May 88

படைக்கும் தொழில் கொண்ட பிரமன் தான் இத்தொழிற்சாலையில் இவ்வாறு போன உறுப்புக்களை படைத்துக் கொண்டே இருக்கிறானோ என்று எண்ணவேண்டிய நிலை ஏற்பட்டது. காரணம் அச்செயல்வீரரின் செய்கை பாராட்டக் கூடியதும் சரித்திரத்தில் ஓர் பொன் எழுத்துக்களால் பொறிக்க வேண்டிய ஓர் உத்தம புத்திரன் என்று நான் மட்டும் அல்ல இங்கு வந்த அனைவரும் பாராட்ட வேண்டும்.

க. மாணிக்கவாசகம்
தொண்டமானாறு 15 - 3 - 88

இந்த ஸ்தாபனம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு தன்னலமற்ற சேவையைப் புரியவேண்டுமென்று வாழ்த்துகின் றேன்.

**சி. கந்தையா**
தெல்லிப்பழை 31 - 7 - 87

வசதி படைத்தவர்களும் நலன் விரும்பிகளும் இந்த ஸ்தாபனத்திற்கு நவீனகருவிகளை அன்பளிப்புச் செய்துதவ வேண்டும் எனவேண்டிக் கொள்கிறேன்.

**செல்வி அருள்வதனி சிவபாதசுந்தரம்**
வல்வெட்டித்துறை. 7 - 1 - 88

மூன்று காலில் வந்த நான் இரண்டு கால்களில் கட்டவிழ்ந்த பறவை போல் சுதந்தி ரமாக செல்கின்றேன். இது என் வாழ்வில் மறந்திடமுடியாத ஒன்று.

**திரு ந. பரம்சோதி**
பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை 9 - 3 - 88

முதன் முதலாக நான் காலைப்போட்டு நடந்து பயின்று கொண்டிருக்கும்போது எனது மனைவியினதும் மகளினதும் முகத்தில் பிரகாசத்தையும் சந்தோசத்தையும் கண்டு மிகவும் சந்தோசப்பட்டேன்.

**திரு. ந. பத்மதேவா**
மானிப்பாய். 29 - 1 - 88

நீரிழிவு நோயினல் இடது காலில் அறுவைச் சிகிச்சைக்குள்ளாக்கப்பட்ட நான் யாழ்ப்பாணத்தில் ஓர் செயற்கைக்கால் நிறுவனம் இயங்குவதை அறிந்து அங்கு சென்றபோது செந்தாமரை மலர் போன்ற இனிய பண்பான கருணை வாய்ந்த பல அரிய முகங்கள் என்னை வரவேற்கக் கண்டு நான் வந்து இடம் நோயாளர் பிணி நீக் கும் சஞ்சீவி பர்வதமோ என்று மனம் அங்கலாய்த்தது. பல இன்னல்களின் மத்தி யில் வாழும் யாழ்ப்பாணமக்களுக்கு இப்படிப்பட்ட அரியதோர் அருமருந்து போன்ற நிறுவனம் இருப்பதை கண்ணுல் காணும் எவரும் இந்த எண்ணத்தைக் கொள்ளா மல் இருக்க இயலாது.

இந்நிறுவனத்தில் பணிபுரியும் எல்லோரும் நல்லவர்களாகவும் பிறர்க்குதவி பணிபுரிவதில் ஆர்வமுள்ளவர்களாகவும் இருப்பது அருமை. அவர்களின் அரும்பணிகளை கண்ணுரக் கண்டவர்கள் இது உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை என்பதை ஒப்புவர். யதார்த்தமாக நோக்கும்போது ஓர் எடுத்துக்காட்டையும் காணலாம். மரம் ஓரறிவு யிர் வேம்பின் எப்பகுதியும் கசப்புச் சுவையுடையது. ஆனல் சந்தண மரத்தோடு சேர்ந்த வேம்பும் சந்தனமரமாதல் கண்கூடு. ஓரறிவுயிராகிய மரமே சேர்க்கையால் தன் தன்மையை மாற்றும்போது ஆறறிவு மனிதன் தன் பண்புகளை மாற்றுவது விந்தையல்லவே.

இவ்வரும்பணியாற்றும் நிறுவனம் ஈராண்டு பூர்த்திவிழா கொண்டாடும் இவ் வேளை நிறுவப்பணி வளர்ந்து வளம் பெற்று வளம் பல படைத்து வாழ்க பல்லாண்டு வளர்க நும்பணி.

**திருமதி சரஸ்வதி முத்துலிங்கம்**
புன்னாலைக்கட்டுவன், 27-4- 89

# ஜெய்ப்பூர் செயற்கைப் பாதம் பொருத்தியவர்களின் கவனத்திற்கு.

செயற்கைப் பாதம் பொருத்தியவர்கள் நம்பிக்கை இழந்து, துன்பமுற்று செயலிழந்து இனிமேல் வாழ வேண்டியதில்லை. உங்களில் வறிய நிலையில் இருக்கும் ஐம்பது வயதிற்குக் குறைந்தவர்களுக்கும், குடும்பத்தவர்களுக்கும், நல்ல தேகாரோக்கியம் உடையவர்களுக்கும், சமூக சேவைகள் இலாகா புனர் வாழ்வு அளிக்க முன்வந்துள்ளது.

இத் திட்டத்தின் கீழ் நீங்கள் அதிக வருவாய் பெறக்கூடிய ஏதாவது ஒரு தொழிலை இந்த இலாகா தரும் பணத்துடன் ஆரம்பிக்கலாம். உதாரணமாக சில கைத்தொழில்களை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

சிறு வியாபாரம் செய்தல், பனையோலைப் பொருட்கள் செய்தல், துவிச்சக்கரவண்டி பழுது பார்த்தல், மரக்கறித் தோட்டம் செய்தல், ஊறுகாய் வற்றல் செய்தல், சுகாதார முறைப்படி பழரசங்கள் செய்தல். கைத்தறிப் பிடைவைகள் செய்தல் கோழி வளர்த்தல் ஆடு மாடு வளர்த்தல், தகரவேலை, மை பூசுதல், கூடை பின்னுதல், புத்தகம் கட்டுதல், கடதாசிப்பைகள் செய்தல், பழங்கள் விற்பனை செய்தல், சுவிப் டிக்கற்றுகள் விற்றல், அப்பளம் தயாரித்தல், கர்ப்பூர வில்லைகள் செய்தல்.

இவை போன்ற சுயதொழில்களில் ஏதாவதொன்றை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். கூட்டாகவும் செய்யலாம் ஆனால் செய்ய விரும்பும் தொழிலில் உங்களுக்கு தேர்ச்சியும், அனுபவமும் இருப்பது விரும்பத்தக்கது. குறிப்பிட்ட தொழிலில் பயிற்சி பெற விரும்பினல் நீங்கள் விரும்பிய ஒரு தொழிலகத்தில் பயிலுனராக இருக்கும் காலத்திற்கு நாளாந்த ஊதியம் கொடுக்க சமூக சேவைகள் இலாகாவில் திட்டமுண்டு.

தாமாகவே சுயதொழில் ஆரம்பிக்க விரும்பும் ஒருவருக்கு, அவர்களின் தொழிலுக் கேற்ப ரூபா 2500/-க்கு மேற்படாமல் கொடுத்துவ சமூக சேவைகள் இலாகா முன் வந்துள்ளது.

ஒரு தொழிலும் செய்ய முடியாதவர்கள் இவ் இலாகாவின் மாதாந்த பொதுசன உதவிக்கு உங்கள் பகுதி கிராம சேவை உத்தயோகத்தர் மூலமாக உதவி அரசாங்க அதிபருக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டு காலக் கிரமத்தில் பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை கிராமசேவை உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்புத்துறை, கடற்கரை வீதியில் வசிக்கும் திரு. நாகமணி சந்திரன் என்பவர் புகையிரத விபத்தில் சிக்கி இரு கால்களையும் இழந்துள்ளார். இவருக்கு செயற்கைப் பாதங் கள் பொருத்தப்பட்டுள்ளது. சுய தொழிலாக துவிச்சக்கரவண்டிகள் பழுது பார்த்து வரு கின்றார். புனர்வாழ்வுக்காக ரூபா 2500/- பெருமதியான உதிரிப்பாகங்களையும், பழுது பார்க் கும் இயந்திரங்களையும் சமூக சேவைகள் இலாகா அளித்துள்ளது. இவர் தனிநபராயிருந் தாலும் தனது வருவாயில் சகோதரங்களுக்கும் உதவி வருகின்றார்.

தனிப்பட்ட முறையிலும் அங்கவீனருக்கு எங்கள் நாட்டிலும் பிற நாட்டிலிருந்தும் உதவிகள் கிடைக்கின்றன. சென்ற வருடம் கண்ணிவெடி விபத்தில் சிக்கி தனது வலது காலில் காயமேற்பட்டு மாற்று முடியாத நிலையில் கால் துண்டிக்கப்பட்டு வைத்தியசாலை யில் இருந்து வெளியேறிய பொன்னுச்சாமி குமார் என்பவருக்கு அவுஸ்திரேலியாவிலிருக்கும்

ஒரு பெண்மணி மனமுவந்து அன்பளிப்பாக ரூபா 500 புனர் வாழ்விற்காக கொடுத்துள் ளார். தற்போது இவருக்கு செயற்கைப் பாதமும் பொருத்தப்பட்டுள்ளது, இந்த உதவியைச் கொண்டு அவர் கடதாசியுறைகள் செய்து விற்க ஆரம்பித்துள்ளார். இதை வணிகர்கள் வாங்கி அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பார்களென நினைக்கின்றேன். மேலும் இங்கு உள்ள அங்கவீனருக்கு உதவிகள் புரிய கடல்கடந்த நாடுகளில் உள்ளவர்கள் முன்வருவார்க ளென நம்புகின்றேன்.

**இனி இத்தகைய உதவியைப்பெற நீங்கள் செய்ய வேண்டியவற்றைக் கீழே காண்க. செயற்கைப்பாதம் பொருத்தியவுடன், உங்களுக்குப் புனர்வாழ்வுத் திட்டத் தின் கீழ் உதவி வேண்டுமாகில் சமூக சேவைகள் உதவி அத்தியட்சகர், சமூக சேவைப் பகுதி, கச்சேரி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு ஒரு விண்ணப்பத்தை அனுப்பி வையுங்கள்.**

வைத்தியசாலையில் தந்த அத்தாட்சிப் பத்திரத்தில் போட்டோ பிரதியொன்றையும் இணைத்து அனுப்பவும்.

விண்ணப்பங்கள் கிடைத்தவுடன் உங்கள் பகுதி சமூக சேவைகள் உத்தியோகத்தர் உங்களுடன் தொடர்பு கொள்வார். தகுதி வாய்ந்தவர்களுடைய விண்ணப்பங்களும் அறிக் கைகளும் தலைமைக் காரியாலயத்திற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்படும். பதில் கிடைத்ததும் பணமாகவோ, பொருட்களாகவோ உங்களுக்கு உதவி வழங்கப்படும். தொடர்ந்து உங்களை சமூகசேவைகள் உத்தியோகத்தர் பார்வையிட்டு மாதாந்த அறிக்கைகள் அனுப்புவார்.

சீர்கேடுகள் காணப்பட்டால் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். கொடுத்த பணமும் மீள அறவிட ஆவன செய்யப்படும்.

இதை ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மனதில் வைத்துக் கொள்ளுதல் அவசியம். வளமான வாழ்க்கையை அமைத்து சிருஞ்சிறப்புடனும் வாழ வாரீர்.

உங்கள் எதிர்கால வாழ்க்கைக்கு நம்பிக்கை ஒளியூட்டவும், வளமாக்கவும் அயராது உழைக்க ஆவலுடன் காத்திருக்கிறோம்.

''மக்கள் சேவையே மகேசன் சேவை'

அ. இராமநாதன்
சிரேஷ்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர்,
யாழ் மாவட்டம்.

# சுயசார்பையும், சமத்துவத்தையும் நோக்கி புனர்வாழ்வு

உலகில், 300 மில்லியனிலிருந்து 400 மில்லியன் வரை அங்கவீனர்கள் இருக்கின்றார்கள், என மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் உலக சனத்தொகையில் 8 முதல் 10 சத விதமானோராவர் அங்கவீனர்களில் 80 வீதமானவர்கள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வசிப்பதுடன் 70 முதல் 80 வீதமானோர் கிராமப்புறங்களில் வசிக்கின்றார்கள். அங்கவீன முற்றிருப்பது ஒரு பெரும் வைத்திய, சமூக, பொருளாதார, உளரீதியான பிரச்சினையாக இருக்கின்றது. இப் பெரும் பிரச்சினை காரணமாக சென்ற தசாப்த காலத்தில் அங்கவீனர்களின் பராமரிப்பில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. நீண்டகால பாதிப்பு நிரந்தர அங்கவீனம் என்ற பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிகிச்சை முறையையும் புனர்வாழ்வை செயல்படுத்துவதற்கான பிரயத்தனங்களையும் இணைப்பது புதிய அணுகுமுறையாகும்.

புனர்வாழ்வு என்றால் வீட்டிலும், சமூகத்தில், அங்கவீனமுற்றவர் சிறந்த முறையில் வழமையாக செயல்பட உதவுவது அல்லது பழைய ஆற்றலை அடைவதாகும். ஊனமுற்றவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்களது சமூகத்தில் சம சந்தர்ப்பத்தையும், சமபங்களிப்பையும் ஏற்படுத்துவதற்கு பலநாடுகளில் புனர்வாழ்வு ஊழியர்கள், அங்கவீனமுற்றவர்கள், அவர்களது குடும்பங்கள் சில சந்தர்ப்பங்களில் சமூகமும் தொண்டர் ஸ்தாபனங்களும் அரச உதவியுடன் ஒருமுகப்படுத்தப்பட்ட பிரயத்தனங்களை செய்துள்ளன. இதில் முக்கியமாக முன்னணியிலுள்ள இரண்டு ஸ்தாபனங்கள் விசேஷமாகக் குறிப்பிடப்படவேண்டும். அவையாவன புரோஜிமோ (PROJIMO) — கிராமப்புற மெக்சிக்கோ என்பது — மெக்சிக்கோவின் மேற்குப்புறத்திலுள்ள ஒரு கிராமியப் புனர்வாழ்வுத்திட்ட வேலையாகும். அங்கவீனமுற்ற சிறுவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் சேவை செய்வதற்கு அங்கவீனமுற்ற கிராம வாசிகளால் நடத்தப்படுகின்றது. அங்கவீனமுற்றவர்களும் அவர்களது குடும்பங்களும் மேலும் மேலும் சுயசார்பாக இருப்பதற்கு உதவுவதே புரோஜிமாவின் இலட்சியமாகும்.

சியா - (SHIA) என்னும் சுவீடிஸ் ஸ்தாபனம் சகலதுறைகளிலிருந்தும் 250000 மேற்பட்ட அங்கவீனமுற்றவர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. இந்த ஸ்தாபனம் 13 வகையான அங்கவீனர்களைக் கொண்ட 13 அங்கவீனமுற்ற சிறுசிறு குழுக்களின் ஒரு பாதுகாப்பு தொண்டர் ஸ்தாபனமாக இந்த அமைப்பு செயல்படுகின்றது. அங்கவீனமுற்ற சமூகம் சமுதாயத்தில் சமமாகவும் பயன்தரக்கூடிய சுயசார்பாக நிகழக்கூடிய உறுப்பினர்களாக இருப்பதற்கு முழுமையான புனர்வாழ்வை ஏற்படுத்தும் தத்துவத்தில் நம்பிக்கை வைத்துள்ளது.

''வைத்தியர் இல்லாத இடத்தில்'' ''சுகாதார ஊழியர்களுக்கு உதவுதல் என்ற நூல் ஏற்கனவே ஆக்கியவரும் புரோஜிமோ வேலைத்திட்டத்தின் ஆலோசகருமாகிய திரு டேவிட்வேனர் ''அங்கவீனமுற்ற -கிராமப்புற கிராமப்புற சிறுவர்கள்'' என்ற நூலை சமூக சுகாதார ஊழியர்களுக்கும், புனர்வாழ்வு ஊழியர்களுக்கும் குடும்பங்களுக்கும் ஒரு வழிகாட்டியாக எழுதியுள்ளார். சேவையாளர்கள், சமூகம், அங்கவீனர்கள் ஆகியோர் இத்தகைய படைப்புக்களைச் சிறந்த முறையில் பயன்படுத்துவது அவர்களது தலையாய கடமையாகும்.

அங்கங்கள் துண்டிக்கப்பட்டவர்கள் அங்கவீனமுற்றவர்களின் ஒரு குழுவாகும். இலங்கையில் வடக்கு, கிழக்கில் ஏற்பட்ட யுத்தத்தால் கைகால்கள் அகற்றப்பட்டவர்களின்

எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வழமையாக இப்படி கைகால்கள் அகற்றப்படுபவர்கள் ஊன்று கோல்களைத் தஞ்சமாக அடைந்து தங்களை சமுதாயத்திலிருந்து தனிமைப்படுத்தி ஒருசுமையாக இருப்பார்கள். எப்படியிருப்பினும் இந்தியாவிலுள்ள ஜெய்ப்பூரைச் சேர்ந்த பேராசிரியர் பீ.கே. செத்தி (P.K.Sethi) அவர்களால் செயற்கை அவயவங்களை உருவாக்கியமை யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் ஜெய்ப்பூர் காலணி வேலைத்திட்டத்தை உருவாக்கியது. மிகவும் குறைந்த செலவில் நீர் ஊறுத ஸ்திரமான அவரது தேவைகளுக்கும் நடமாட்டத்திற்கும் போதுமான சக்தியையுடைய பயனை அங்கங்கள் துண்டிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவது ஒருவரப்பிரசாதமாக இருக்கின்றது,

இது இவர்களின் புனர்வாழ்வின் ஆரம்பமே ஆகும். அவர்களுக்கு செய்யவேண்டியவை மேலும் ஏராளமாக உண்டு, இப்படியாக புனர்வாழ்வு அளிக்கப்பட்ட ஒருவரைப் பற்றிய என் சொந்த அனுபவத்தை கூறவிரும்புகின்றேன். 1986ம் ஆண்டு மார்கழி மாதம் 6-ம் திகதி திருமதி சுவர்ணு பேர்டினன்ட் (திட்ட அதிகாரி கொழும்பு ஜெய்ப்பூர் கால் திட்டம்) திரு. என். லோகநாதன் (அங்கவீனமுற்று ஜெய்ப்பூர் காலணி பொருத்தப்பட்டவர், இவர் தற்போது தொழில் நுட்ப வல்லுனராக கொழும்பு ஜெய்ப்பூர் கால் திட்டத்தில் வேலை செய்கின்ருர்) ஆகியோர் என்னுடன் புகைவண்டியில் யாழ்ப்பாணம் வந்தனர். யாழ்ப்பாணத்தில் காலணி அமைக்கும் தொழிற்சாலை நிறுவுவதற்கு ஆலோசனை வழங்குவதற்காக இங்கு விஜயம் செய்தமை முதல் தடவையாகும். வவுனியா புகையிரத நிலையத்தை நாங்கள் அடைந்தபொழுது அங்கு யாழ்ப்பாணத்திற்கு செல்வதற்காக 600 பிரயாணிகள் ஏற்றிச் செல்வதற்கு நான்கு பஸ்கள் மாத்திரமே நின்றன. ஆகவே இதில் ஆசனங்கள் பிடிப்பதற்கு பேரவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தோம். வெளியே காத்துநின்ற பஸ்ஸைப்பிடிப்பதற்கு பிரயாணிகள் முண்டியடித்துக்கொண்டு ஓடினுர்கள். அவர்களில் அரைவாசிப்பேரே பஸ்ஸைப் பிடிக்க முடிந்தது. பஸ்ஸைப் பிடிக்கத் தவறியவர்களில் திருமதி பேர்டினன்டும் நானும் அடங்கியிருந்தோம். இந்த அமளிதுமளியில் திரு. லோகநாதனைத் தேடினோம். அதே நேரத்தில் இவர் பஸ்ஸினுள் ஒரு ஆசனத்தில் குதூகலமாக இருந்தது மாத்திரமன்றி வேறு ஆசனத்தை திருமதி பேடினன்ட்டிற்கு பிடித்து வைத்துக்கொண்டு இதற்காக ஓர் பிரயாணியுடன் வாக்குவாதப்பட்டுக் கொண்டிருந்தார். என்னுல் சாதிக்க முடியாத காரியத்தை அவர் சாதித்ததை என்னுல் நம்பமுடியவில்லை. புகைபிரதத்தில் வந்து வவுனியாவில் பஸ்பிடித்து அனுபவமுடையவர்களுக்கு என்னவென்றல் இந்த ''அங்கவீனமுற்றவர்'' சாதாரண மக்களிலும் பார்க்க சாதுர்யமாக நகர்ந்துகொண்டிருக்கிற புகையிரதத்திலிருந்து பாய்ந்து கேற்றுக்கூடாக ஓடிச்சென்று பஸ்ஸிற்குள் இடிபட்டுக் கொண்டு ஏறி தனக்கும் மற்றொரு நபருக்கும் ஆசனங்களைப் பிடித்தமை, அங்கவீனமுற்று இருப்பது ஒரு பலவீனமல்ல என்பதை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. திரு. லோகநாதன் தினமும் 8 கிலோ மீற்றர்கள் சைக்கிளில் சென்று கடுமையாக உழைத்துவிட்டு வீடு திரும்புகின்ருர் என்று தெரியவருகிறது. மேலும் இவர் இலங்கை ஜெய்ப்பூர் கை காலணி பாவிப்பவர்களின் சங்கத்தில் தீவிரமாக உழைக்கும் உறுப்பினராகவும் இருக்கின்ருர். இலங்கையில் புனர்வாழ்வு பெற வாய்ப்புக் கிடைத்த நூற்றுககணக்கானவர்களில் இவரும் ஒருவர், வெளிநாட்டுத் தொண்டர் ஸ்தாபனங்கள் எமக்கு நிதியுதவியையும், நிபுணத்துவ ஆலோசனைகளையும் வழங்கினுலும், உதவியைப் பெறுபவர்களும் சமூகமும் முடிவுகளை எடுப்பதிலும் அமுல்படுத்துவதிலும் பங்கு கொள்ளாவிடில் எந்த ஒரு வேலைத் திட்டத்தையும் பயன்விளைவிக்க கூடிய வகையில் செயல்படுத்த முடியாது. இதை பின்வரும் வழிகள் மூலம் திறமையாகச் சாதிக்கமுடியும்.

(அ) நமது பிரதேசங்களிலுள்ள அங்கவீனமுற்றவர்களை சமூகம் முதல் கண்டு பிடிக்க வேண்டும். பின் சிகிச்சையையும், புனர்வாழ்வையும் பெறுவதற்கு தகுந்த அதிகாரிகளை அணுகுவதற்கு அவர்களுக்கு வேண்டிய ஆலோசனை வழங்கல்.

(ஆ) அங்கவீனமுற்றிருப்பவர்களுக்கான சங்கத்தை மாவட்ட ரீதியில் அமைத்தல்.

(இ) அங்கவீனமுற்றிருப்பவர்களை சமுதாயத்தில் இரண்டறக் கலப்பதற்கு சமூகமானது வாய்ப்புக் கொடுப்பதற்கான எல்லா பிரயத்தனமும் செய்தல் வேண்டும்.

இத்தகையவர்களுக்கு பயன் விளைவிக்கக்கூடிய புனர்வாழ்வு மூலம் தன்னம்பிக்கையையும், சமத்துவத்தையும் ஏற்படுத்துவதற்கு வேண்டிய சொந்த மனோதிடத்தை விருத்திசெய்வதற்கு வேண்டிய ஆலோசனை வழங்குதல்.

(ஈ) மேசன் தொழில், மரவேலை, இரும்பு ஒட்டுவேலை, தோல் தொழில் நுட்பம் தும்புத் தொழில், கைக்கடிகாரம் பழுது பார்த்தல், இயந்திர நிபுணர், வானொலி பழுது பார்த்தல், தையல் வேலை, வர்ணம் தீட்டுதல். தட்டெழுத்து, சுருக்கெழுத்து போன்ற பல்வேறு துறைகளில் தொழில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தல்.

(உ) கோழி வளர்த்தல், கால்நடை வளர்த்தல், குடிசைக் கைத்தொழில், பெட்டிக் கடை மீன் மரக்கறி வியாபாரம் போன்ற சுய தொழில் திட்டங்களை வகுத்தல்.

(ஊ) இறுதியாக அங்கவீனமுற்றிருப்பவர்களுக்கு புனர்வாழ்வு அமைப்பதற்கான விழிப்புணர்ச்சியை சகல தரப்பினர் மத்தியிலும் ஏற்படுத்த வேண்டியது அதி முக்கிய விடயமாகும்.

யாழ்ப்பாண ஜெய்ப்பூர் காலணி தொழிற்கூடத்தைவிட்டு வெளியேறிய அங்கங்கள் துண்டிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அமைப்பதற்கு இரண்டாவது கட்டமாக அவர்களால் செய்வதற்காக கேள்விக்கொத்து தொடர் ஆய்வுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சமூகத்திலுள்ள ஏனையோரைப் போன்று அங்கவீனமுற்ற ஒவ்வொருவரும் தங்களுடைய ஆற்றலுக்கேற்ப சரிசமன் உரிமையைப் பெறுவதற்கு உரித்துடையவர்கள், இதுவே சமத்துவம். ஆகவே சுய - சார்பையும் சமத்துவத்தைபும் அடைவதற்கு அங்கவீனமுற்றவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு நாம் எல்லோரும் — சகல தொழில் பயிற்சி அளிக்கும் ஸ்தாபனங்களும் தொழில் அதிபர்களும் — ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

ச. சோதிராஜா
திட்ட இணைப்பதிகாரி
றெட்பான

100. இராசாவின்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

★ அல்பா ★

( சுத்தமான மரக்கறி எண்ணெய் )

இறக்குமதியாளரும்

**B. C. C. Lanka Ltd., J. L. M, Bata, Eveready Battery**

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்

## சி. சின்னத்துரை அன் பிறதர்

25, ஸ்ரான்லி றேட்,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல.
22703
22183

த. பெ. இல.
101

With the best Compliments
from

|
V

**Sunlight Laundry**

Kandy Road,
CHUNDIKULI,
JAFFNA.

With the best Compliments
from

|
V

**Bharath Traders**

GENERAL MERCHANTS
568, Hospital Road,
JAFFNA.

Estd: 1960 Tel. No; 32896

***Sound Engineers***

சவுண்ட் என்ஜினியர்ஸ்

400 (194), Hospital Road,
JAFFNA.

Agents for
SANYO, HITACHI & PHILIPS
PRODUCTS.

Dealers in:
AUDIO & VIDEO EQUIPMENTS
AND SPARE PARTS

Specialists in
AUDIO VIDEO REPAIRS AND
REWINDING OF
ALL KINDS OF TRANSFORMERS

With the best Compliments
from

|
V

**CHERRYLS**

436, 438, 440, MAIN STREET,
CHUNDIKULI,
JAFFNA.

ஜெய்ப்பூர் செயற்கைக்கால் திட்டத்திற்கு உதவி செய்யுமுகமாக
உங்கள் நன்கொடைகளை

ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலை
இல: 5, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி

என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

காசோலைகள் "கொழும்பு நட்புறவுச் சங்கம் - யாழ் கிளை"
"Colombo Friend in Need Society - Jaffna Branch"

என்ற பெயருக்கு எழுதப்படல் வேண்டும்.

**With the best Compliments**
**from**

**NORTHERN PHARMACY**

562, Hospital Road.
JAFFNA.

**With the best Compliments**
**from**

**MOHAMEDALLY ABDULALLY**

GRAND BAZAAR,
JAFFNA.
Telephone: 22515
292

Sole Agents for:

RINNAI
**GAS COOKERS**

Cook in Style with
RINNAI

Its a Joyful way of Cooking

WITH THE BEST COMLIMENTS FROM:

SOLE AGENTS FOR

# TUNGSRAM BULBS: CLEAR and DAYLIGHT BULBS

**Gestetner Products:**

- DUPLICATING MACHINES (Roneo Machine)
- PHOTOSTAT MACHINES
- TYPEWRITERS
- TYPING SHEETS
- DUPLICATING PAPERS
- DUPLICATING INK
- PHOTOSTAT PAPERS etc.

**Black and Decker English Tools:**

- ELECTRIC DRILLS
- ANGLE GRINDERS
- PLANERS
- SANDERS
- SPRAY GUNS etc.

**Frigen Gas:** Gas for Refrigerators and Air Condition Plants

## Samuel Sons, & Company Limited

**206, 208, Hospital Road,** **JAFFNA.**

அன்பளிப்பு:

# RATHGA JEWELLERS

JEWELLERY MERCHANTS

222, KASTHURIAR ROAD. JAFFNA.

## ராதிகா ஜுவல்லர்ஸ்

தங்க நகை வியாபாரம்

222, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தரமான கில்ட் ஆபரணங்களுக்கு

பவுண், வெள்ளி பூச்சு போடுவதற்கும்

தரம்வாய்ந்த பல நவீன வேலைப்பாடுகளைக் கொண்ட
கில்ட் ஆபரணங்களுக்கு நாடுங்கள்!

★ மன்சூர் ஜுவல்லர்ஸ் ★

194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

பல வருட அனுபவம் உள்ளவர்களால் தயாரிக்கப்படும்
காலத்துக்கேற்ற நவீன ஆடைகள்
வேண்டவோ, தைக்கவோ நாடுங்கள்!

● நியூ றெடிமேட்ஸ் ●

22, பெரியகடை, யாழ்ப்பாணம்.

---

எல்லாவிதமான பூட்டுக்கள் திருத்துவதற்கும்,

புதிய திறப்புக்கள் தயாரிப்பதற்கும் நாடுங்கள்!

பெரியகடை மரக்கறி சந்தைக்கு அருகாமையில் உள்ள

★ மக்பூல் பூட்டுத் திருத்தும் கடை ★

குறிப்பு: இம் மூன்று தொழிலக உரிமையாளர்; ஜெய்ப்பூர் கால் பாவனையாளர்கள், இவர்கள் முயற்சியை நாம் ஊக்குவிக்க வேண்டியது அவசியம்.

With the best Compliments from




# ANNA INDUSTRY (BRANCH)

**No. 4, Modern Market,**

**JAFFNA.**

WITH BEST COMPLIMENTS

FROM

**SINGHAM'S PHARMACY**

25, POWER HOUSE ROAD,

JAFFNA.

**PUSHPA TRADES**

"ESSENCE HOUSE"

IMPORTERS GENERAL MERCHANTS

Wholesale & Retail Dealers in

All Varieties of Essences

Colouring Matters,

Bakery Products & Greceries

11/4,A STANLEY ROAD,

JAFFNA.

Dial 24237

எங்களிடம்

காட்வெயர்ஸ் சம்பந்தமான

பொருட்களும் தொழில்நுட்ப உப

கரணங்களும் தச்சு வேலைக்கான

உபகரணங்களும்

பெற்றுக்கொள்ளலாம்.

**ஜோய் காட்வெயர் ஸ்ரோர்ஸ்**

214, கே. கே. எஸ். ரோட்,

யாழ்ப்பாணம்.

Asbestos Sheets

Wire Nails, Barbed Wire

Bulding Materials, Steel Cupboards

Four All Your Requirements

PLEASE CONTACT

**MASCONS LTD.**

35, Stanley Road,

Jaffna.

விதவைகளுக்கு உதவும் முகமாக

**அன்னையர் முன்னணியினரால்**

தயாரிக்கப்பட்ட

# கைக்குத்தரிசி மா

எவரும் வாங்கிப் பாவியுங்கள்.

**சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும் தயாரிக்கப்பட்டு பக்கெட்டுக்களில் இட்டு சகாய விலையில் கிடைக்கும்.**

எமது மொத்த வியாபாரிகள்

1. **பனம் பொருள் அபிவிருத்தி விற்பனை நிலையங்கள். 'கற்பகம்'** (யாழ். - கொழும்பு)
2. **ரவீந்திராஸ் சின்னக்கடை**

(போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்.)

இல. 3, றக்கா ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

WITH THE BEST COMPLIMENTS
FROM

# MERCHANT FINANCE LTD.

NAVALAR ROAD,
JAFFNA.

எம்மிடம்: ஸ்ரீ லங்கா அரச கூட்டுத்தாபனம்
லங்கா மெடிக்கல் மருந்து வகைகளும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
ஏனைய மருந்து வகைகளும் பிள்ளைகளுக்குத் தேவையான
பால்மா வகைகளும் கால்நடை மருந்துகளும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**ARVEGIE MEDICALS**
504, HOSPITAL ROAD,
JAFFNA.
T. P. No. 24305
TELE: ARVEGIE

**ஆர்விஜி மெடிக்கல்ஸ்**
504, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 24305
தந்தி: ஆர்விஜி

மகிழ்ச்சியோடு வாழும் மக்கள் சில
மனமொடிந்து வாழும் மாந்தர் பல
உணவின்றித் தவிக்கும் உயிர்கள் சில
ஊனமுற்று உருகும் உள்ளங்கள் பல

ஊனமுற்ருேர்க்கு ஊன்றுகோலாக
வாழ்விழந்தோர்க்கு வழிகாட்டியாக
உலகுக்கு ஒளி கொடுக்கும் கருவியாக
ஜெய்ப்பூர் நிலையம் திகழ வாழ்த்துகின்ருேம்.

★

யாழ். மறைமாவட்ட
மனித முன்னேற்ற நடுநிலையம்
அ. எண்: 2,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.
இலங்கை.

FRIEND IN NEED SOCIETY

ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலை • JAIPUR FOOT WORK SHOP •

இவர்கள் வாழ்வும் இனிதே அமைக

ஜெய்ப்பூர்

செயற்கைக்கால் திட்டம் நடாத்தும்

2-ம் ஆண்டு நிறைவு குறித்து

எமது

# இதயங்கனிந்த வாழ்த்துக்கள்

## ஸ்ரீ லக்ஷ்மி அச்சகம்

222, (76) ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

## சுவாமி விவேகானந்தருடைய கருத்துக்கள்

❋ என் மகனே உறுதியாக நில். பிறர் உதவியை எதிர்பாராதே! வேறு மனிதர்களின் உதவியைக் காட்டிலும் ஆண்டவனுடைய உதவி எவ்வளவோ பெரிதல்லவா? பரிசுத்தனாயிரு, பகவானை நம்பு, அவரை நம்பியுள்ளவரை நீர் நேர்வழியில் செல்கிறாய், உன்னை எதுவும் எதிர்த்து நிற்க முடியாது

❋ நம்பிக்கையை இழந்துவிடாதே, பாதை கத்திமுனையில் நடப்பது போல மிகவும் கடினமானதுதான். எனினும் எழுந்திரு, விழித்துக்கொள். மனம் தளராதே. நீ அடையவேண்டிய உனது இலட்சியமாகிய குறிக்கோளைக் கண்டுபிடி.

❋ உனது எதிர்காலத்தை நீயே உருவாக்கு! ஏற்கனவே நடந்து முடிந்ததைக் குறித்து வருந்தாதே, எல்லையற்ற எதிர்காலம் உன் முன்னால் பரந்து விரிந்திருக்கிறது, உன்னுடைய ஒவ்வொரு சொல்லும் சிந்தனையும் செயலும் அதற்கு ஏற்ற பலனைத்தரும் வகையில் உன் மனதில் இடம்பெறும் என்பதை எப்போதும் நீ நினைவில் வைக்கவேண்டும். உனது தீய எண்ணங்களும் செயல்களும் புலிகளைப் போல உன் மீது பாய்வதற்குத் தயாராக இருக்கின்றன. அதைப் போலவே உனது நல்ல எண்ணங்களும், செயல்களும் ஒரு நூறாயிரம் தேவதைகளின் ஆற்றலுடன் உன்னை எப்போதும் நிரந்தரமாகப் பாதுகாப்பதற்கு தயாராக இருக்கின்றன என்பதை மறந்துவிட வேண்டாம்.

❋ தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும்.

❋ மக்கள் உன்னைப் புகழ்ந்தாலும் சரி, இகழ்ந்தாலும் சரி அதிஷ்ட தேவதை உனக்கு அருள்புரியட்டும் அல்லது புரியாமல் போகட்டும். உன் உடல் இன்றைக்கே வீழ்ந்துபோகட்டும், ஆயினும் நீ உண்மையெனும் பாதையிலிருந்து அணுவளவேனும் பிறழ்ந்து செல்லாதே.

❋ கீழ்த்தரமான தந்திரங்களினால் இந்த உலகிலே மகத்தான காரியம் எதையும் சாதித்துவிட முடியாது.

❋ உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அவற்றைப் பெற்றிருப்பவர்களை நசுக்கக் கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ, மண்ணுலகிலோ எங்கும் கிடையாது. இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனை பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு.

❋ கவலைப்பட வேண்டாம்! பெரியமரத்தின் மீதுதான் புயற்காற்று மோதுகிறது, கிளறி விடுவதனால் நெருப்பு மேலும் நன்றாக எரிகிறது, தலையில் அடிபட்ட பாம்பு படமெடுக்கிறது என்று இப்படி எவ்வளவோ சொல்லிக் கொண்டே போகலாம்.

நெஞ்சு புண்பட்டு வேகும் போதும், துன்பப் புயல் நம்மைச் சுற்றி நாலா புறங்களிலும் வீசும் போதும், இனி வாழ்க்கையில் ஒளியையே காண முடியாதோ என்று தோன்றும்போதும், நம்பிக்கையும் துணிவும் கிட்டத்தட்ட அறவே நம்மைவிட்டு அகன்றுவிட்டபோதும் அப்படிப்பட்ட ஒரு பெரிய ஆன்மிகப் புயல் சூழ்ந்த நிலையின் நடுவில்தான் பிரம்மத்தினுடைய ஒளி நமது உள்ளத்தினுள் பிரகாசிக்கிறது.

❋ உலகமாகிய இந்த நரகத்தில் ஒருவனால் ஒரே ஒரு நாளைக்காகிலும் ஒரே ஒருவனுடைய இதயத்திற்கு சிறிது இன்பமும் மகிழ்ச்சியும் அளிக்க முடியுமானால் அந்த ஒன்றே ஒன்று மட்டும்தான் உண்மையுமாகும்.

ஸ்ரீ லக்ஷ்மி அச்சகம் 2 (76), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண